# மூன்றாவது மனிதன்

இதழ் 15

ஆகஸ்ட் - செப்டம்பர் 2002

## முதலுதவி

அடுத்த போரின் பின்
பாதுகாவலர்கள் மூவரும் வருவர்.
தம்மால் இயன்ற வரை
எல்லாவிடத்தும் உதவிகள் தருவர்.

ஒருவர்,
பசிமிகுந்த தமது கோபுரங்களைத்
தன்னிடம் நீட்டும் இடிபாடுகட்கு
உணர்வைக் கொண்டு வருவர்.

இரண்டாமவர்,
அதை முதலாமவர் இடிபாடுகட்கு ஊட்டும்படி
மீண்டும் முளைத்துச் சதைபோடுவதற்காகத்,
தான் சேகரித்த எலும்புகளை நடுவர்.
ஏனெனில்
சதையில்லாமல் மனோரதியம் இல்லை.

மூன்றாவது பாதுகாவலர்,
பற்றைகளினின்றும்
புற்களினின்றும் காகிதத்தினின்றும்
கூடுகள் கட்டுவர்
கற்களுக்கும் அவற்றின் குழந்தைகளுக்குமாக.

- Erich Fried

தமிழில் - சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்றாவது மனிதன் இதழும்,
புலம் பெயர் சிற்றிதழ்களும் நண்பர்களும்
இணைந்து நடாத்தும்

# ஈழத்து இலக்கியச் சந்திப்பு

## ஒக்டோபர் - 2002

இச்சந்திப்பில் பிரான்சிலிருந்து வெளிவரும்
'உயிர்நிழல்' சஞ்சிகையினால் -
மறைந்த எழுத்தாளர்
செ. கதிர்காமநாதன் அவர்கள் நினைவாக
'புலம் பெயராத தமிழ் பேசும்எழுத்தாளர்களிடையே'
நடாத்தப்பட்ட
பரிசுச் சிறுகதைப் போட்டியில்
தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளுக்கான
பரிசு வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

இவ் இலக்கியச் சந்திப்பை காத்திரமாகவும் விரிந்த
தளத்திலும் நடாத்த உத்தேசித்துள்ளோம்.
ஆர்வமுள்ளவர்களும், பங்களிப்பாற்ற விரும்புவோரும்
தங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுங்கள்.

ஆசிரியர்
மூன்றாவது மனிதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேர்காணல்**



உளநல வைத்தியர் என்ற ரீதியில் என்னுடைய பார்வை என்றும் யுத்தத்திற்கு எதிரானதே.

**- தயா சோமசுந்தரம்**




எந்தத் தாயுமே
தன் குழ[illegible]தையை புதை[illegible]
[illegible] முடியாது,
[illegible] முன்னரேயே
எந்த அழு[illegible]
இ[illegible]வாகப் போ[illegible]ருக்காது..
[illegible]க்கும் விடை கொடு கண்ணே,
உன்னைப் [illegible] முடியாத
உ[illegible]க்குள்
நானும் [illegible]றப்(பு)படுத்திருக்க முடியாது..
வருகிறேன் [illegible] கொடு.

**கே.சச்சிதானந்தன்**
**தமிழில்: ஜிப்ரான்**

**சிறுகதை:**

**சிவலிங்கம் சிவபாலன்**

**எஸ். நசீறுதீன்**



**கவிதை:**

**அமுதமொழியான்**

**கலா**

**ஆழியாள்**

**இளங்கோ**

**திருமாவளவன்**

**உமையஸ்கனி**

**உருத்திரா**

**கே.முனாஸ்**

**எஸ்.ஆறுமுகம்**

**இப்னஸ்ஜமீலா**

**த.அகிலன்**



**மொழிபெயர்ப்புக் கவிதை:**

**சி. சிவசேகரம்**

**மணி**

**எம்.கே.எம்.ஷகீப்**



**தான்தோன்றித் தனமான நியாயப்படுத்தல்களால் உண்மையை எப்போதும் மூடி மறைத்துவிட முடியாது.**

**-ஊசி அல்குசைபி**

**கட்டுரை:**

**சி.சிவதாஸ்**

**சிவகுமார்**

**வி.ரி.இளங்கோவன்**

**சூரியகுமாரி**

**மற்றும்...**

**வ.அ.இராசரெத்தினம், ஏ.இக்பால், நல்லபெருமாள், சுபா, அக்ரம், எஸ்.எல்.எம்.ஹனீபா, கே.பாஸ்கரன், இராகவன்**


இ[illegible]களுக்கு ஒருமுறை

இதழ் 15
(தனிச் சுற்றுக்காக மட்டும்)
ஓகஸ்ட் - செப்டெம்பர், 2002

தருகை : 75.00

ஆசிரியர்:
எம்.பௌசர்

தளக்கோலம் (Layout):
றஷ்மி

கணனி எழுத்தாக்கம்:
ப.மு.முஜீபுர் ரஹ்மான்



தொடர்புகளுக்கு:
Editor,
37/05, Vouxhall Lane,
Colombo-02
Sri Lanka.

T.P: 01-302759, 077-389127
E-Mail: 3man@sltnet.lk

காசுக்கட்டளை அனுப்புவோர்:
M.Fowzer,
Slave Island Post Office
எனக் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கருத்து

**கிழக்கில்** தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே நிலவி வந்த, வரும் மிக மோசமான அரசியல் முரண்பாடுகள் வன்முறை வடிவில் தீவிரமாக வெடிக்கத் தொடங்கிவிட்டது. இம் முரண்பாட்டு வெடிப்பின் உக்கிரத்தை வெறுமனே 'தீயசக்திகளின் ஊக்குவிப்புச் செயற்பாடாக'க் காட்டி காலத்தைக் கடத்தி விடுவதற்கான கடடத்தனமான அரசியல் செயற்பாடுகள் இரு சமூகங்களுக்குள்ளும் முன்னெடுக்கப்படுகிறது. கடந்த காலத்தின் அனுபவத்தினின்றும் நிகழ்கால காயங்களிலிருந்தும் நாம் அனைவரும் மூடி மறைக்க விரும்பும் உண்மைதான் என்ன?

சம காலத்தின் யதார்த்தத்தை காண மறுக்கும் தந்திரபாய அரசியல், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான சுதந்திர இருப்புக்கும் சுபிட்சத்திற்கும் எந்த வகையிலும் உதவப் போவதில்லை. வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் கடந்த 20 வருடத்திற்கும் மேற்பட்ட வாழ்நிலை அனுபவம் உணர்த்தி நிற்பதும் இதைத்தான். நமது பொது வாழ்நிலை அனுபவத்தினின்றும் பாடம் கற்றுக் கொள்ள மறுக்கின்ற தன்மை, நம்மில் பெரும்பாலானோர்க்கு எப்படி வந்தது?.

இக்கேள்வியும் உள்ளோட்டங்களும் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களிடையே சமத்துமான சமவாழ்வை வேண்டி நிற்கும் சக்திகளை நீண்டகாலமாய் அரித்து அரித்தே வருகிறது. தொடர் மௌனங்களும், மனச்சாட்சியின் சாவும் நீடிக்கிறது. இந்நிலை ஆரோக்கியமானதல்ல.

உடனடியாக மிக வெளிப்படையாக, குறிப்பாக கிழக்கில் உள்ள நிலைமைகளை நாம் விவாதித்தே ஆக வேண்டும். அதன் அரசியல் சமூகத் தன்மையினையும் தாற்பரியத்தையும் உணர மறுக்கின்ற மனோபாவத்தை மாற்ற வேண்டிய இறுதித் தருணம் இது.


வெறுமனே காலத்தைக் கடத்துவதால் பிணியை முற்றவைக்கவும் பிசாசுகள் நடமாடவுமே நமது வடக்கு கிழக்கு மண்ணை தயார் படுத்துகின்றோம் என்பதை நாமறியவில்லையா?. இந்த மோசமான நிலையிலிருந்து தமிழ், முஸ்லிம் மக்களை நாம் மீட்கப் போகின்றோமா அல்லது இம்மோசமான நிலையினை தொடர்ந்தும் ஊதி வளர்க்கப் போகின்றோமா என்பதை தமிழ், முஸ்லிம் மக்களிடையே உள்ள அரசியல், சமூக சக்திகள் மிக வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய கால கட்டத்தில் உள்ளனர்.

உடனடியாக செயற்பட வேண்டி இப்பாரிய கடமையிலிருந்து தங்களை விலக்கிப் பார்க்கும் மனோபாவத்தை, தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கும், சமூக சக்திகளுக்கும் மக்கள் ஒருபோதுமே வழங்கவில்லை.. மக்களின் விடுதலை என்பது இப்பொறுப்பினை மிகச் சரியாக, நீதியாக செய்வதில்தான் அர்த்தம் பெறும்.


- ஆசிரியர் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொய்யர்கள் நரகத்தில் அழுகுவார்கள்



நம்முடைய பாற்காரன் ஷேகு ஒரு பொய்யன்.
படு பொய்யன்.
அவனுடைய பொய்கள் அவனது பாலினளவு வெள்ளை
"பால் என்றுமே தூயதாக இல்லை. நீ தண்ணீர் ஊற்றுகிறாய்"
என்று தன்னுடைய வழமையான போலிக் கோபத்துடன்
நாளும் என் அம்மா சொல்லுவார்
"தண்ணீரா? கிடையவே கிடையாது!" என்று
ஷேகு அலட்சியமாகச் சொல்வான்.


அவனுடைய அப்பனுடைய வயிற்றிலும் பெரிய வயிறு அவனுக்கு.
அவன் காவுகிற ஆகப்பெரிய பால் வாளியிலும் அது கனமானது.
அவன் நடக்கும் போது
அலங்கோலமாகப் புனையப்பட்ட முடியையுடைய விரிந்த குடைபோல-
அவனுடைய தொப்புள் வானை நோக்காமல் நம்மை நோக்கும்

விடுமுறை நாட்களில்
நமது தெருவிலுள்ள பையன்கள் அவனைச் சூழ்ந்தபடி
"ஷேகு, உன் வயிற்றினுள் என்ன? இவ்வளவு பெரிதாக இருக்கிறதே"
என்று கேட்பார்கள்.
பசுஞ்சாணங் கமழும் உரத்த சிரிப்புடன்
"பால், அது நிறையப் பால்" என்பான் ஷேகு.
அவர்கள் இளையோராயினும் முட்டாள்களல்லவே.
அவன் சொன்னதை ஐயத்துடன் நம்பினார்கள்.

சில ஆண்டுகள் பின்பு சிறுவர்கள் வளர்ந்து இளைஞர்களானார்கள்.
ஷேகு சொன்னது பொய் என்பது போக
அவன் பொய்சொல்கிற பேச்சு வகையும் வேறு
என்றே உணர்ந்தார்கள்
எனவே அவன் வயிற்றில் துளையிட்டார்கள்
வெளியே வந்தது இரத்தம் மட்டுமே
பாலே இல்லை
பொய்யர்கள் நரகத்தில் அழுகுவார்கள்

•

(கடந்த 10 ஆண்டுகளாகக் கராச்சியில் வன்முறையால் செத்த அனைவர்க்கும் சமர்ப்பணம்)



Haris Khalique (1996)
தமிழில் சி.சிவசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோரமான போரும் விகாரமான விளைவுகளும்

எஸ்.சிவதாஸ்



ஆர்ப்பரிக்கும் கடலலையின் கரையோரம் விரிகிறது காலிமுகத்திடல். ஒரு கோடை வெயிலின் நெருடல் குளிரூட்டப்பட்ட ஐந்து நட்சத்திர விடுதியிலிருந்து நோக்கும்போது மிக இதமானதாகவே இருந்தது. மதிய உணவின் பின் ஒன்று கூடினர் ஆய்வாளர்கள். மகாநாட்டு மண்டபம் நிரம்பிற்று. உயர்தர மின்விளக்குகள், இருக்கைகள் என அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் மிக எளிமையாக உடையணிந்திருந்த ஒருவர் உரையை ஆரம்பிக்கிறார். எல்லோரது கண்களும் அவரை நோக்கின. அவர் வேறுயாருமல்ல. இலங்கையின் புகழ்பூத்த ஒரு மனநல மருத்துவர், பேராசிரியர் தயா சோமசுந்தரம். யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மனநல துறையின் தலைவராக இவர் கடமை ஆற்றி வருபவர். அவரது உரையின் தலைப்பு 'வடக்கில் போரினால் ஏற்பட்ட மனவடுக்கள்' என அமைந்திருந்ததால் மதிய உணவு தரும் கிறக்கத்தினையும் மறந்து சபை கூர்ந்து அவதானிக்க தொடங்கிற்று. கணணி மூலம் விரிவுபடுத்தப்பட்ட திரையில் பனைகள் வட்டுக்களை இழந்து கோரமாக காட்சிதரும் தென்மராட்சி நகர் ஒன்றின் புகைப்படம் விரிகிறது. எல்லோரும் விழிப்புடன் நோக்கினர். "இது பல்குழல் பீரங்கிகளின் கோரத்தாண்டவம், எறியப்பட்ட எறிகணைகளின்

போரின் உளவியல் பற்றியும் யுத்ததந்திர வழிமுறைகள் பற்றியும் பக்கம் பக்கமாக எழுதிவிட்டன பத்திரிகைகள். ஆனால் போரினால் ஏற்பட்ட உளத்தாக்கங்கள் பற்றி இவர்கள் யாருமே பெரிதாக அலட்டிக் கொள்ளாதது இங்கு பெரும் குறைபாடாகும். அதுமட்டுமல்ல இதுவொரு ஆரோக்கியமற்ற நிலையாகும். எனவேதான் போர் பற்றி ஒரு உளநல விமர்சனமாக இக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகிறது.




போர் உலகச் சூழலிற்கு புதிய தொன்றல்ல. பல்லாயிரம் போர்கள் மனிதகுலம் தொடங்கிய காலத்திலிருந்து இற்றைவரை இடம்பெற்றுள்ளன. பலதலைமுறைகள் போரினை சந்தித்துள்ளனர். ஆனால் போர் புரியப்படும் வழிமுறைகள் காலத்திற்குக் காலம் மாறுபட்டு, பலவழிகளில் புதிய பரிமாணத்தினை அடைந்துள்ளது.

சில நூற்றாண்டுக்கு முன் போர் வீரர்கள் மட்டும் குடியிருப்புகளற்ற பகுதிகளில் போர்புரிந்தனர். ஆனால் இன்று அவை கரந்தடிப்படைத் தாக்குதல்களாக குடியிருப்புகளுக்குள் நடைபெறும் போராக புதிய பரிமாணத்தை பெற்றுள்ளது. நாடுகளுக்கிடையிலான யுத்தமாக இருந்தது, இன்று சமூகங்களுக்கிடையிலான உள்நாட்டுப் போராக பரிணமித்துள்ளது. ஆகவே யுத்தத்தினால் பாதிக்கப்படுவோரின் தன்மையும் புதிய பரிணாமத்தை எட்டுவது தவிர்க்க முடியாததே.

எமது போர்ச்சூழல் மிகவும் உளவியல் ரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்த கூடியதாக வளர்ச்சியடைந்துள்ளது. எமது போர்ச்சூழலின் தனித்தன்மையினை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தோடு அதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய பரிகாரங்களையும் எமது சூழலிற்கேற்றவாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே யதார்த்தமான உளநலத்திட்டமிடலில் மிக முக்கியம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

யுத்தத்தில் ஏற்படும் மனநோய்கள் ஏதோ பாதுகாப்பு சூழலில் வாழும் மேற்குநாடுகளுக்கே பொருத்தமானது எனவும் கீழைத்தேய நாடுகளில் அத்தகைய தாக்கங்கள் ஏற்பட ஏதுநிலை இருப்பதாக தெரியவில்லை என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சுச் செறிவினை உங்களால் ஊகிக்க கூடியதாக இருக்கும்" என்றவர் அடுத்து 'கிருஷாந்தி புதைக்கப்பட்ட செம்மணிவெளி', உருக்குலைந்து போன சாவகச்சேரி நகரம் மற்றும் அரசினர் வைத்தியசாலை போன்றவற்றின் புகைப்படங்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட பிறநாட்டு அறிஞர்கள் கூடியிருந்த மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தார் பேராசிரியர். 'சகானய' எனப்படும் உளநலத் தன்னார்வத் தொண்டு (Sahanaya) நிறுவனம் தமது 20வது ஆண்டு நிறைவினை ஒட்டி நோர்வே அரசின் நிதியுதவியுடன் ஒழுங்கு செய்திருந்த உலக உளநல மற்றும் உளமருத்துவ கருத்தரங்கு கடந்த மாதம் தாஜ்சமுத்திரா விடுதியின் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் நெருக்கீட்டுக்கு பிற்பட்ட மனவடுநோய் (PTSD) பற்றியும் அதன் மிகத்தீவிரமான தன்மையுடன் வெளிப்படும் மனநோய்கள் பற்றியும் (Malignent PTSD/Complex PTSD) மிகவிரிவாக குறிப்பிட்டு சொல்கிறார். உளநல பாதிப்புகளை ஆய்வுத் தரவுகளுடன் மாநாடு மண்டபத்தில் முன்வைக்கிறார். அவரது பேச்சின் ஆளுமை, அவரது உரையை மிக ஆழமாக பதியச் செய்கிறது. அவரது உரையின் நிறைவாக ஒரு நிழல்படம் ஒன்று அந்தத் திரையில் விரிகிறது. பொட்டிட்ட ஒரு தமிழ்ச்சிறுமியின் புன்னகையுடன் கூடிய நிழற்படம் சிதைவுகளுக்கிடையில் அதில் அவள் நம்பிக்கையுடன் சிரிப்பதும் எம்மையெல்லாம் சிலிர்க்கச் செய்தது. உரையை அடுத்து ஒரு கணநேர நிசப்தத்தின் பின் சபை மீண்டும் சலசலத்தது, திடீரென எழுந்த பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த உளநல மருத்துவர் ஒருவர் அரங்கின் முன்னணிக்குச் சென்று சற்று ஆவேசமாக உரையாடத் தொடங்கினார். இலங்கையில் எல்லாச் சமூகத்தினரும் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர் என்றும் மக்கள் விடுதலை முன்னணி (JVP) வன்முறையின் போது தானும் பாதிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட பேராசிரியரின் கருத்துக்கள் ஏதோ வடக்கு கிழக்கில் மாத்திரமே இப்பிரச்சினைகள் இருப்பதாகவும், அவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதான தோற்றம்

மேற்கத்தேய கருத்தொன்று நிலவிற்று. ஆனால் தயா சோமசுந்தரம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இக்கருத்தினை மறுதலித்து கீழைத்தேய நாடுகளிலும் இத்தகைய தாக்கம் அவதானிக்கப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளது. இது உலகளவில் போர்ச்சூழலில் மனவடுக்கள் மற்றும் மனநலநோய்கள் ஏற்படுகின்றது என்ற கருத்திற்கு வலுச்சேர்த்துள்ளது.

மேற்குநாடுகளில் நடத்தப்பட்ட யுத்தத்தினால் ஏற்படும் உளவியல் பாதிப்புகள் பெரும்பாலும் இராணுவ வீரர்களிலே மேற்கொள்ளப்பட்டது, ஒரு யுத்த தயார்படுத்தலுக்கு உற்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் போராளிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தயார்படுத்தப்படாத நிலையில் அவற்றை எதிர்கொள்ளும் பொதுமக்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவானதே. ஆகவே அத்தகைய ஆய்வுகளை நாம் பொதுமைப்படுத்தி விட முடியாது. அதைப் போன்றே மேற்கு நாடுகளில் இடம்பெயர்ந்து சென்ற அகதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை குறிப்பிடலாம்.


அண்மையில் கீழைத்தேய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்களின் உளவியல் பாதிப்புக்கள் பற்றிய ஆய்வுகள் அதன் பாரதூரமான பரிமாணத்தை எடுத்துக் காட்டியுள்ளன. அதில் குறுகிய கால யுத்த நெருக்கடிகளுடன் ஒப்பிடும்போது மிக நீண்ட தொடர் நெருக்கீட்டுக்கு உட்படுபவர்கள் மிகப் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. ஆகவேதான் நாம் யுத்தத்திற்கு செலுத்திய மனநல மருத்துவ விலை (Psychiatic cost of war) எத்தகையது என்பது ஆராயப்பட வேண்டியதே. சில ஆய்வுகள் கருப்பைக்குள் இருக்கும் சிசுக்கள் கூட போர்ச்சூழலில் பாதிக்கப்படுவதாக கோடிட்டுக் காட்டியுள்ள நிலையில் இத்தகைய பாதிப்புக்களை புறக்கணிக்கப்பட முடியாதவைகளாக நாம் நோக்கவேண்டியுள்ளது.

அதைவிட போர் நிறுத்தப்பட்டுள்ள இன்றைய சூழலில் இடப்பெயர்வுகள் நிறைவுக்கு வந்து இழக்கப்பட்ட வீடுகள் புனரமைக்கப்பட்டு ஒரு பாதுகாப்பான சூழலில், இவ்வளவு காலமும் ஆழ்மனதில் புதைக்கப்பட்டிருந்த மனவடுக்கள் உளவியல் உபாதைகளாகவும் மனநோயாகவும் வெளிப்படக் கூடிய ஏது நிலை பெருமளவில் தெரிகிறது. இரண்டாம் உலகப் போரின் பின் பல நாடுகளில் தற்கொலை வீதம் பலமடங்கு அதிகரித்து சென்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய பாதிப்புக்கள் நேரம் குறிக்கப்பட்ட வெடிகுண்டு போல வெடிப்பதற்கு காத்திருக்கின்றனவா? என்பதே எம்முன் உள்ள அச்சம்தரும் செய்தியாகும். அவற்றை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்பதே எம்முன்னே உள்ள முக்கிய சவாலாகும்.

போரானது பல பரிமாணங்களை கொண்டது. அதன் அரசியல் நிலை மற்றும் சமூகத்தேவை என்பனவும் அதன் பரிமாணங்களாக உள்ள அதேநேரம் அவற்றினால் உண்டாகும் உளநல பாதிப்புக்கள் இன்னுமொரு பரிமாணமாக உள்ளது. போரானது எமது சூழலில் பெண்கள் தலைமைப்பண்பினைப் பெற்றுக் கொள்ளவும் சில சமூகத் தடைகளை உடைத்தெறியவும் மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் உதவியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே அதனைப்பற்றி முழுமையான விவாதமாக ஆராய்வது இங்கு எனது நோக்கமல்ல, அதேவேளை அதன் இன்னொரு பக்கமான உளநலப் பாதிப்புக்களின் தாக்கங்கள் என ஒரு புறக்கணிக்கப்பட முடியாத பாதிப்பு விளைந்துள்ளதை ஆராய்ந்துள்ளேன்.

போர் எமது சமூகத்தின் பல தளங்களில் பாதிப்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அனாதைக் குழந்தைகளின் விதவைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகதிகளின் எண்ணிக்கை நாளும் அதிகரித்து செல்கிறது. பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோரைப் பறிகொடுத் குழந்தைகள் என இருமுனைப் பாதிப்பில் நிற்கிறது சமூகம். கண்முன் உறவுகளை கோரமாக பறிகொடுத்து பிரமையில் வாடும் உறவுகள், தோண்டப்படும் புதைகுழிகளில் உறவுகளை அடையாளங்காண காத்திருக்கும் உறவுகள், பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்பட்டு மனச்சிதைவில் வாழும் பெண்களின் நிலைதான் எத்தகையது?

கோரமான போரினை எதிர்கொள்ளும் சமூகம் மெல்ல விகாரமுற்றுச் செல்வது இயல்பானதே. இரண்டு தசாப்தகாலமாக தொடரும் போரின் விளைவுகள் தரும் பரிமாணத்தை யாரும் புறக்கணிக்க முடியாது. இது நிராகரிக்கப்பட முடியாத யதார்த்தம். ஆகவே இத்தகைய பாதிப்பின் விளைவுகள் பற்றி ஒரு விழிப்புணர்ச்சி சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இது நமக்கு இந்த நெருக்கீடுகளை ஆரோக்கியமாக எதிர்கொள்ள முதற்படியாக அமையும்.

அண்மையில் கைதடி வயோதிபர் இல்லத்திற்கு சென்றிருந்த போது யுத்தத்தின் வடுக்கள் அங்கிருந்த கட்டிடங்களிலும் கூடியிருந்த மக்களிலும் காணக்கூடியதாக இருந்தது. 2000ம் ஆண்டு மே மாதமளவில் நடைபெற்ற போர்ச்சூழலில் அவர்கள் மிகப்பரிதாபமாக பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது. அங்கு வாழும் ஐம்பது வயதுமிக்க திருமணமாகாத மணியம் (பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது) அடிக்கடி இரவினில் கனவு கண்டு அலருவதாகவும் மிகப்பயங்கரமாக ஒப்பாரியிட்டு வியர்த்து எழுந்திருப்பதாகவும் அங்குள்ள பராமரிப்பாளர் ஒருவர் குறிப்பிட்டதைத் தொடர்ந்து நான் அவருடன் தனிமையில் உரையாடினேன். திடீரென விழுந்து வெடித்த எறிகணைகளில் பலர் பலியாகியதும் இன்னும் பலர் காயப்பட்டதும் அவரின் நினைவுகளில் மீண்டும் மீண்டும் வருகிறது எனக்குறிப்பிட்டார். இறந்தவர்கள் புதைக்கப்படாமலும், காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படாமலும் ஒரு வாரகாலம் அந்த நெருக்கடியின் மத்தியில் அவர் வாழ்ந்திருந்தமை அவரைப் பாதித்துள்ளது. அவரில் நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடு நோயின் அறிகுறிகள் பல தென்பட்டன. இப்படி இன்னும் பல வேறுவிதமான உளநலப்பாதிப்பினையும் காணக்கூடியதாகவிருந்தது. ஏதோவகையில் உறவுகளின்றி ஒரு தனிமைப்படுத்தப்பட்ட இல்லத்தில் வாழும் இவர்களின் சோகத்தினை பகிர்ந்து மனதில் சுமையுடன் மிதிவண்டியில் வீதியில் வரும்போது, இடம்பெயர்ந்தோர் வாழும் குடிசைகளின் முன்றலில் பல சிறார்கள் பெருத்த சத்தமிட்டு ஆரவாரமாக விளையாடிக் கொண்டிருந்தமை மனதில் உறுதியைத் தந்தது. மெல்ல அந்த காற்றினை எதிர்த்து மிதிக்கும் காலாக வலுப்பெற்றன. ஆம்.

'வட்டு' இழந்த வெளியில்
பனையிடை வளரும் வடலிகள்
முகிலிடை உயரும்
களைந்து எழும் சந்ததி
தொலைந்த வாழ்வைப் பெறும்.

பொறுத்தாக இவரது உரை அமைகிறது எனக் குமுறினார். இப்படிப்பட்ட கருத்துக்களை வெளிநாட்டு பிரதிநிதிகள் அப்படியே எடுத்துச் செல்லக்கூடிய அபாயம் இருப்பதாக அவர் விசனம் கொண்டார் இவரது கருத்தினை பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த அறிஞர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தமை என்னைப் பொறுத்தவரை வியப்பிற்குரியதாக அமைந்தது. அவரது எதிர்மறையான கருத்தாடல் பல வெளிநாட்டு பிரதிநிதிகளால் பின்னர் விமர்சிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. ஏதோ இவை இராணுவத்திற்கு எதிரான பிரச்சாரப் போரிற்கு பயன்படுவதாக சிலர் புலம்பினார். இதனை இன்னொருசாரார் தங்கள் போராட்டச் சூழலிற்கு ஆரோக்கியமற்ற கருத்துக்கள் எனவும், மக்களை திசைதிருப்ப இக் கருத்துக்கள் வழிவகுக்கலாம் எனவும் ஆதங்கப்படலாம். ஆனால் இவற்றையெல்லாம் கடந்து இத்தகைய எதிர்முனை வாதங்களிலிருந்தும் விடுபட்டு, யதார்த்தமாக நெருக்கீடுகளின் பாதிப்புக்களை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவே முயன்றுள்ளார் தயா சோமசுந்தரம்.

- எஸ். சிவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தொடர் நெருக்கீடுகளினால் உளப்பிறழ்வுற்றுச் செல்கிறது சமூகம்"

- டி. தயா சோமசுந்தரம்



மனநல வைத்தியர் *டி. தயா சோமசுந்தரம்,* ஒரு தசாப்தகாலத்திற்கும் மேலாக யாழ்பல்கலைக் கழகத்தின் உளநல மருத்துவத்துறையின் தலைவராக பணியாற்றிவருகிறார். போரினால் ஏற்படும் உளத்தாக்கங்கள் பற்றி பல சர்வதேச தரத்திலான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். இவரது முக்கிய நூல்களில் ஒன்றாகக் கருதப்படுவது 'மனவடு'. இவர் ஆரம்ப கல்வியை யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் உயர்கல்வியை பங்கொக்கிலும் இந்தியாவிலும் கற்றார். இவர் வைத்தியராக 80களில் கடமையாற்றத் தொடங்கினார். இப்போது வடக்கில் கடமையாற்றி வருகிறார்.

இவரை அண்மையில் அதே துறையில் கண்டி போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய கலாநிதி சி.சிவதாஸ் நேர்கண்டார்.

**▸▸ தொடரும் போர்ச்சூழலில் எமது சமூகம் எவ்வகையில் பாதிக்கப்பட்டுள்ளது. பௌதீக அடிப்படை பாதிப்பினைவிட உளவியல் ரீதியாக எத்தகைய பாதிப்புக்குள்ளாக்கப் பட்டுள்ளது?**

யுத்தம் என்னும் கொடிய அரக்கனின் கரங்கள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பெரும்பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. முக்கியமாக பெண்கள் முதுமைப்பருவத்தினர், குழந்தைப்பருவத்தினரைப் பெரிதும் பாதித்துள்ளது. ஒரு தனிமனிதன், குடும்பம், சமூகம் என பல்வேறு தரங்களில் பாதிப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இழப்புக்கள், இடம்பெயர்வுகள், உயிர் அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள், மரண அழிவுச்சூழல் என பல்வேறு வகையான தொடர் நெருக்கீடுகளுக்கு எமது சமூகம் முகம் கொடுத்துள்ளது. இத்தகைய நெருக்கீடுகள் சாதாரண மனித சமூகத்திற்கு அசாதாரணமானதே. மேற்குறிப்பிட்ட அதிதீவிர நெருக்கடிகளை ஒரு தொடராக எதிர்கொள்ளும் சமூகம் உளத்தாக்கங்களிற்கு உட்படுவது இயல்பானதே.

ஒரு நபர் இத்தகைய அதிதீவிர நெருக்கடிகளுக்கு உள்ளாகும்போது, நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடு நோய் (PTSD) மனச்சோர்வு நோய் (Depression) மற்றும் பதகளிப்பு (Anxiety) போன்ற மனநோய்களிற்கு உட்படுகிறார். அத்துடன் அவர் போதை மற்றும் மதுபானத்திற்கு அடிமையாவதும் (Substance abuse) அதிகமாகின்றது. இதைவிட சகநபர்களுடனான உறவாடல் மற்றும் பாலியல் உறவாடல் என்பனவற்றால் பெருமளவில் பாதிக்கப்பட்டுவருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஒரு சிலரில் மிகை மனவடுநோய் (Malignant PTSD) எனப்படும் தீவிரமான எளிதில் குணப்படுத்த முடியாத மனநோய்கள் அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட சமூகமே ஒட்டுமொத்தமாக உளத்தாக்கத்திற்கு உட்பட்டு சமூகவடு (Collective trauma) என்னும் உளத்தாக்க நிலையை அடைந்து வாழ்வினை இழந்து செல்கிறது.

**▸▸ சமூகவடு (Collective trauma) பற்றி விபரமாக குறிப்பிடமுடியுமா? அது எமது சமூகச் சூழலில் மட்டும் காணப்படுகிறதா? அல்லது பிறநாடுகளின் அனுபவங்கள் மூலம் பெறப்பட்டதா? இதை ஒரு உளநல நோயாக கருதுகிறீர்களா அல்லது சமூகவியல் விபரிப்பாக கொள்ளலாமா?**

சமூகவடு (Collective trauma) என்பது ஒரு புதிய விபரிப்பு எனக் கொள்ளலாம். நான் இரண்டு வருடங்கள் கம்போடியாவில் உளநல சிகிச்சை நிலையமொன்றில் வேலை செய்து கொண்டிருக்கும் போது அங்கும் இத்தகைய நிலையை அவதானித்துள்ளேன். எங்கள் சமூகத்திலும் அத்தகைய உளநல நெருக்கீட்டு நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக நாம் ஏழு வகையான உளப்பிறழ்வு நிலைகளை இந்த நிலையில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

நம்பிக்கையின்மை, சந்தேகம் கொள்ளல், விபரிக்கமுடியாத மௌனம், விழுமியங்கள் மதிப்பிழந்து போதல், தலைமைப்பண்பு இழத்தல், மற்றவரில் தங்கியிருத்தல், நீண்ட எதிர்கால இலக்கற்றிருத்தல்,

மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டதாக சமூகம் மாறும் பொழுது ஏற்படும் நிலையே சமூகவடுவெனக் குறிப்பிடுகிறோம். இது இனிவரும் காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனநோயாக உலகளவில் ஏற்றுக் கொள்ளப்படலாம். எமது சூழலில் நாம் போர்ச்சூழலுக்கு இரண்டு தசாப்தங்களாக முகம் கொடுக்கின்றோம். சமூகம் நேரடியாகவே போரினையும் அதன் தாக்கத்தினையும் எதிர்கொள்கிறது. எமது போர்ச்சூழல் மிகவும் சிக்கலானதாகவும் பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதாகவும் அமைந்துள்ளது. சமூகவடு என்பதை ஒரு மிகைப்படுத்தப்பட்ட வெறும் சமூகவியல் விபரிப்பாக மட்டும் கொள்ளமுடியாது. அது ஒரு அசாதாரண சூழலை நீண்ட காலத்திற்கு எதிர்கொள்ளும் சாதாரண சமூகத்தின் பிரதிபலிப்பாகும்.



▶▶ நீங்கள் முற்றுமுழுதாகவே யுத்தத்தினை நிராகரிக்கிறீர்களா?

சில இடதுசாரிகள் மற்றும் மார்க்சிய புரட்சியாளர்கள் யுத்தம் அல்லது புரட்சி என்பது சமூகமாற்றங்களிற்கு தேவையானதாக வாதிடலாம். ஆனால் உளநல வைத்தியர் என்ற ரீதியில் என்னுடைய பார்வை என்றும் யுத்தத்திற்கு எதிரானதே. யுத்தம் பல்வேறு வழிகளில் எமது சமூகத்தினை சிதைத்து கொண்டிருக்கிறது. அதை நான் எவ்வகையிலும் ஆதரிக்கமாட்டேன். என்னைப் பொருத்தவரையில் யுத்தம் என்பது ஒரு பேயின் ஆட்டமே.

மற்றும் போர்ச்சூழலால் உருவாக்கப்பட்ட உளப்பிறழ்வு தாக்கங்களை ஒரு யுத்தம் நிறுத்தப்பட்ட பாதுகாப்பான சூழ்நிலையிலே மறுசீரமைக்க முடியும் என்பது மிக யதார்த்தமானது.

▶▶ யுத்தம் நிறுத்தப்பட்டுள்ள இன்றைய சூழலில் (Post - Conflict Setting) மன நோய்கள் அதிகளவில் வெளிப்படுவதற்கான சந்தர்ப்பங்களின் ஏதுநிலை உள்ளதா? உங்களுடைய எதிர்வுகூறுகள் எத்தகையது?

ஆம் அத்தகைய சந்தர்ப்பங்கள் மிக அதிகளவில் உள்ளது. பல்வேறு நாடுகளில் இப்படிப்பட்ட சூழல்களில் மனநோய்கள் அதிகளவில் வெளிப்பட்டதற்கான ஆய்வுச்சான்றுகள் உள்ளன. அத்துடன் தற்கொலைகள், சமூக குற்றச் செயல்கள், போதைப் பொருட்களின் பாவனை என்பன பெரிதும் அதிகரித்து காணப்பட்டுள்ளது.

உளநல வைத்தியர் என்ற ரீதியில் என்னுடைய பார்வை என்றும் யுத்தத்திற்கு எதிரானதே. யுத்தம் பல்வேறு வழிகளில் எமது சமூகத்தினை சிதைத்து கொண்டிருக்கிறது. அதை நான் எவ்வகையிலும் ஆதரிக்கமாட்டேன். என்னைப் பொறுத்தவரையில் யுத்தம் என்பது ஒரு பேயின் ஆட்டமே.

இன்றைய சூழலில் தற்பொழுது வன்னியில் இருந்து பெருமளவு மனநோயாளர்கள் எமது ஆஸ்பத்திரிக்கு வருவது அதிகரித்துள்ளது. இச்சம்பவம் இதனையே கோடிட்டுகாட்டி நிற்கிறது. சரியான ஆய்வுகளை நடத்தினால் மாத்திரமே விஞ்ஞானபூர்வமாக ஒரு முடிவிற்கு வரமுடியும். யுத்த நெருக்கடியில் மக்கள் ஏதோ ஒரு வகையில் தம்மை தயார்படுத்தலில் ஈடுபடுத்திக்கொண்டிருப்பதும் அதன் பின்னான நிலையில் அத்தகைய தயார்படுத்தலில் இருந்து விடுபடும் சூழலில் உளநோய்களை வெளிக்காட்டப்படக்கூடும். அவர்களது உணவு, உறைவிட பிரச்சினைகள் தீர்ந்த ஒரு சூழலில் யுத்தத்தில் ஏற்பட்ட வடுக்கள் மனநோய்களாக வெளிப்படும் ஏதுநிலை இருக்கிறது.

▶▶ குழந்தைப் பருவத்தினர் எமது பிரதேசத்தில் போர்ச்சூழலில் எத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர் என்பதை விபரிக்க முடியுமா?

பொதுவாக பெரியவர்களிலும் பார்க்க குழந்தைகள் மீது நெருக்கீடுகளுக்குப் பின் உடனடித் தாக்கங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அவர்களின் ஆர்வம், துருவி ஆராயும் ஆவல், கபடமற்ற அப்பாவித்தன்மை, மற்றும் நிகழ்வுகளின் அர்த்தங்களையும், விளைவுகளையும் முழுவதுமாக புரிந்து கொள்ளாமை என்ற குணாதிசயங்கள் நெருக்கீடுகளை சுலபமாகவும் விளையாட்டுத்தன்மையோடும் எதிர்கொள்ள வாய்ப்பாக உள்ளது. முக்கியமாக பெற்றோர் பிள்ளைகளோடு கூட இருந்து அவர்களுக்கு ஆதரவளித்து முன்னுதாரணமாக நடந்தால் பிள்ளைகள் இலகுவாக நெருக்கீடுகளைச் சமாளிப்பர். ஆனால், பிள்ளைகள் பெற்றோரிலிருந்து பிரிந்து வாழ்ந்திருந்தால் அல்லது பெற்றோர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தால் பிள்ளைகளிலே பாரதூரமான விளைவுகளை எதிர்பார்க்கலாம். பெற்றோர்களின் உளப்பாதிப்புக்கள் பிள்ளைகளுக்கு சுலபமாக கடத்தப்படும்.

இடம்பெயர்ந்ததினால் வாழ்க்கையில் பிள்ளைகள் அனுபவிக்கும் புதிய சூழல் அவர்களுக்கு பலதரப்பட்ட தாக்கங்களைத் தரலாம். குறிப்பாக அவர்களின் உணர்ச்சிகளிலும், நடத்தைகளிலும் அசாதாரண மாற்றங்களையும் மனோ, சமூக விருத்தியிற் பின்னடைவுகளையும் காணலாம். இதைவிட பிள்ளைகள் போர்ச்சூழலில் எதிர்நோக்கும் பிறநெருக்கீடுகளும் அவர்களில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக போசாக்கின்மையும் வறுமையும், நோய்வாய்ப்பட்ட நிலை, இழப்புகள் மற்றும் உறவுகளைப் பிரிதல், இடப்பெயர்வு, வன்முறைக்குட்படல், கல்வியைத் தொடர முடியாமை போன்றவை அவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⏩ நெருக்கீடுகளினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளில் பிரதிபலிக்கும் அறிகுறிகள் எவை? நீங்கள் அவற்றை விபரமாக குறிப்பிடுவதன் மூலம் பெற்றோர்கள் அவற்றை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக அமையும் என்பதுடன் அவற்றிற்குரிய பரிகாரங்களையும் காண உதவியாக அமையுமல்லவா?

பிள்ளைகளின் உளப்பாதிப்புக்களை உணர்ச்சிப் பிரச்சினைகள், நடத்தைக் கோளாறுகள் என வகுக்கலாம். இத்துடன் அறிவாற்றல் குணபாகுபாடுகளையும் உடல்ரீதியான செயற்பாட்டு அறிகுறிகளையும் தொகுத்தல் நன்று.

பிள்ளைகளில் உண்டாகும் பிறழ்நிலைகளை உற்றுநோக்கும்போது அவர்களின் வயது, உடல்வளர்ச்சி, மனோ சமூகவிருத்தி, அறிவாற்றல் முதிர்ச்சி, குணம் போன்றவற்றினை கருத்தில் கொள்ளல் வேண்டும். ஏனெனில் பிள்ளைகளில் வயதிற்கும் விருத்திக்கும் ஏற்றவாறு அறிகுறிகள் அப்பருவத்தை அடிப்படையாக கொண்டு தோன்றுவதை அவதானிக்கலாம். மேலும் முன் அடைந்த நிலையில் இருந்தும் மாற்றம், பின்னடைவு போன்றவை மிகமுக்கியமான அறிகுறிகள்.

உதாரணமாக வளர்ந்த வாலிபப் பருவத்தில் திரும்பவும் குழந்தை பருவத்திற்குரிய நடத்தைகளை காணக்கூடியதாயிருத்தல். சிலர் திரும்பவும் பெற்றோரை கட்டிப்பற்றுதல், அவர்களுடன் சேர்ந்து உறங்கவே வற்புறுத்தல், அடம்பிடிக்கும் தன்மை என்பவை அடங்கும். தினமும் நித்திரையில் சலம் கழித்தலையும் குறிப்பிடலாம்.

மெய்பாட்டு அறிகுறிகளாக:- தலையிடி, தலைச்சுற்று, மயக்கம், நெஞ்சுநோ, படபடப்பு, சுவாசிக்க கஷ்டம், மூச்சுவாங்கல், வயிற்றுக்குத்து, சத்தி, பசியின்மை, சலம் அடிக்கடி போதல், களைப்பு, வயிற்றோட்டம், முட்டு, பெருமூச்சு என்பன அடங்கும். பிள்ளைகளின் நெருக்கடியின் தாக்கம், நித்திரைக் குழப்பமாகப் பிரதிபலிக்கலாம். அவர்களிற்கு பயங்கர கனவுகள் தோன்றலாம்.

உணர்ச்சிப் பிரச்சினைகளாக:- கவலை, பயம், அங்கலாய்ப்பு, குழப்பம், சோர்வு, அஞ்சி ஒதுங்கும் சுபாவம், இலகுவாக அழுகைக்கு உட்படுதல், கலகலப்பற்ற நிலை, எல்லைமீறிய கோபம், உறவாடலில் குறைபாடுகள், சந்தேகிக்கும் தன்மை போன்றவற்றை குறிப்பிடலாம்.

நடத்தை கோளாறுகளாக:- அளவு மீறிய தொழிற்பாடு, அதற்கு எதிர்மறையாக செயலாற்றுதல் குன்றுதல், குறும்பு, வலிந்து சண்டைக்கு போதல், வன்முறையில் ஈடுபடுதல், தொடர்ந்து தொல்லை கொடுத்தல், பொய்பேசுதல், களவு செய்தல், பெரியோரை எதிர்த்தல், கீழ்ப்படியாமை, பாடசாலைக்கு செல்லாமை, மதுப்பழக்கம், சமூக விரோத செயல் என இருக்கும்.

அறிவாற்றல் குறைபாடுகளாக:- அறிவாற்றல், கல்வி, பேச்சுதிறனில் பின்னடைவு, கற்றல் இடர்பாடுகள், சொன்ன சொல்லை தட்டுதல், பேசமுடியாமை, மறத்தல், கருத்துணர முடியாமை, ஞாபகசக்தி குறைதல், கிரகிக்கும் தன்மை குறைவு போன்றவைகளாக வெளிப்படும்.

⏩ நெருக்கீடுகளைத் தொடர்ந்து வரும் உளப்பிறழ்வுகளிலிருந்து விடுபடுவதற்குரிய முக்கிய காரணிகள் பற்றி குறிப்பிட முடியுமா? மற்றும் நீங்கள் இத்தகைய பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு எவ்வகையில் உதவுகிறீர்கள்?

பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கும் தனிநபர், குடும்ப சமுதாய மற்றும் மத அமைப்புக்களின் ஆதரவு என்பன தாக்கத்தின் கடுமையையும் அதிலிருந்து மீட்சிபெறுதலையும் தீர்மானிக்கும். குடும்ப கட்டமைப்பின் சிதைவு பாதிப்புகளுக்கு காரணமாக அமைகின்றது. ஒரு பாதுகாப்பான சூழல் உத்தரவாதப்படும் போது உளத்தாக்கங்கள் குறைவுற்று செல்கின்றன. ஆகவே தொடரும் போர்க்காலச் சூழலில் பாதிக்கப்பட்டவர்கள் பூரணமாக குணமடைவர் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர்மறையாக, ஓர் அமைதியான பாதுகாப்பு சூழலில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் பொழுது பாதிக்கப்பட்டவர்கள் சுலபமாக, சிகிச்சை இன்றி தாமாகவே குணமடைவர்.

கலாச்சாரக் சடங்குகள், மதவழிபாடுகள் என்பன மிகமுக்கியமாக நெருக்கீடுகளின் தாக்கத்தினை குறைக்கின்றன. போரைப்பற்றியும் அதில் பாதிப்படைவோரைப்பற்றியும் சமூகத்தில் நிலவும் மனப்பான்மை அவர்கள் நெருக்கீடுகளுக்கு இயைபாகும் தன்மையினையும் அவற்றின் தாக்கத்தில் இருந்து மீளும் வாய்ப்புக்களையும் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். உதாரணமாக அமெரிக்காவில் வியட்நாம் போரைப்பற்றி தோன்றிய வெறுப்பும் எதிர்ப்பும் தம்நாட்டிற்காகப் போர்புரிந்து திரும்பிய இராணுவ வீரர்களைப் பெரிதும் தாக்கின. அவர்களின் உளப்பாதிப்புகளுக்கு இத்தாக்கம் ஒரு முக்கிய காரணியாக கணிக்கப்பட்டது.

போர் ஓய்ந்து சமாதானம் நிலவும் காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட பல பகுதிகளும் சாதாரண சமூக வாழ்க்கைக்கு திரும்பும் போது அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு, அவர்களைப்பற்றிய சமூகமனப்பான்மை மேலும் அவர்களுக்கு வழங்கப்படும் சமூக அந்தஸ்து, பங்கு, வாய்ப்புக்கள் போன்றவை அவர்களின் நீண்டகால உளத்தாக்கங்களை நிர்ணயிக்கும்.

எமது செயற்பாடுகள் ஒரு குறிப்பிட்ட வரையறைகளுக்குள்ளே இடம் பெறுகின்றன. எமது பிரதேசங்கள் முழுவதிற்கும் விஸ்தரிக்கப்பட முடியாத நடைமுறை சாத்திய நெருக்கீடுகளை எதிர்நோக்குகின்றோம். நாம் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் தீவிர மனநோய்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் யாழ் பல்கலைக்கழக உளநலப்பிரிவினூடாக, யாழ் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவிலும் சாந்தியகம் என்னும் உளநல ஆலோசனை நிலையமூடாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறோம். சிலருக்கு பயிற்சி அளித்தும் வருகிறோம். பலரும் இனிமேல் இவற்றில் ஈடுபடக் கூடியதாக அமையும்.

⏩ நீங்கள் இந்த போர்ச்சூழலையும் அதன் தாக்கங்களையும் ஒரு எதிர்மறைக் கண்ணோட்டமாக மற்றும் அதிதீவிர விழிப்புடன் எதிர் கொள்வதாக கொள்ளமுடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கமாக பார்த்தால் வெளியே நடக்கும் போர் உள்ளே நடக்கும் மனமுரண்பாடுகளின் பிரதிபலிப்பே. எவ்வாறாயினும் இலட்சியத்திற்காகவோ, விடுதலைக்காகவே மக்கள் ஒன்று சேர்ந்து உறுதியாக நிற்கும் பொழுது சில தியாகங்களையும் உயிர்த்தியாகம் உட்பட கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடும். ஒரு போர் வெற்றிகரமாக நடந்து முடிந்ததும் மக்கள் மனவுறுதியுடன் தாங்கள் வென்றெடுத்த விடுதலையோ உரிமைகளையோ நடைமுறையில் செயல்படுத்தாவிட்டால் முக்கியமாக அவ்வாறு செயற்படுவதற்குத் தேவைப்படும் அறிவும் விழிப்புமுறையும் இல்லாமல் இருந்தால் போராட்டத்தின் பலன் கிட்டாமல் போகும் என்பது என் கருத்தாகும்.



**போர் ஓய்ந்து சமாதானம் நிலவும் காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட பல பகுதிகளும் சாதாரண சமூக வாழ்க்கைக்கு திரும்பும் போது அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு, அவர்களைப்பற்றிய சமூகமனப்பான்மை மேலும் அவர்களுக்கு வழங்கப்படும் சமூக அந்தஸ்து, பங்கு, வாய்ப்புக்கள் போன்றவை அவர்களின் நீண்டகால உளத்தாக்கங்களை நிர்ணயிக்கும்.**

**⏩ இப்படிப்பட்ட போர்ச்சூழலில் உங்களது செயற்பாடுகள் எவ்வகையில் அமைந்துள்ளது? நீங்களும் நெருக்கீடுகளினால் பாதிக்கப்படுவதாக உணரவில்லையா?**

நிச்சயமாக, இப்படியான சூழல் என்னையும் பெருமளவில் பாதிக்கத்தான் செய்கிறது, அதுவும் குறிப்பாக 95 இல் இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வு என் நடவடிக்கைகளை பெரிதும் பாதித்தது. அதன்பின்பு எனது தேவைகளும் அதிகரித்தது. பொருளாதாரத் தேவையின் நெருக்கடியை உணரத் தலைப்பட்டேன். அதனாலே நான் இரண்டு வருடங்கள் கம்போடியா சென்று கடமையாற்ற நிர்பந்திக்கப்பட்டேன். அந்த இரண்டு வருடங்களைத் தவிர்த்தால் ஒரு தசாப்தகாலமாக இங்கு உளவியல் மருத்துவத்துறையில் தலைவராக இருக்கிறேன். அதனூடாகவும் சாந்திகம் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம், மனநலசங்கம் ஊடாகவும் என்னால் செய்யக் கூடியதை செய்து கொண்டுதான் இருக்கிறேன். நெருக்கீடுகளில் இருந்து விடுபடல் என்பது தியான வழிமுறை மற்றும் யோகாசன முறைகளாலேயே சாத்தியப்படுகிறது. வாரத்தில் 3 தடவைகள் அல்லைப்பிட்டியில் உள்ள எனது ஓய்வு நிலையத்திற்கு சென்று கடலில் நீந்துகிறேன். அங்கு தியானம் மற்றும் ஓய்வு எடுத்தலில் ஈடுபடக் கூடியதாக உள்ளது. இனிவரும் காலங்களில் ஆத்மீக ரீதியான தேடலில் ஈடுபடுதலுடன் எனது குடும்பத்தினையும் கவனிக்க வேண்டியுள்ளது. ■

## நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுநோய்


## Post Traumatic stress Disorder - PTSD

சாதாரணமாக நாம் நெருக்கீடுகளை எதிர்நோக்கும் போது சில உளச்செயற்பாடுகள் மூலம் எதிர்கொள்கிறோம். உடலிலும் சிலமாற்றங்கள் ஏற்பட்டு மறைந்து விடுகின்றன. உதாரணமாக அதிகரிக்கும் நாடித்துடிப்பினை சொல்லலாம். ஆனால் ஒரு அசாதாரண நெருக்கீட்டினை எதிர்கொள்ளும் போது உடல் உளச் செயற்பாடுகள் நோயியல் வலுவூட்டம் பெற்று ஒரு உளநோயாக வெளிப்படுகிறது. அதிதீவிர நெருக்கீடுகளுக்கு உள்ளாகும் ஒருவர் (உதாரணமாக சித்திரவதை, பாலியல் வன்முறை) நெருக்கீட்டுக்கு பிற்பட்ட மனவடு நோய்க்கு உள்ளாகலாம்.

இத்தகைய நோயின் அறிகுறிகளாக நிகழ்வு பற்றிய நினைவுகள் மீண்டும் மீண்டும் தோன்றுதல், நிகழ்வினை ஒத்த நினைவில் வாழ்தல், மிகப்பயங்கரமான கனவுகளில் உறக்கம் கழிதல், சிறிய சத்தங்களுக்கு திடுக்கிடுதல், மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, நிகழ்வை ஞாபகப்படுத்தும் சம்பவங்களை தவிர்த்தல், உடலின் செயற்பாட்டுத் தன்மை இழந்ததாக உணர்தல், கோபம், குற்றவுணர்வு, பயம் போன்ற உணர்ச்சிகளால் பாதிக்கப்படல், முன்பு ஆர்வமாக ஈடுபாடு கொண்ட நடவடிக்கைகளை விடுதல் என்பன காணப்படலாம்.

இந்நோய் உடனடியாகவோ அல்லது சிலகாலங்களுக்கு பின்போ வெளிப்படாமல் சிலரில் பல ஆண்டுகள் கூட இந்நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நோய் முதன்முறையாக வியட்நாம் போரில் ஈடுபட்டு திரும்பிய அமெரிக்க வீரர்களில்தான் அறியப்பட்டது. அதன்பின் பல்வேறு போர்களிலும் இத்தகைய நோயின் வெளிப்பாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஒரு 'தொடர் நெருக்கீடுகளில் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படும் போது இந்நோயின் தாக்கம் மிக அதிகமாகவும் விகாரப்பட்டும் அவதானிக்கப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குஜ்ராத்

மலையாள மூலம்-
கே. சச்சிதானந்தன்


ஆங்கிலத்தில்-
அஜீர் குட்டி
தமிழில்-
ஜிப்ரான்

பங்குனி-2002

கவிதை - 01

உன் வருகை
இவ்வாறிருந்திருக்குமென்று நான்
நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.
உனக்கான ஒரு தாலாட்டோடும்,
என் கைகளாலே நெய்த ஆடையோடும்,
சில பூக்களோடும் காத்திருந்தேன்.
தலையில் மேகத்து வாசத்தோடும்
நெற்றியில் தேவதைகளின் முத்தத்தோடும்
நீ வரக் கனவு கண்டேன்.
உன் ஒவ்வொரு உதைப்பிலும்
கடவுளின் காலோசைகளைக்
கேட்டுக்கொண்டிருந்தேன்.
0
எல்லாம் திடீரென்றாற்போல் மாறிற்று,
அவர்கள்
கொடிகளோடும் தீப்பந்தங்களோடும் வந்தார்கள்,
வாள்களும் வேல்களும் அவர்களிடமிருந்தன,
என் கைகளையும் கால்களையும் அவர்கள்
கட்டிப் போட்டார்கள்.
மின்னிய கூராயுதத்தால்
நீயிருந்த என் கருவறையை
கிழித்து விரித்தார்கள்.
என் கண்ணே,
இப்போது நீ சொல்லு-
உன்னையவர்கள் தலைதிருகியிழுத்த போது
தொப்புள்கொடியை நன்கிறுக்கிப்
பிடித்திருந்தாயா?
பால்நிலவையும், அழகான ஆறுகளையும்
கனவாக வைத்திருந்த உன்
சின்னக் கண்களை
இறுக்கி மூடியிருந்தாயா கண்ணே?
கணன்றெரிந்த வீட்டினுள்

உன்னையவர்கள் எறிந்தபோது
தேவதைகளுக்கு மட்டுமே கேட்கிற
ஓசையால்,
உன் தாயுடன் விடைபெற்றாயா கண்ணே?
தங்க விரல்களால்
நெருப்புண்ணை வருடியதா கண்ணே?
சுவாலைத் தொட்டிலில்
காற்றுன்னைத் தாலாட்டி
கண்ணுறங்க வைத்ததா கண்ணே?
உலகத்தில் பிறக்க முன்னமேயே
வாழ்வின் நோவுகளையெல்லாம்
நொடிப்பொழுதே அனுபவித்தாயா கண்ணே?
0




எந்தத் தாயுமே
தன் குழந்தையை புதை நெருப்பில்
பிரசவித்திருக்க முடியாது,
கேட்கப்பட முன்னரேயே
எந்த அழுகையும்
இவ்வாறு சாம்பலாகிப் போயிருக்காது..
எனக்கும் விடை கொடு கண்ணே,
உன்னைப் பிரசவிக்க முடியாத
உலகுக்குள்
நானும் பிறப்பெடுத்திருக்க முடியாது..
வருகிறேன் விடைகொடு..
0

இந்தியத் தாய்களே,
இன்னொரு குழந்தையை யாருமே
(இப்படிப் ) பிரசவிக்கக்கூடாதென்று
பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்.


பதிவுகள் மற்றும் வாக்குமூலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவனியுங்கள்-
ஆண்கள் மட்டும்தான்
எப்போதுமே
பெண்களின் எதிரிகளல்ல..!

●



## கவிதை - 02: பெண்கள்


வீரப்பெருமிதங்களோடு ஆண்கள்
ஆளையாள் அடித்துச்
செத்துக் கொண்டிருந்தார்கள்.
எஞ்சியிருக்கிற பெண்களாவது
இந்த உலகைக் காப்பாற்றுவார்களென்று
நினைத்திருந்தேன் நேற்றுவரை..
இல்லையில்லை...
என் நினைப்புத் தப்பு!
தீப்பந்தங்களோடு வெறிபிடித்தலையும்
இளைய சகோதரர்களுக்கு
வீரத்திலகமிட்டு அனுப்பும் பெண்களையும்,
தயங்கிய மூத்தவர்களுக்கு
தங்க(ள்) வளையல்களை
அன்பளித்து அனுப்பும் பெண்களையும்,
மொட்டையடிக்க
முக்காட்டு நண்பிகளைத் தேடிச்செல்லும்
யுவதிகளையும்,
காயங்களில் மிளகாய்ப்பொடி தூவிய
பெண்களையும்,
கர்ப்பிணிகளை ஓங்கியுதைக்கும் பெண்களையும்
நான் பார்த்தேன்.
0

மீராவின் தம்புரா
இரத்த வெள்ளத்தில்
அடிபட்டுப் போனது.
கஸ்தூரிபாயின் நெசவுச் சக்கரம்
வீதிகள் தோறுமிருந்த
புதைநெருப்பில் உருகிப்போனது.
தாய்ப்பால்,
பெரும் அழிவுதரும் நெருப்பை
மூட்டுமென்றும்,
தாலாட்டு,
பெரும் நிலவதிர்வை ஏற்படுத்துமென்றும்
நான் நினைத்தே பார்த்ததில்லை.!

## கவிதை - 03: பாலம்

வதோத்ரா மாளிகைக்கருகேயிருக்கிற
ஆலமரமொன்றிலே வசிக்கிற குரங்கொன்று
வாலில் துணியொன்றைக் கட்டிக் கொண்டு
தன் மூதாதையரை நினைவு கூர்ந்தது.
பின்னர், கீழிறங்கி
கடைகளையும், வீடுகளையும்
தீயிட்டுக்கொளுத்தியது.
கொளுத்திவிட்டு,
"பெருமைபடச் சொல்லுங்கள்
நாங்கள் குரங்குகள்"
என்று முழங்கியது.

ஒன்றன் பின் ஒன்றாய்
ஏனைய குரங்குகள்
(இலங்காபுரிக்குப் பாலமமைத்த)
கற்களுடன் வந்தன.
வந்தவை
கோயிலொன்று கட்டத்தொடங்கின-
இம்முறை இராவணனுக்காக!



## கவிதை - 04: மாமிச உண்ணிகள்

நீண்டு வளர்ந்த தாடி,
திருநீறும், குங்குமமும் அப்பிய நெற்றி,
காவியாடை, கையிலொரு வேல்
உதடுகளில் ராமஜெயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பழக்கம்
பின்னர்தான் மாறியது!
இரவுணவுக்கு தீயில்கருகிய
குழந்தைகளும்,
தாகத்திற்கு இளைய ரத்தங்களும்
தாராளமாய்க் கிடைத்தன.
.. .. ... ..
இப்படி, இப்படியாகத்தான்
எங்கள் நகரங்கள்
காடுகளாக மாறின.
குகைகளின் இருட்டைப் போக்க
மனிதங்களை தீயாக்கினோம்.
தீயாக்கி,
மேலிய வாசத்தில்
வாயூறி நின்றோம்!

## கவிதை - 05: இலட்சினை

இது-
சொற்கள் எவ்வாறு
அர்த்தமிழந்து இலட்சினைகளாக
மாறின என்பது பற்றியது.

உதாரணத்திற்கு
'தாமரை'யை எடுப்போம்.
ஒரு சொல்லாக
எவ்வளவு அழகானதும்,
அப்பாவித்தனமானதுமாக
இருந்ததென்று நினைத்துப் பாருங்கள்.
அதுதான்,
லக்ஷ்மியையும், பிரம்மனையும்
சுமந்ததாகச் சொல்லிக் கொண்டோம்.
இந்திராவுக்கு அபயமளித்தது என்றோம்.
மழலை புத்தரின் கால்பட்ட
இடங்களிலெல்லாம்
முளைத்துக் கொண்டிருந்ததென்றோம்.
சூரியனை உசுப்பேற்படுத்தியது
அதன் வர்ணம்,
வண்டுகளைப் பாட வைத்தது
அதன் தேன்,
அன்றைய அர்த்தங்களையும்
இன்றைய மாற்றங்களையும் பாருங்கள்.
அழகிழந்து, சுவையிழந்து, அர்த்தமுமிழந்து
வேறொரு வடிவமாய் மாறியிருக்கிறது,-
மக்களைக் கொல்வதற்கான
ஒரு குறியீடாகவும் கூட!



## எம்.எச்.எம்.ஷம்ஸின் மறைவு இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு!

- ஏ.இக்பால்

சத்தியத்தைத் தரிசிக்கும் ஓர் எழுத்தாளன் போர்க் குணமுள்ளவனாக இருப்பான். அவதூறுகள் அவனை வந்தடையும். சில சமயங்களில் சமூகம் பிரதிஷ்டம் செய்துவிடும். இவற்றையெல்லாம் எழுத்தாளன் பெரிதுபடுத்தமாட்டான். ஷம்ஸுக்கு இவ்விதம் ஏற்பட்டபோதும் அவர் ஓர் ஆசிரியராக இருந்ததால் மக்கள் பாதுகாப்பிருந்தது. பாரதூரமான இருதய வியாதியினால் பீடிக்கப்பட்ட ஷம்ஸ் வைத்தியசாலை செல்லும்போது பாடசாலை மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டிக்கான விடயங்கள் பற்றிப் பேசியிருந்தனர். "நான் இப்போது வைத்தியசாலை செல்கிறேன். நாளை அங்கு வாருங்கள். செய்து தருகிறேன்" என்று கூறியிருக்கிறார். மக்கள் - மாணவர் தொடர்பு அவருடன் இறுதி நாள் வரை இணைந்திருந்தது.

பல்துறை இலக்கிய விற்பன்னரான ஷம்ஸ், 'பாஹிரா' 'நீள்கரை வெய்யோன்', 'வல்லையூர்ச் செல்வன்', 'இஸ்திராக்கி', 'அபூபாஹிம்', 'ஷானாஸ்', 'இப்னு ஹாசிம்', எனும் பெயர்களிலெல்லாம் எழுதியிருக்கிறார்.

யதார்த்த பூர்வமாக மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் எழுத்துக்களை நிறைய எழுதியவர். ஷம்ஸ் இலங்கை இலக்கியத் துறையில் - சிங்களம், தமிழ் இரண்டு மொழிகளிலும் ஈடுபாடுடையவர்.

இவர் இலங்கை இலக்கியத்தில் பல்துறை ஈடுபாடுடையவர் - ஆய்வுக்குரிய பெரும் படைப்பாளி. 15.07.2002 இரவு இவ்வுலகை நீத்த ஷம்ஸின் இழப்பு இலக்கிய உலகிற்கு மிகப் பேரிழப்பே! ■

---

'வெள்ளிச் சிறகடிக்கும் வெண்புறாவே..' பாடல் மூலம் மூலை முடுக்கெல்லாம் பிரபலமாகிவிட்ட எம்.எச்.எம்.ஷம்ஸ், கலை இலக்கிய உலகில் 1950 களின் பிற்பாதி முதலே பரிச்சயமானவர்.

புனைகதை, கவிதை, விமர்சனம், ஆய்வுக்கட்டுரை, சமயம், ஓவியம், இசை, புகைப்படக் கலை, பத்திரிகைத் துறை, என இவர் தடம் பதித்துள்ள தளங்கள் பல. ஷம்ஸின் படைப்புக்கள் இலட்சியவாதக் கனவுகளின் வார்ப்படங்களல்ல, சமூக சீர்திருத்தப் பள்ளிக் கூடங்களுமல்ல, யதார்த்த உலகின் சமுதாய அவலங்களை, அழுக்குகளைத் தரிசிக்கச் செய்யும் சாளரங்கள்.

பிரபுத்துவம், குருத்துவம், ஒடுக்குமுறை போன்றவற்றுக்கெதிரான அவரின் சத்தியாவேசப் பயணத்தில் சமூக நீதிக்கான சங்கநாத முழக்கம் பிரசார நெடியற்று கலைத்துவ மணத்துடன் ஓங்கி நிற்கும். மாலுட்டத்தின் நேசர்களுக்கு இவை மலர் மஞ்சம். மற்றவர்களுக்கு முட்படுக்கை. தனது சத்தியப் போராட்டக் களத்தில் இவர் ஏந்தியுள்ள 'கதாயுதம்' சக்தி வாய்ந்ததா? காலம் பதில் சொல்லும் - இப்படி ஷம்ஸின் கிராமத்துக் கனவுகள் நூலின் பின்னுரையில் ஜவாத் மரைக்கார் எழுதியிருந்தார். இன்று அக்கலைஞன் நம்மிடையே இல்லை. அவருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகள்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையின்றி
வண்டி வண்டியாய்
வன்னிக்கு சாமான் வருதாம்
என்றொரு குரல்
அவ்வளவுதான்

கிட்டிப்புள்ளும் கிளித்தட்டும்
விளையாடிய சிறார்கள் காதில் பட

வாயில் நுரையாய் எச்சில் தெறிக்க
சிறுவர்கள் கார்களாய் இரைந்தனர்.
நெஞ்சுக்கு நேரே நீட்டிய கைகள்
ஸ்ரேரிங்காய் சுழல
மனிதக்கார்கள் விரைந்தன வீதிக்கு

தெருவில் எதிர்பட்ட நாய், குருவி
எல்லாவற்றிற்கும்
கீ....கீ..... என வாய்க்கோன்கள் அலற
குச்சொழுங்கை
முடக்கும் கடந்து வளைந்து
வந்தன கார்கள் வீதிக்கு


வெல்லக்கட்டியை
சிற்றெறும்பு மொய்த்தாற்போல
இறாட்டை சூழும் தேனீக்கள் போல்
சந்தியில் சனக்கூட்டம்

எள் போட்டாலே
எண்ணெயாகும் நெரிசல்
அதனுள் சிறார்படை
தள்ளுண்டு நெருக்குண்டு
கால்களிடை தவழ்ந்து
புகுந்து முன்னேறிற்று

அங்கோர் வாகனம்
அது நிறைய புது சைக்கில்
அங்கே நிற்பாரெல்லாம்
அது பற்றியே பேச்சு
வடிவான மட்காட்
பளபளன்னு ரிம்மு
கிட்ட நெருங்கிய சிறார்படை
ஒவ்வொருவரும்
ஒவ்வொன்றை தொட்டுப் பேசினர்
ஆசையாய்...
"பெயின்ட் கொட்டிடுமடா ..."
வியாபாரியின் கத்தலை
காதில் வாங்காமல்...

கிரிங்... கிரிங்....
மணியை அடித்த
துடுக்கு சிறுவன் கேட்டான்
"என்ன விலை சைக்கில்?"
"ஒழுங்கா காற்சட்டைக்கு
வழியில்ல...
உனக்கேன் போடா?"
•

(15.01.2002 வன்னி பொருளாதாரத் தடை
தளர்த்தப்பட்டு, பொருட்கள் வந்தவேளை எழுதப்பட்டது)



- எஸ்.ஆறுமுகம்

## தடயமின்றி சாதல்பற்றிய கவிதை

நானும் நீயும்
காலச்சுவட்டின் கழிவுகளாய்...
அலைக்கழிந்து உயிர்வாழ்கிறோம்

எந்தக்கல்வெட்டாவது இறகுகள் தேடி
தீந்தைகள் பூசி
உன்னையும் என்னையும் பதிந்துவைத்திருக்கிறதா?

இறந்தகாலங்களிலிருந்து தப்பிவந்த
இலக்கியங்களிலாவது
நானும் நீயும் ஊசலாடுகிறோமா?

உலகக் கூரையின் நடைபாதைகளில்
திடீரென உன்மூச்சு வாங்கப்படமுன்பு
உன்பங்குகள் விற்கப்பட்டிருக்க வேண்டும்


கரைகடக்கும் மீனவனாய்
காலங்களை கடந்துசெல்கிறோம்
சுவடுகளில்லாம் இடைவெளிகளோடு

குந்தியிருந்து கீச்சிப்பறக்கும் குருவிகளாய்....
கூரைகளை ஈரப்படுத்தாத தூறல்களாய்....
தடயங்களில்லாமல் இறந்துபோவதற்காய்
வெட்கப்படு வெட்கப்படு வெட்கப்படு

- இப்னால்ஜமீலா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை



கொழும்பிலிருந்து கேசவனுக்குக் கடிதம் வந்திருந்தது. கேசவனின் தாயார் எழுதியிருந்தார். முன்னரைப் போலவல்ல அவருடைய எழுத்துக்கள். வயசாகிவிட்டது...., எழுத்துக்கும்தான். இருந்தாலும் கேசவனால் வாசிக்கக் கூடியதாகத்தானிருந்தது. ஊர்ப் புதினங்களுடன், வியாசனின் திருமணம் பற்றிய செய்திகளும், கூடவே அதுபற்றிய வர்ணனையும் வரிகளாகக் கலகலத்திருந்தது. வியாசன், பிரான்சுக்கு வந்து படிக்கத் தொடங்கி வேலை செய்யத் தொடங்கி..., மேலும் பலவற்றைச் செய்யத் தொடங்கி, இப்போது ஒரு மனிதனாகிவிடவேண்டுமென்ற எண்ணத்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு "தோழன்".

இந்த நாட்டுப் பிரசாஉரிமை கிடைத்ததும், ஒரு முறை ஊருக்குப் போய் யாவரையும் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற, சாதாரண மனித ஆசையின் நிமிர்த்தம் ஊருக்குப் போயிருக்கிறான். அவ்வளவுந்தான். இவன் ஊருக்குப் போகும்போது, அதே ஊரைச் சேர்ந்த பள்ளித் தோழன் கேசவன், அயலூர் நண்பர்கள் பார்த்தீபன், வரதன், மைக்கேல், லோகேசக்கா என்று ஏராளமானவர்கள் தத்தம் உறவினர், தாய்சகோதரம், என்று யாவரது சுகசெய்திகளையும் அறிந்து வரும்படியும், அவர்களது இன்றைய தோற்றங்களைப் படமெடுத்து வரும்படியும் வேண்டி, சிலசில கையடக்கப் "பார்சல்" களையும் கொடுத்து விட்டிருந்தனர். அந்தவகையில் கேசவனும் தன் தாயாருக்காகவென ஒரு சுடுதண்ணீர்ப் போத்தல் கொடுத்திருந்தான். இவ்விடமிருந்து வியாசன் புறப்படும் வரை யாருக்கும், தனக்கு ஒருவேளை..., திருமணம் நடந்தாலும் நடக்கலாமென்று சொல்லியதில்லை.

*

ஞாயிறு காலையாகிவிட்டால் எமது அறையில் புலம்பெயர் இலக்கியமும் அதை வளர்த்தெடுக்கும் முறையும் பற்றிய, அல்லது இன்றைய புலம்பெயர் இலக்கியத்தின் வளர்ச்சி தேர்ச்சி பற்றிய விவாதங்களுடன் பொழுது ஆரம்பிக்கும். பொதுவாக, இந்த அறையின் நிரந்தர அங்கத்தவர்கள் ஐந்து பேர்தான். இந்த ஐந்து தோழர்களுக்கும் ஏகப்பட்ட தோழர்கள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். அவர்கள் அவ்வப்போது இரா இருட்டியென்று பாராமல் வந்து கதவைத் தட்டுவார்கள். சிலதோழர்கள் காலையிலே இடத்தைக் காலி பண்ணிவிடுவார்கள். சிலர் இரண்டொருநாள் இல்லை..., கிழமைக் கணக்கில் இருந்து இருக்கும் தோழர்களின் இருப்பைக் காலிபண்ணிவிட்டுப் போவார்கள்.

யாவும் பலமாதிரியும் அவரவர் தேவைகருதி வருவார்கள் போவார்கள். உதவியாக இருப்பார்கள், உபத்திரமாக இருப்பார்கள்.

"யாவும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே..." என்று வரவையும் செலவையும், மனதுக்குள் திட்டித் தீர்த்துக் கொண்டே அந்த அறையின் நிரந்தர ஐந்து தோழர்களும் வருபவர்களை ஏற்றுக் கொள்வார்கள்.

மாதம் முடியத்தானே 'சமறி'. இருபது கிலோக்கள் கொண்ட இரண்டு மூட்டை புழுங்கலரிசி, அதேயளவு வெங்காயம் அதிலுங்குறைந்த அளவு உருளைக்கிழங்கு. மாதத்தின் முதல் வாரத்தினுள்ளேயே இவையாவும் வந்து அறையுள் அடுக்கப்பட்டுவிடும்.

மீதி அப்பப்ப... வேண்டிக் கொண்டு வந்து அவியல்தான். மேற்படி ஐந்து தோழர்களும் பலதரப்பட்ட ".... இசங்" களுக்குச் சொந்தக்காரர்கள் ஐந்து விரல்களும் ஒரேயளவாக இல்லை. அதனதன் தொழிற்பாடுகளும் வேறு வேறானவை. உதாரணத்துக்கு கட்டை விரல் "கையெழுத்து தெரியாது" என்பதை நிரூபிக்க,

சுட்டு விரல் காட்டிக் கொடுக்க அல்லது போட்டுத்தள்ள, நடுவிரல் சைவப் பெருந்தகைகளின் சின்னம்..., பொட்டுவைக்க...., அதாவது சந்தனகுங்குமப் பொட்டு வைக்கும் இடத்தில் "வைக்கிற மாதிரி வைச்சால்...." மனிசன் பொட்டெண்டு போயிடுவான் என்பதை

- சிவலிங்கம் சிவபாலன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தவுமாயிருக்கலாம்.
அடுத்தவிரல் தனயோகங் கொண்டவிரல், மோதிரவிரல் என்றும் பெயர்.
அடுத்தது சின்னிவிரல் அந்தரமாபத்து என்று வருமிடத்து காதுகுடைய உதவுகிறதல்லவா...
இப்படியே மேற்படி ஐந்து தோழர்களுக்கும் ஒற்றுமையைக் காட்டிலும் வேற்றுமைகளே அதிகம். இவர்களுக்கிடையே உள்ள அதியுயர் ஒற்றுமை என்ன வெனில் "ஒரு தோழனின் கருத்தை மற்றத் தோழன் ஏற்றுக்கொள்வதில்லை..."
அதே போல அதியுயர் வேற்றுமை என்னவென்றால் "தங்களுக்குள் பேசி முற்போக்கு என்றால் என்பதைத் தீர்மானிக்க முடியாமல்..."

*

வியாசகன் கொழும்புக்குப் புறப்பட நேர்ந்தது ஒன்றும் விபத்தல்ல. நன்றாகவே திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட வொன்று தான்.
"உன்றை நிறத்துக்கு எடுப்பாக....., கோட் சூட் வாங்கிக் கொண்டுவா...."
வழமையாகவே தாலிகட்டும் வேளையில் பட்டு உடை, பின்னர் மாலை வரவேற்பின் போது மேற்கத்தைய உடை..., இதிலென்ன விபரம் வேண்டியிருக்கு.
தாய் தகப்பனைப் பார்க்கப் போவதாக ஒரு சாட்டு..., அம்பிட்டால் கட்டவேண்டியதுதானே.
"மாட்டன் மாட்டனெண்டு..., ஒற்றைக்கலிலை நிண்டனான் மச்சான்..., தாங்களுயரோடை இருந்து பார்க்கவேணு மெண்டிச் சினம்..., சரியெண்டு..."
"ஐஞ்சு சதம் சீதனம் வேண்டாமெண்டிட்டன்.... புறோக்கர் தன்ரை கொமிசனுக்காகவெல்லே சீதனம் வேண்டித் தந்திட்டான்..."
"Girl இன்ரை Brothers, States இலையும் Australia விலையும் அந்தமாதிரி இருக்கிறாங்கள்..., தங்களின்ரை States ஐ Keep up பண்ண வேண்டுமெண்டிட்டு Fifteen Larks... Cash Bank பன்னிவிட்டிட்டாங்கள்... நான் ஒண்டும் பறையேயில்லை..."

*


"வாறகிழமை காத்திரப் படைப்பியக்கத்திய ஒன்று கூடலாம்..." பார்த்திபன் நளினமாகவே வியாசனைச் சீண்டினான். வியாசன் வாய் திறக்க முதல். இந்த அறையின் நிரந்தர அங்கத்தவர்களான ஐந்து தோழர்களும், கூடவே மாறுபட்ட கருத்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆறு கன்னைக் குழுமங்களும் "காத்திரப் படைப்பியக்க" ஒன்று கூடலில் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தார்கள்.
வந்தவர்களில் அனேகர் ஆழமான கருத்துக் கட்டுடன் வந்திருந்தார்கள். சிலர் கொவ்வைப் பழமாகச் சிவந்திருந்த செங்கண்களுடன் வந்திருந்தார்கள். சிலர் தமக்கு மூக்குப் போனாலும் காரியமில்லை எதிரணியில் உள்ளவனுக்கு, சகுனப் பிழையையல்ல, செம்மையான வாதத்தை முன்வைக்க முடியாமல் பண்ணவென்றே வரிந்து கட்டிக் கொண்டு வந்திருந்தனர்.
சுவிசிலிருந்து கவிஞை சோதியா, எழுத்தாளை நர்மதா, டென்மார்க்கிலிருந்து நிவேதா, ஜேர்மனியிலிருந்து விமர்சகை ஜனா இப்படியே புலம் பெயர் இலக்கியத்தின்பால் நேசமும் பற்றும் கொண்ட பலர் தத்தம் வாழ்விடங்களிலிருந்து வந்திருந்தார்கள். தத்தமது நிலைப்பாட்டின் இறுக்கங்களை நிரூபித்தார்கள். கருத்துப் பரிமாற்றங்களின் தாக்கம் பலரிடையே... அதாவது உண்மையான தன்மையை ஏற்றுக் கொள்ளும் பக்குவசாலிகளினிடையே பல தெளிவை உருவாக்கியது. வந்திருந்த சில தோழர்கள் தம் எதிரி "அந்தக்" கருத்தை வலியுறுத்திவிட்டானே என்ற ஆதங்கத்தில் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்ப முற்பட்டு ஈற்றில் தாம்பிடித்த முயலுக்கு நாலுகாலல்ல என்ற கோதாவில் நின்று கொண்டனர்...., அல்லது தள்ளாடிக் கொண்டிருந்தனர்.
"எமது பெண்கள் சமூகத்தால் மனைவி என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டனரே தவிர, தத்தம் சொந்தக் காலில் நின்று சமூக அரசியல் பொருளாதார நிலையீட்டின் அடிப்படையில் உயர்த்தப்படவில்லை. இவர்களது தொடர் போராட்டத்தின் வெற்றி புலம் பெயர் நாட்டிலேதான் கிடைத்திருக்கிறது" என்று வியாசன் பொதுவான ஒரு கருத்தைச் சொன்னதுதான் தாமதம் வந்திருந்த சகலரும் பலவாகவே கைதட்டி வரவேற்றிருந்தார்கள்.
அதுபோலவே எழுத்தாளை நிரஞ்சனாவும், கவிஞை சோதியாயும் மேலும் பலமாக ஆரவாரித் திருந்தார்கள். எழுத்தளை நிரஞ்சனா ஆரவாரித்தாள் பரவாயில்லை. கவிஞை சோதியா தன் ஊதா நிற மூக்குக் கண்ணாடியினூடே இடைவிடாது வியாசனையே பார்த்து ஆரவாரித்ததும் வியாசனை வரிக்குவரி பாராட்டியதும் சக தோழர்களை இருப்புக் கொள்ள விடவில்லை.
"இலங்கையில் இன்று, பெண்கள் போரில்மரிக்கிறார்கள். மாங்கல்யத்தையும் மணமாலையும் சுமந்த கழுத்துக்கள், இரும்பு உருக்கு சுடுகலன்களைச் சுமக்கின்றன" என்று கவிஞை புவனா உரைத்து நின்றாள்.
சிலர் சொண்டைச் சுழித்தார்கள், சிலர் புருவங்களை உயர்த்திக் கரகோசம் செய்தார்கள். ஒரு சிலர் அங்காலுமில்லாமல் இஞ்சாலுமில்லாமல் காதை மட்டும் பொத்தாமல் கண்ணையும் காதையும் பொத்தினார்கள்.
"தூரநோக்குச் சிந்தனை கொண்ட எந்த ஒருத்தனும் தத்தம் மொழியிலேயே சகல அலுவல்களையும் செய்து கொள்ள வேண்டும் என்று கிரேக்கர்கள் உறுதியாகக் கூறியிருக்கிறார்கள்..., எந்தவொருவனுக்கும் மொழியே அவனுடைய அடையாளம் அந்தவகையில் நான் தமிழன்..." உறுதியுடன் மைக்கல் பேசினாள்.

*

மார்க்சிய சிந்தனையாயிருந்தாலென்ன, பெரியாரிசமாக இருந்தாலென்ன, பின்நவீனத்தின் கூறுகளாக இருந்தாலென்ன, பெண்ணிய வரலாற்று அர்த்தம் பொதிந்த மீனாட்சியம்மாளின் துணிவாக இருந்தாலென்ன, ஒடுக்கப்படும் மக்களின் விடுதலை மற்றும் புரட்சிகரச் சிந்தனைகளின் ஜீவனையே நொருக்கி இன்றைய உலகமயமாக்கல் என்னும் சுரண்டல் மன்னின் அடாவடித்தனங்களாயிருந்தாலென்ன முடிந்தவரை அனேகமானவற்றை வாசிப்பின் மூலம் நிலைநிறுத்திக் கொண்டவன் தான் வியாசன்.
வியாசனுக்கு அடிக்கடி கவிஞை சோதியா தொலைபேசியூடே அதிக நிமிடங்கள் பேசிக் கொள்ளுவது இந்த அறையின் நிரந்தர அங்கத்துவ தோழர்களுக்கு சந்தேகத்தையே ஏற்படுத்தியிருந்தது.
"என்ன தோழா..., இலக்கிய இயக்கம் வாழ்க்கைக்கு வழி காட்டியிருக்குப் போலை..." நளினப்பார்வையுடன் வரதன் இழுத்தான்.
"அதெல்லாம்..., தோழமையடா... "தோழமை..., தோதாத்தான் இருக்கு மெள்ளமா அணைக்கப்பார்..."
"அணைக்கிறதுக்கு இது ஒண்டும் விளக்கில்லை..., விளங்குது மார்போடு அணைக்கப்பார்" கூட இருந்த தோழர்களின் உசுப்பிவிடும் பேச்சால் வியாசன் சற்றுக்கிறுங்கித்தான் போனான்.
"மார்க்சியம் என்பது மதமல்ல..., அது விஞ்ஞானம்...,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மேலும் வளர்ந்து நவீனத்தின் எல்லையை விரித்துக் கொண்டேபோகுமாம்..., அது போலத்தான் தோழா உன்ரை மனது மதமில்லை... காதல்.. வேணுமெண்டால்ப் பார்... இனியுனக்கு எங்களைப்பற்றியே நினைப்பிராது... வயலற் கலர் கண்ணாடி..., தோளைத்தொடும் கரும் கூந்தல், 'பிங்கலர் ரீசேட்', கறுப்பு 'ஜீன்ஸ்'..., விரிந்தும் விரியாத உதடு...'' இப்படியே வரதன் வர்ணனை செய்து கொண்டான்.



''அதென்ன... வடிவான வனிதையரைக் கண்டவுடனை... பெண்ணிலைவாதம்...'' பார்த்தீபன் வியாசனைக் குழப்பினான்.

பெண்கள் கேட்டதோ ஐம்பதுக்கைம்பது... கிடைத்ததோ இருபதுக்கும் குறைவு..., பாராளுமன்றத்திலை இருநூற்று இருபத்தைந்து ஷீற் (Seat) யில பெண்களுக்கு வெறும் பத்தேபத்துத்தான்... மீதி நூற்று மூன்றையும் இந்த ஆணாதிக்க சமுதாயம் எப்போது அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப் போகுதோ?..., கேட்டாயே தோழா ஒரு கேள்வி" மைக்கல் கைகளைப் பலமாகத் தட்டி வீரதீரச் சத்தமாகக் கேட்டான்.

''அதென்னடாப்பா..., அவனவன் தண்ணியடிச்சுப்போட்டுத்தான், உளறுவாங்கள்..., நீங்களென்னடாவெண்டால்...'' வியாசன் முடிக்க முதலே...,

''தண்ணியடிக்காமலே உளறுகிறாங்கள் எண்டு நினைக்கினாயாக்கும்...'' கேசவன் வியாசனின் எண்ணத்தை அப்படியே போட்டுடைத்தான்.

"விளங்கினாய்ச் சரி...."

"புலம் பெயர் மண்ணிலை இருக்கிற புத்தகக் கடையிலை ரெண்டு புத்தகத்தை வாங்கியாச்சு..., முன்னுரையைப் படிச்சாச்சு.., தாங்களும் இலக்கியவாதியாச்சாம்.., புலம் பெயர் இலக்கியம், ஒரு வேளை தாங்களில்லாமல் விட்டிருந்தால் தோன்றியே இருந்திருக்க மாட்டுதாம்..., புலம் பெயர் இலக்கிய வாசகர்கள்... வாசலிலை காத்துக் கிடந்து காலம்பற தங்களட காலிலை விழுந்து எழுதச் சொல்லி வற்புறுத்தின படியாலைதான்..., போனால்ப் போகுது கேக்கிறாங்களே யெண்டு இவர் படைக்கத் தொடங்கினாராம்...'' வியாசனைப் போட்டு உலுப்பியெடுத்தான் பார்த்தீபன்...,

''விடடா... விகு... புலம் பெயர் இலக்கியப் பண்டிதர்தானெண்ட நினைப்பு அவனுக்கு... அவன்ரை ஆசையிலை நீயேன் மண்ணை அள்ளிக் கொட்டுறாய்..." மைக்கேல் மூச்சுவாங்காமல் வியாசனை ஒரு பிடிபிடித்தான். எதற்குமே பிடிகொடாமல் நடந்து கொண்டான். வியாசன்.

"உவன் சரியான..., அமசடக்கு, உவனை ஒருத்தரும் நம்பாதேங்கோ..." வியாசனுக்குக் கூடச் சிரிப்பு வந்தது.

"என்னையேனடாப்பா... போட்டுக் கடிகடியெண்டு கடிக்கிறியள்..., பேசாமல்ப் போய்க் குமணன் கொம்பனியோடை சேருங்கோவன டாப்பா..."

இந்தக் குமணன் "கொம்பனி" பற்றியும் சொல்லத்தான் வேண்டும். அதி குறைந்தபட்ச சனநாயகக் கருத்தையே ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களுக்கான குழாத்தின் தலைவன்..., சக தோழன்..., இந்த குமணன் என்னும் பிரகிருதி. இதைவிட அவனைப்பற்றிச் சுருக்கமாகக் கூறமுடியாது.

தான் சொல்லுவது பிற்போக்கான கருத்தாக இருந்தாலும்..., இருந்தாலென்ன..., "இருக்கும்", அதை அப்படியே தனது குழாமுஞ்சரி மற்றவர்களுஞ் சரி அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என நினைப்பவன் தான் இந்தக் குமணன்.

வியாசன் குழாம் முற்போக்கான, கருத்தியலைச் சுட்டி அதன்வழி தம் இலக்கிய இயக்கத்தை நடத்துவதை வேரோடு அசைத்துப் பார்க்கும் ஒருவித விசப்பரீட்சையின் எடுகோள்களாகத்தான் குமணன் குழாம் விளங்குகிறது. இது குமணனுக்கும் விளங்காததல்ல.

"அதென்ன தோழா..., இரு மனமொத்துப் போனால் வாழ அவர்களுக்குகிடையில் ஏது சாதி...., எதற்கு சமயம்..., யார் கொடுக்க வேண்டும் சீதனம்..."

"தோழா..., சந்திர விம்பம் சோதியா..., வியாசனுக்கு முன்னாலையெல்லோ... இருந்தவ... அப்படியெண்டால் எங்கடை தோழன் அப்பிடித்தானே பேசியிருக்கவேணும்..."

உதுமட்டுமே தோழா..., புலம் பெயர்ந்து வந்துவிட்ட பாவையர், தங்களுக்கு உரிமைகள் கிடைத்துவிட்டன என்ற போர்வைக்குள் ஒளிந்துகொள்ளக் கூடாது..., அவர்கள் இன்னும் பல நெருப்பு ஆறுகளைக் கடக்கவேண்டியுள்ளது.... எண்டு யதார்த்தத்தை எடுத்து விட்டானே, பாத்தியா தோழா..."

"ஒரேயடியாக கவிட்டுப் போட்டான் தோழா...."

உண்மையிலேயே இப்பேற்பட்ட வியாசனின் கருத்துகளுக்குப் பின்னரே கவிஞை சோதியாவின் மனதில் வியாசன் பற்றிய ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது.

எந்தவொரு சமுதாயம், இன்னொரு சமுதாயத்தின் மீதோ அல்லது தனிமனிதன் மீதோ தன் அக்கறையைக் காண்பிக்கும் போது, மேற்படி சமுதாயத்தின் மீதான நம்பிக்கையும் அரவணைப்பும் சம்பந்தப்பட்டவர்களால் ஏற்றுக் கொள்ளத்தானே கூடும்.

அதன்வழி தனக்கிசைவான கருத்துக்குவியலை வியாசன் முன்வைக்கின்றான்..., இல்லை..., வைக்கின்றார் என்னும் போது கவிஞை சோதியாவால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமிவ் வேளையில் "அவர்" மீதான தன் எண்ணத்தையும் ஒரு புரிதலையும் கவிஞை சோதியா ஏற்றுக் கொள்ளுவதிலேதும் வியப்பில்லையே.

கவிஞை சோதியாவும், வியாசனும் மனப்பட்டு விட்டார்கள். இருபகுதியிலிருந்தும் இதற்கான சமிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிக்கப்பட்டு அவையாவும் இருவர் மனத்திலும் ஒருவித புத்தொளியையும் புத்துணர்வையும் அதிகமாகவே ஊட்டிவிட்டதென்பதுவும் உண்மை.
இப்படியானவோர் கட்டத்திலேதான் வியாசன் கொழும்புக்குப் போயிறங்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது.
போர் நிறுத்தம் 'அது இது' வென்று நாடு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே காதும் காதும் வைத்தமாதிரி ஒரு நடை கொழும்புக்குப் போய்விட்டு வந்துவிடலாம் என்ற நோக்கத்திலேயே வியாசன் தன் பயண ஒழுங்குகளையும் செய்திருந்தான். அப்போது தான் கவிதை சோதியா ஒற்றை வரியில் ஒரு கவிதை சொல்லியிருந்தாள்.

கண்டதும் அவிழாத செங்குவளை
இவள்....,
கருத்தியல் கவிந்திட மலர்ந்தவள்,
கண்துயிலாளினி கூடிவாழ் நாள்வரை.

உண்மையும் அதுதான். எத்தனையோ பேர் அவளை நோக்கி தமிழ்த் தூதும், கவித்தூதும், கண் பார்வைத்தூதும் விட்டும் வீசியும் தான் பார்த்தார்கள். ஈற்றில் தோற்றுத்தான். போனார்கள்.
வலைக்குள் அரிசிப் பொரி தூவிவிடப்பட்டிருப்பது வேணுமென்றால் புறாவுக்குத் தெரியாமலிருக்கலாம்..., ஆனால் இந்தப் "பொறி"கள் யாவையும் கவிஞை சோதியாவுக்குத் தெரியாததல்ல.
வியாசனிடம் மனப்பட்டுப் போனது, அவனின் இருப்பை எண்ணியோ இல்லை அவனின் அழகை நோக்கியோ... அல்ல.
அவனிடம்... இல்லை.... "அவரிடம்" காணப்படக் கூடிய யதார்த்த பூர்வமான முற்போக்குக் கருத்துக்களும் அதனுடனான செயல்திறனையும் வைத்தே.

*

வியாசனின் தந்தையார் மகாலிங்கத்தார். சமீபகாலமாகவே தன்னை ஓர் ஆஞ்சநேய பக்தராக இனங்காட்டிக் கொள்ளுகிறார். தலையில் குடுமியும் காதில் கடுக்கனும் கண்ட மனிதன்தானே, "கோட், சூட், ரை" என மாட்டிக் கொண்டு காலத்தைவிட வேகமாகப் பறக்கிறான்கள். அது மாதிரித்தான் இதுவும்.
தானும் ஊர் நண்பர்கள், பெரியவர்களென்று சிலருமாக இலங்கையில் அதுவும் கொழும்பில் பாரிய அளவில் ஒரு ஆஞ்சநேயர் கோவில் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ளும் முயற்சியில் மனிசன் உண்ண உடுக்க நேரமில்லாமல் பறந்தடித்துக் கொண்டிருந்த வேளையிலேயே, தோழன் வியாசனும் கொழும்பில் போயிறங்கினான்.
மகனின் வருகையும் கோவில் நிர்மாணப்பணிகளும் கைகூடிவரும் வேளையில் மகாலிங்கத்தாருக்கு கால் நிலத்திலில்லை, மூன்று கோடியிலான திட்டம், ஊரெல்லாம் உலகெல்லாம் தாண்டி கோயிலைக் கட்டுவதான திட்டமல்லவா, கால் நிலத்தில் நிற்குமா?
தனது..., பின்னர் தனது மகன்..., தொடர்ந்து பேரன் பேத்தியென்று தன்பெயரைப் பரம்பரை பரம்பரையாகச் சொல்லவேண்டும் அதுபோல் தம் குடும்பமும் ஆல்போல துளிர்த்து, அறுகுபோல வேரூன்றி பெருவாழ்வு வாழ வேண்டும். தனது குடும்ப ஆதிக்கம் நாலா பக்கமும் அடிபட வேண்டும் என்ற எண்ணமேயல்லாமல், உண்மையிலேயே ஆஞ்சநேயர் மீது கொண்ட பக்தியோ பயமோ அல்ல..., இத்தகைய எடுப்புக்களுக்குக் காரணம். வியாசனிடம் விபரமாகச் சொல்லி புலம்பெயர் பூமியெங்கணும் உண்டியல்களும் தயாராகிவிட்டிருந்தது. மேற்படி மூன்று கோடியும் புலம்பெயர் புண்ணிய பூமியிலிருந்துதான் வரவேண்டுமென்பது மகாலிங்கத்தாரின் அன்பு வேண்டுகோள்.
ஒரு வேளை ஆஞ்சநேயர் கனவில் தோன்றி இத்தகைய கட்டளையை மகாலிங்கத்தாருக்குப் பிறப்பித்திருக்கவும் கூடும். எதை நம்ப..., எதை நம்பாமல் விட!

*

கொழும்பில் தன் பழைய நண்பர்கள் சிலரை அழைத்து..., சில ஆயிரங்களை விட்டெறிய "கலர் கலர்" போத்தல்கள், நில, கடல் பட்சணிகள் யாவும் பிரட்டலாகவும் பொரியலாகவும் வர அதற்குள் யாவரும் காணாமல் போய்விட்டார்கள்.
கவிஞை சோதியாவின் முகவதனம் மட்டும் அவ்வப்போது வியாசனிடம் வந்துபோக..., மெள்ளக் கதையைப் போட்டுடைத்தான் வியாசன்.
"அவளாடா மச்சான்..., உனக்கென்ன பைத்தியமே..., அவளார் தெரியுமே..."
"ஆரடா..."
"அவளின்ரைடா..."
"உனக்கெப்பிடியடா..., தெரியும்..."
"உவளின்ரை தாய் தேப்பறோ..., சகோதரங்களோ, அந்தத் தொழிலைச் செய்யேல்லை மச்சான்..."
"... ஆனால் உவனின்ரை பூட்டன் பூட்டி..., செய்திருக்கினமெண்டு தெரியும்..."
"நல்ல வேளை..., என்னை ஆஞ்சநேயர் காப்பாற்றிப் போட்டார்..."
"உன்ரை கொய்யா..., மரபனு சோதினையெண்டாலுஞ்செய்து..., ஆரெவையெண்டு கண்டு பிடிக்கக் கூடியவர் கண்டியோ... வலுஅவதானமாயிரு சொல்லிப் போட்டன்..., இல்லை...., உனக்கு இடுப்புக்குக் கீழே காலிருக்க விடார் கொய்யா..."
"எவ்வளவு வலோர்க்காரமாகக் கேட்டும்..., அவள் சொல்லேல்லை மச்சான்.."
"நீ... முற்போக்கு... பிற்போக்கு எண்டு நிண்டிருப்பாய்..."
"உண்மைதான் மச்சான்..."
பல மாதங்களாகவே பழகிய பேசிய கவிஞை சோதியா..., பாவம் என்ன செய்வாள். பார்த்துக் கொண்டுதானிருப்பாள். படித்தென்ன பட்டம் பெற்றென்ன பரம்பரை யெண்டு ஒண்டு உண்டாமே.


*

கேசவனுக்கு அவன் தாயார் கொழும்பிலிருந்து எழுதிய கடிதம் அதனுடனான வரிகள் யாவும் வியாசனின் சகதோழர்களையே ஒரு தடவை உலுப்பிவிட்டது.
"என்னத்தையடா பேசினாங்கள்..., எழுதுனாங்கள், செய்யிறாங்கள்..."
மீண்டும் மீண்டும் கேசவன் அவ்வரிகளை வாசித்தான்.
"....உந்தக் கலியாணம் எப்பவோ ஒப்பேறியிருக்க வேணும்... கிடந்து இழுபட்டு இழுபட்டு..., இப்பத்தான் ஒரு வழியா வழிபிறந்திருக்குது.
வியாசன் பொம்பிளையையுங் கூட்டிக் கொண்டு இனியுங்கை வரமாட்டானாம்..."
"நேரே லண்டனிலைபோய்க் குடியேறப் போறானாம். மாப்பிளை பகுதி நாண்டு கொண்டு நிண்டு பொம்பளை பகுதியிட்டை காசு பத்துலட்சமும் பாக்கியில்லாமல் தந்தால்தான்..., கலியாணமெண்டு நிண்டதாலை..."
மேற்கொண்டு கடிதத்தை வாசிக்க கேசவனுக்கு மனமொப்பவில்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி

## இரு கவிதைகள்



### 01.

உனக்கும் எனக்குமான எல்லைகள் எது
என்னோடு நீ அதிகம் சர்ச்சைப்படுகின்றாய்

ஒரு நாடோடிப் பறவையைப் போல்
காத்திருக்கும் என் மௌனிப்பில்
இளைப்பாறிப் போவது பற்றி
அதிகம் பிரஸ்தாபிக்கின்றாய்

என்னை யாரென்று இனம்காணாத
என் கனவுகள்
எனக்கு அந்நியமாகிப் போகின்றது.
அதற்குள் தொலைந்திருந்த ஆசைகள்
தங்கள் கடைசி மூச்சையும்
இழுத்து விட்டுக் கொள்கின்றன.
ஆற்று நீரில் முக்குளித்துப்
போனவள் நான்
அதிசயப்பட்டுப் போக இதில் எதுவும் இல்லை

ஒரு வரப்பைப் போல்
அல்லது கரையைப் போல்
யாருக்குமில்லாத தேசத்தில்
வாழக் கற்றுக் கொண்டதற்காக
உன்னை நான் எப்படி நோக.

ஆயினும் என்ன
எல்லையில்லா வெண்மணற் பரப்பில்
கால் பரப்பி
உருவம் செய்ய முனைந்து
சலிப்படைந்த பொழுதுகளில்
கரைகின்றது காலங்கள்
எனக்குக் கூட இல்லாது

●

### 02.

எனது மௌனம் பற்றி
நீ அதிகம் சிந்திக்கின்றாய்
என்னைக் கேள்விகளால் துளைக்க
தயாராகின்றாய்
பதில்கள் கிடைக்காது என்பதால்
என் நெற்றியின் ஆழத்தை ஊடுருவி
எதையோ கண்டுபிடிக்கவும் முயல்கிறாய்

அது உன்னை அதிகம் துன்புறுத்துகின்றது
உனது கற்பனையின் எல்லைக்கே போகின்றாய்
அதில் ஒரு பிரமாண்டமான பூதத்தினை
நீயே செதுக்கியும் கொள்கின்றாய்
மிரட்சியுடன் என்னைப் பார்க்கின்றாய்

தொடர்ந்தும் என் மௌனம்
உன்னைத் துரத்துகின்றது
என்னை கொடிய நச்சு வார்த்தைகளால்
சீண்டுகின்றாய்
முடிந்தால் துன்புறுத்தியும் பார்க்கிறாய்
எதுவுமில்லாத போது
உனது பொறுமையைத் தூக்கி வீசுகிறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் உன்னால் என்னைக் கொல்ல முடியவில்லை

மௌனத்திற்கு அப்பாலான சிதைவுகளில்

உன்னை நீயே துன்புறுத்துகின்றாய்

உன்னால் நான் துன்புறுத்தப்படவில்லை என்ற வாக்கு மூலத்தையும்

என்னிடம் இருந்தே கோருகின்றாய்

புரியவில்லை எனக்கு

தவறுகளே இல்லாத உன்னை
எனது வெற்று மௌனம் தண்டிக்குமா என்ன?

இன்றிலிருந்து நான் அழுவதை நிறுத்தி விடுகிறேன்.

அழுவது பிடிக்காது என்றோ

கோழைத்தனம் என்றோ நான் நினைக்கவில்லை.

நேற்றிருந்த வீட்டை விட்டு நெடுந்தூரப் பயணம்

பயணம் நான் செய்து கொண்டதல்ல

அது என்மீது வீசப்பட்ட ஒரு விசம்

ஆயினும் நினைக்க முடியாத எல்லைகள்

பல தாண்டியும் என் பயணம் முற்றுப் பெறுவதாயில்லை.

என்னொரு தேசத்தை விட்டு

கானகமும் வயல்வெளிகளையும் நோக்கி

நான் எவ்வளவு தூரம்

பயணம் செய்தல் சாத்தியம்

வியாபிக்கும் நச்சிலிருந்து என் மரணம்

என்றாவது சம்பவிக்கும் என்று

என்னால் காத்திருக்கவும் முடியவில்லை

உயிர்துடித்து என் மனமும்

இறந்து போகும் பொழுதும்

காத்திருப்பு தவிர்க்க முடியாதது என்கிறார்கள்

எனக்கொரு காத்திருப்பு இனித் தேவையில்லை

அது தரும் ஏக்கமும் கண்ணீரும் எனக்கு வேண்டாம்

நான் ஒரு விட்டேத்தியாய்ப் புறப்படப் போகிறேன்

என்னிலிருந்து கண்ணீர் இல்லாதபடியால்

எல்லைகளற்ற பரந்த வெளி மீது

என்னாலியன்ற

எனக்குப் பிடித்தமான பாடலை

எழுதிவிட்டுப் போகவே விரும்புகிறேன்

அது எனது சுதந்திரத்தை நோக்கியதாயினும்


உங்களுக்குள் பிரளயத்தினை ஊட்டுவதாகவும் இருப்பின்

நான் என் செய்தல் இயலும்


எனது சுதந்திரத்தினை அங்கீகரிக்காத நீங்கள்

என்னிலிருந்து எதை எதிர்பார்க்கின்றீர்கள்?!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வ.அ. இராசரத்தினம் இரண்டு நினைவு



5/7, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
07.07.1992

அன்புள்ள ஹனீபா
நலம், வேண்டுவது. எனக்கு உதவி ஒன்று வேண்டும். என் நூல்கள், என் எழுத்துக்கள் எல்லாவற்றையுமே இழந்தது தங்களுக்குத் தெரியும்.
தற்போது எனது சிறுகதைத் தொகுதி ஒன்றை முன்பின் அறிமுகமேயில்லாத ரசிகர் ஒருவர் இங்கிலாந்திற் பிரசுரிக்க இருக்கிறார். 90 ஆண்டுக்குப்பின் வந்த கதைகள் தவிர வேறு ஏதுமே என் வசமில்லை.


தயவு செய்து 'இளம் பிறை'யில் வெளிவந்த ரசிகன், வென்நிலன் என்ற போதும், a + a = 2a, ஆண் கதை + கதை = கதை என்ற கதைகள் உம்மிடம் இருந்தால் அனுப்ப முடியுமா? அத்துடன் வேறு என் கதைகள் யாரிடமிருந்தாலும் பெற்று அனுப்ப முடியுமா? மிக்க உபகாரமாயிருக்கும். தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்

வ.அ. இராசரத்தினம்



திரிகூடம்,
மூதூர்.
20.06.1994

அன்புள்ள ஹனீபா,
தங்கள் கடிதங்கள் கிடைத்தன. பல தொல்லைகளாற் கடிதம் எழுதவில்லை மன்னிக்கவும்.



எஸ்.பொவின் வருகையை வீரகேசரி மூலமாகவும் தங்கள் பிந்திய கடிதம் மூலமும் அறிந்தேன். எனக்கு வேதனையாக இருந்தது.

எஸ்.பொ. அவுஸ்திரேலியாவிலிருந்து எழுதா விட்டாலும் கொழும்பு வந்த பின்னராவது எனக்கு ஒரு போஸ்ற் காட் போட்டிருக்கலாம். அப்படி எழுதியிருந்தால் மட்டக்களப்பிலோ கொழும்பிலோ சந்தித்திருப்பேன். அப்படி அறிவிக்காதது எனக்கு மிக வேதனையாக இருந்தது.

அவர் அவுஸ்திரேலியா போயும் எனக்குக் கடிதம் எழுதவில்லை. மரபு என்ற பத்திரிகையைப் படித்தபின்னர் மரபு விலாசத்திற்கு நானே முதலில் அவருக்குக் கடிதம் எழுதினேன். அதன் பின்னரே என்னோடு தொடர்பு கொண்டார். வருகிற ஆவணி மாதம் 24ந் திகதி என் மகன் சமய குருவாக 'சுவிஷேகம' பண்ணப்படவுள்ளான். அதற்காக எனது நூல் ஒன்றை மித்ரா வெளியீடாகப் பதிப்பிக்கவும் அவர் இணக்கம் கொண்டிருந்தார். நானும் நூலை எழுதி முடித்தபின் அவருக்கு அதை அனுப்ப எண்ணிக் கொண்டிருக்கையில்தான் அவர் இலங்கை வரவு அமைந்தது. இலங்கைக்கு வந்த பின்னர் அவர் என்னோடு தொடர்பு கொள்ளாததினால் நான் அவர் மூலம் புத்தகம் பதிப்பிக்கும் எண்ணத்தையே விட்டுவிட்டேன். சிலருக்குச் சில வசதிகள் சேரும் போது தம்மை விட வசதிகள் குறைந்தவனை நினைத்துப் பார்க்க நேரம் இருப்பதில்லை. போகட்டும். அதற்காக நான் கவலைப்படவில்லை.



மகனின் விழாவை முன்னிட்டு என் இலக்கிய நினைவுகள் என்ற நூலை எழுதியுள்ளேன். நிச்சயமாக ஆவணி 24க்கு முன் அது நூலாக வெளிவரும் என்பதை மட்டும் இப்போதே தங்கட்குச் சொல்லிவைக்கிறேன். நூல் 175 பக்கங்கள் வரலாம்.

நான் எஸ்.பொ.வோடு எவ்வளவோ இணைந்திருந்தேன். அவரின் அறுபதாம் ஆண்டு விழாவுக்காக இந்நாட்டில் அவரைப்பற்றி நினைத்துக் கட்டுரை எழுதிய ஒரே ஒருவன் நான்தான். ஆனால் அவர் தன்வருகையை எனக்கு ஒரு 'போஸ்ற்காட' மூலம் அறிவிக்கவில்லை என்றால் அதைக் குறித்து வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

முடிவாக என்னை 'ஆத்மா' வியாதி பிடித்துக் கொண்டுவிட்டது. எனினும் இன்னும் சில எழுதிவிட்டே சாவேன்!


அடுத்த மாத ஆரம்பத்தில் தமிழ்த்தின விழா கல்முனையில் நடக்குமாம் அதற்கு நடுவராக வருவேன். அப்போது அவசியம் தங்களைச் சந்திப்பேன் மற்றவை நேரில்.

வ.அ. இராசரத்தினம்.

**வ.அ. அவரது நண்பரான எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபாவுக்கு எழுதிய கடிதங்கள் சிலவற்றை அவரது நினைவாக, அவரிடமிருந்து பெற்று பிரசுரிக்கிறோம். (ஆ-ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம



அன்புள்ள ஹனிபா,

சாகித்ய விழாவிற் கலந்து கொள்ள வந்த நா… வருவீர்கள் என ஆவலோடு காத்திருந்தேன். கடைசியாக சிறு கதைப் பட்டறைக்கும் நீங்கள் வராத போது தங்களிடத்தை என்னைக் கொண்டே நிரப்பினார்கள். தங்களைச் சந்திக்காதது மிகுந்த மன வருத்தமே.

மீதிக் கடிதத்தை ஊர் மீண்ட பின்னர் எழுதுகிறேன். நான் தங்களைச் சந்தித்து சம்பாஷிக்க விரும்பினேன். வரும்வழியில் தங்கள் கடையடியில் வாகனத்தை நிறுத்தி மகனிடம் புத்தகம் ஒன்று கொடுத்தேன். அரசாங்க வாகனத்தில் வந்ததினாற்தான் தரிக்கமுடியாமற் போய்விட்டது. தனியாக வந்து இருப்பின் தரித்தே இருப்பேன்.

நிற்க, என் சிறு கதைத் தொகுதி ஒன்றை எஸ்.பொ. வெளியிட இசைந்துள்ளார். அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் வெளியிடுவாராம். அதற்காகக் கதைகளைத் தேடுகிறேன். இதுவரை தோணி சிறுகதைத் தொகுதியிலுள்ள 14 கதைகளையும் சேர்த்து 40 கதைகளே எடுத்தேன். யாழ்ப்பாணம் போக முடியாது. கொழும்பு செல்லவும் பயம். அத்தோடு உடல் நிலையும் இடந்தராது வயது 71.

தங்களிடம் ஏதும் என் கதைகள் இருக்கின்றனவா? இருந்தால் போட்டோப் பிரதி எடுத்து அனுப்புங்கள்.

நான் ஆகஸ்ட் 28ல் எனது பேத்தியைப் பாடசாலைக்குக் கூட்டி வருவேன். 28ன் பின்னர், தங்களைச் சந்திப்பேன். வருமுன் கடிதம் எழுதுவேன். ஒருவிடயத்தை மறந்தே போனேன். தங்கள் 'வெள்ளைக் காகமும் வீர வாள்களும்' படித்தேன். மிக அருமையான கதை என் பாராட்டுக்கள்.

இது போன்ற கதைகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் யோகராசாவும் மிகவும் சிலாகித்துச் சொன்னார். உமாவரதராசனின் ஒரு அரசனின் வருகை, தங்களது வெள்ளைக் காகமும்..... என்ற இரண்டு கதைகளுக்கும் வெகுகாலத்துக்கு முன்னால், எஸ்.டிசிவநாயகம் அபேதவாதி என்ற பெயரில் சுதந்தரனில் ஒரு கதை எழுதினார். தலைப்பை மறந்துவிட்டேன் அது 1963ல் என எண்ணுகிறேன். நல்லையா தனது வானொலி மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்த போது கிரேக்கச் சரித்திரத்தினுள் மறைந்து நின்று எழுதிய கதை. இக்கதைகளுக்கும் மந்திர ஜாலக் கதைகள் என எமது விமர்சகர்கள் சொல்கிறார்கள். நான் உருவகம் என்பேன். தங்கள் வெள்ளைக் காகம் அஷ்ரப் தானே! அக்கதைக்கு மீண்டும் என் பாராட்டு. தாங்கள் 'பணிக்கன் மகன்' என்ற நாவல் எழுதியுள்ளதாக மட்டக்களப்பு வாசகர் வட்டத் தலைவர் சொன்னார் மகிழ்ச்சி.

வ.அ. இராசரத்தினம்.



அன்புள்ள ஹனிபா,

தங்கள் கடிதங்கள் (ஆன்மூலமும் தபாலிலும்) கிடைத்தன. நன்றி

நாளை காரில் மட்டுநகர் வருகிறேன். வரும் வழியில் யார் கையிலாவது இதைக் கொடுக்கலாம் என எண்ணி இக்கடிதத்தை எழுதுகிறேன்.

16ந் திகதி ஞாயிறு காலை பத்து மணிக்கு சாள்ஸ் மண்டபத்தில் விருது தருகிறார்கள். சனிக்கிழமை 15ந் திகதி, 20 தோமாஸ் லேனில் என் தங்கையின் வீட்டில் இருப்பேன். அங்கு சந்தியுங்கள்.

களத்திற்காகக் கதையும் கொண்டு வருகின்றேன். என்னாற் பயணிக்கிறது சிரமமாக இருக்கின்றது. ஆகவே தயவு செய்து என்னை மட்டக்களப்பிற் சந்தியுங்கள்.

20 தோமஸ் லேன், கிங்ஸ் ஹோட்டலுக்கு அருகாமையாக வாவியை நோக்கிச் செல்லும் ஒழுங்கை. அதில் ஏதோ ஒரு அச்சகத்துக்குப் பக்கத்திற் தான் வீடு. இந்தியா செல்லவுள்ளேன். விசா எடுத்தாயிற்று. தங்களைச் சந்திக்கப் பேராவல்.

வ.அ. இராசரத்தினம்

20, தோம



அன்புள்ள ஹனிபா,

நான் நேற்று கோரக்கல்லி மடு வந்தபோது அண்ணன் மட்டக்களப்பு போயிருந்தார். நான் உடனடியாக அடுத்த பஸ்ஸில் ஏறி மட்டக்களப்பில் அவரைச் சந்தித்தேன். வியாழக்கிழமை கார் போகிறது. அதிற் பயணிப்பேன்.

மலையாளச் சிறுகதைகளை ஏறத்தாழ வாசித்து முடித்துவிட்டேன். சோஸலிச யதார்த்த வாதத்திலிருந்து விலகிக் கதைகள் வேறு போக்கிற் போவதை என்னால் துல்லியமாக உணர முடிகிறது. இதை ஈழத்து எழுத்தாளர்கள் பலர் உணர்கிறார்களில்லை. அத்தொகுப்பை இன்னோர் தடவை படித்தேன். புத்தகங்களை 7ந் திகதி கொழும்பு கொண்டு வருவேன்.

சங்கிலி கதையை மறு பிரதி எடுக்க இருந்தேன். சில இடங்களைத்திருத்த வேண்டும். அதைத் தாங்களே செய்து களத்திற்குக் கொடுக்கவும்.

அருமையான சந்திப்பு. ஆண்டவன் அருளால் மீண்டும் விரைவிற் சந்திப்போம். தங்கள் குடும்பத்தினர் சகலருக்கும் என் நன்றியைச் சொல்லுங்கள். நான் வசந்தியிடம் சொல்வேன்.

வ.அ. இராசரத்தினம்



அன்புள்ள ஹனிபா,

கடிதம் கிடைத்தது. எழுத்தாளர் மூவரும் திருக்கோணமலைக்கு வர இருந்ததினால் நான் கொழும்புப் பயணத்தைக் கைவிட்டு விட்டேன். மன்னிக்கவும்.

15ந் திகதி இங்கு பிரதேச சாகித்ய விழா. வல்லிக் கண்ணன், பொன்னீலன் வருகிறார்கள். நான் பிரதம விருந்தினர். பத்திரிகைகளிற் பார்த்திருப்பீர்கள். அவ்விழா முடிந்ததும் 16ந் திகதி கொழும்பு செல்கிறேன். 18ந் திகதி இந்தியா புறப்பாடு.

எஸ்.பொ. விடம் இந்தியாவில் இருந்து கடிதம் வரவில்லையே எனக் கவலை கொண்டிருந்தேன். கடைசியாய் தந்தியே வந்தது. புத்தகம் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கிறது, வரவும் என. ஆதலால் நான் மிகுந்த உற்சாகத்தோடு செல்கிறேன். ஒரு நாவலையும் கொண்டு செல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற சனிக்கிழமை 'நான்கு தசாப்தங்களும் ஈழத்து இலக்கியமும்' என்று சோமகாந்தன் எழுதிய கட்டுரையின் சில விடயங்களை மறுத்து வீரகேசரிக்கு ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். பிரசுரமாகலாம்.

சந்தர்ப்பம் கிடைத்தால் வல்லிக்கண்ணன் குழுவினருடன் அதையிட்டு விவாதித்து விளக்குவேன்.

சிலவேளை திருக்கோணமலை விழாவிற்கு மட்டக்களப்பிலிருந்து யோகராசா முதலானோர் வரக்கூடும். அவரிடம் தங்கள் புத்தகத்தைக் கொடுத்தனுப்புகிறேன். வராவிட்டால் இம்மாத முடிவில் என்மகன் மூதூர் வர இருக்கிறார். அவர் திரும்புகையில் அவரிடம் கொடுத்துவிடுவேன்.

இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் மட்டக்களப்பு வருவேன். ஆனால் எப்போது திரும்புவேன் எனத் தெரியாது. புத்தகங்களை எப்படிக் கொண்டுவருவது என்பதையும் அங்கே போய்த்தான் தீர்மானிக்க வேண்டும். தங்கள் கடிதத்தை மகளிடம் காட்டினேன்.

ஆண்டவன் துணை செய்யட்டும் மீண்டும் சந்திப்போம்.

வ.அ. இராசரத்தினம்.



அன்புள்ள ஹனிபா,
பல்வேறு காரணங்களால் உடனடியாக மட்டக்களப்பு வரமுடியவில்லை. மேலும் சிறுகதைத் தொகுதி 100 பிரதிகள் ஏறத்தாழ முடிந்துவிட்டன. கைவசம் மிகச் சிலவேயுண்டு. நாவல்களும் அவ்வாறே. இவ்வாரக் கடைசியில் வந்து சேர்ந்து விடும் என எதிர்பார்க்கிறேன்.

இம்மாதம் 20ந் திகதி மட்டக்களப்பு ஆசிரியை பயிற்சிக் கல்லூரியில் ஏதோ விழாவாம். அதன் பழைய மாணவனான எனக்குக் கௌரவ அழைப்பு போனில் வந்தது. அதற்கு வருகிறேன். வரும் வழியில் தங்களைக் கடையில் சந்திப்பேன். மட்டக்களப்பில் ஒரு வாரமாவது நிற்க எண்ணம். மற்றவை நேரில்

வ.அ. இராசரத்தினம்.



அன்புள்ள ஹனிபா
என்மகன் வசம் புத்தகங்களைக் கொடுத்தனுப்புகிறேன். தங்கள் புத்தகங்களையும் கூட, என் கைவசம் தற்போது புத்தகங்கள் இல்லை. வரவேண்டும். வந்த பின்னரே மட்டக்களப்பு வருவேன்.
சங்கிலி கதையை அனுப்பினீர்களா? மற்ற எவருக்குமே புத்தகங்கள் அனுப்பவில்லை. புத்தகங்கள் வந்ததும் கொண்டு வருவேன்.
இயலுமான கெதியில் கிரயம் 300ரூபா அனுப்புங்கள், விரிவான கடிதம் இன்றிரவு எழுதுவேன்.

வ.அ. இராசரத்தினம்



அன்புள்ள எஸ்.எல்.எம்

தாங்கள் ஹஜ் யாத்திரை செய்து வந்ததைக் கேட்க மிக்க மகிழ்ச்சி. "நீ என்னைத் தேடு சகலதும் உன்னைத் தேடும்" என்பது பைபிள் வாக்கு. தங்கள் இறை நாட்டத்தையும், அதற்கு ஆண்டவன் துணையிருந்ததையும் அறிந்து மிக்க மகிழ்ச்சி. ஹஜ் கடமையை நிறைவேற்ற ஆண்டவன் அருள் உமக்கிருந்தமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்குத் தோத்திரம்.

நூல் வெளியீட்டு விழாவிற்கிடையில் கொழும்பு போக வேண்டியுள்ளது. றாகமவிலுள்ள என் மகனுக்குக் குழந்தை பிறந்துள்ளதாம் அதற்காக. எதற்கும் அவகாசம் இருந்தால் வர முயல்வேன். பின்னர் இதையிட்டுக் கடிதம் எழுதுவேன்.

வ.அ.இராசரத்தினம்



அன்புள்ள ஹனீபா,


எதிர்வரும் 2000 ஆண்டு ஜுன் மாதம் 05ந் திகதி எனக்கு 75வயது பூர்த்தியாகின்றது. அந்தப் பவளவிழாவை ஒரு இலக்கிய விழாவாகவே கொண்டாடவுள்ளேன். அதை முன்னிட்டு இங்குள்ள இலக்கிய நண்பர்கள் ஒரு மலர் வெளியிட இருக்கிறார்கள்.

அம்மலருக்குக் 'கிழக்கிலங்கைச் சிறுகதை இலக்கியம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுமாறு அன்புடன் கேட்கிறேன்.

அசமந்தமாக இருந்துவிடாமல் கட்டுரையை ஒரு மாதத்துள் எனக்கனுப்பவும்.

விழாவை முன்னிட்டு ஐந்திணைக் கதைகள் என்ற தலைப்பில் ஒரு சிறுகதைத் தொகுதியும் வெளிவரும். எட்டுத்தொகை அக இலக்கியங்களான நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை ஆகியவற்றின் பாடல்களுக்குப் பொருந்துவதாக தற்காலக் கதைகள் 30 இத் தொகுதியிலிருக்கும். எழுதி விட்டேன். இனிப்பிரதி எடுக்கவேண்டும். பிரதி எடுக்கும் வேலையை அடுத்த மாதம் 10ந் திகதி தொடங்குவேன். அதுவரையும் எழுதியவைகளை ஆறப்போட்டிருக்கிறேன். கிளரெஞ்சப் பறவைகள் நூலை மீண்டும் பதிப்பிக்கவும் உள்ளேன். இறைவன் துணைநிற்க

வ.அ. இராசரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரத்துக் கவிதைகள் இரண்டு



- அகா ஷஹீத் அலி

(அமெரிக்காவில் வசிக்கும் காஷ்மீரத்துக் கவிஞர்)
தமிழில்: எம்கேஎம்.ஷகீப்

## (தொலைபேசி) அழைப்பு

நான் கண்களை மூடிக் கொள்கிறேன்..

என்னைத் தொடர்கிறது
என் பெற்றோர்களின் அன்பினைச் சுமந்து
கொண்டு
வீட்டினுள் நுழையும் காஷ்மீரத்துக் குளிர் நிலவு..

கைகளை விரிக்கிறேன்
வெறுமை(தான்) படர்கிறது..,

நிச்சயமாய் இது
அந்நிய அழுகைதான்..

"எப்போது வீடு வருவாய்?"என
மீண்டும் மீண்டும் தந்தை வினவுகிறார்.

கம்பிகளுக்கூடே சமுத்திரம்
நகர்ந்து கொண்டிருக்கின்றது

நான் சத்தமிட்டுக் கேட்கிறேன்-
"அங்கே எல்லோரும் சந்தோஷமாக
இருக்கிறீர்களா? "
பதிலில்லை, தொடர்பு அறுகிறது.

சமுத்திரம் இப்போது
கம்பிகளை விட்டும் நகர்கின்றது

.......,
அமைதியாயிருக்கிறது கடல்
குளிரும்,
காஷ்மீரத்து முழு நிலவும்
மூடியிருக்க..!

●

காஷ்மீரத்துக் கவிதைகள் இரண்டு

## காஷ்மீரத்து வாழ்த்துத் தபாலட்டை

கிடப்பாக நான்கும்
நெடுப்பாக நான்கு அங்குலங்களும்
அளவான
அழகான காஷ்மீர்
என் வீட்டுத் தபால்பெட்டியில்
சுருங்கிக்கொள்கிறது.
நேர்த்தியை எப்போதும்
விரும்பியவன் நான் - இப்போது
அரையங்குல இமாலயங்களை
கைகளுக்குள் வைத்திருக்கிறேன்.
இது -
எனது தாயகம்.,
என்னை என் வீட்டோடு நெருக்குகிற
உறவு.
நான் மீள்கிறபோது
வர்ணங்கள் இவ்வளவு கவர்ச்சியாயும்,
'ஜெலும்' ஆற்று நீர் இவ்வளவு
தெளிவாயும் இருக்கப்போவதில்லை.
என் காதலும் இருக்காதுதான்
இவ்வளவு மிகையான வேட்கையுடன்..!

இன்னும் கழுவப்படாதிருக்கிற
ஞாபகங்களின்
பிரமாண்டமான கறுப்பு - வெள்ளைப்
புகைப்படச்சுருள்களில்
எனது ஞாபகங்கள்
மையம் விட்டு
விலகியதாய்த்தானிருக்கப்போகின்றன.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டானியல்

- வி.ரி. இளங்கோவன் -

## ஆதிக்கக் கொடுமைகளுக்கு எதிரான மனிதத்தின் போராளி!

**தலித் இலக்கியம்** என்பது இன்று தமிழ் இலக்கியப் பரப்பில் எல்லோராலும் பரபரப்பாகப் பேசப்படுகிறது, விவாதிக்கப்படுகிறது. புலம் பெயர்ந்த நாடுகளிலும் நம்மவர் மத்தியில் இது குறித்த சர்ச்சைகள், நோக்குகள் கூர்மையடைந்தே வருகின்றன. பல நூறு ஆண்டுகாலம் தீண்டாமைக் கொடுமைகளுக்குட்பட்டு வருந்திய, போராடிய ஒடுக்கப்பட்ட மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் பார்வையில், பரந்த சமுதாயத்தை நுணுகிக் காணும் இலக்கியங்களைத் தலித் இலக்கியம் என அழைக்கலாம்.

இந்தியாவில் மராத்திய, குஜராத்திய மொழிகளில் எழுதிவரும் தலித் எழுத்தாளர்களும் விமர்சகர்களும்தான் முதலில் தலித் இலக்கியங்கள் குறித்து விவாதித்து வந்துள்ளார்களென அறியமுடிகிறது. இந்த எதிர்ப்பிலக்கியத்தின் தாரதம்மியங்கள் குறித்துப் பரந்த கண்ணோட்டமும் கவனிப்பும் தமிழகத்தில் அண்மைக்காலமாகத்தான் இடம்பெறுகிறது.

ஆனால், வடஇலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் ஒருவனாகப் பிறந்து, நசிவுண்டு, துவண்டு, நிமிர்ந்து, போராடி, அமைப்புகளை நிறுவி, இறுதிவரை அந்த மக்களது உரிமைகளுக்காக உழைத்து, அந்த அனுபவங்களைப் புடமிட்டு இலக்கியமாகத் தந்த கே.டானியல் தமிழில் தலித் இலக்கிய முன்னோடியாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரைப் 'பஞ்சமரியப்' படைப்பிலக்கிய முன்னோடியாகக் காணலாம்.

டானியல் தனது போராட்ட வாழ்க்கைக்கான பாதையாக மாக்ஸிச, லெனினிச, மாவோயிச சித்தாந்த வழியினை ஏற்றுக்கொண்டவர். இதில் இறுதிவரை நம்பிக்கையுடன் நடந்தவர்.

'டானியல் என் கண்களில் மோட்டார் சைக்கிளில் ஓடிக்கொண்டே இருக்கின்றார். அவர் மோட்டார் சைக்கிளில் ஒரு பக்கம் சரிந்திருந்தே ஓட்டுவார். "என்ன.. டானியல் உது இடப்பக்கச் சரிவா..." என்று ஒரு நாள் அவரிடம் கேட்டேன். "இடப்பக்கம் சரிந்திருந்து ஓடுவதில் ஒரு சக்தி பிறக்கிறது..." எனச் சிரித்துக்கொண்டே கூறினார். ஆம்...அவர் வாழ்க்கையை இடது சாரியாகவே ஓட்டி முடித்தார்...' எனச் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் எழுதியது ஞாபகத்திலுண்டு.

ஆரம்பக் கல்வி மட்டுமே பெற்ற டானியல் அனுபவக் கல்வி நிரம்பப் பெற்றவர். கல்லூரிப் படிப்பையோ, பல்கலைக்கழகப் படிப்பையோ படித்துச் சான்றிதழ் பெற, வறுமை அவரை விடவில்லை. வாய்ப்பு வசதி அவருக்குக் கிட்டவில்லை. ஆனால் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் பலவும் அவரது எழுத்துக்களை ஆய்வு செய்கின்றன, விமர்சனத்துக்கு எடுத்துக்கொள்கின்றன. தனது 16வது வயதில் பொதுவேலைகளில் ஈடுபடத் தொடங்கிய டானியல் 21வது வயதளவில் பொதுவுடமை அரசியல் இயக்கவாதியாகிவிட்டார். தீண்டாமை ஒழிப்பு போராட்ட களங்களின் முன்னணிச் செயல்வீரனாக இயங்கினார். கொடுமை கண்ட இடங்களில் கொதித்தெழுவார். உடன் விரைந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவார். ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளமெல்லாம் நிறைந்தார். வடஇலங்கையில் எந்த குச்சுக் கிராமத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மகனும் தனக்கு ஓர் இன்னல், கொடுமை, அவமானம் நேர்ந்தால் டானியலிடம் வந்தால் ஆறுதல், உதவி, ஒத்துழைப்புக் கிடைக்கும் எனத் தெரிந்து வைத்திருந்தான். தினசரி அவரது வேலைத்தலத்துக்கு இப்படிப்பட்ட மக்கள் பலர் வருவதை யான் பல வருடங்களாகக் கண்டு வந்துள்ளேன். அந்தளவு மக்கள் அவர்மீது நம்பிக்கையும், பாசமும், மதிப்பும் வைத்திருந்தனர். அவர் எளிமையான தோற்றம், வாழ்க்கை நடைமுறைகளைக் கொண்டவர். ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டுத் துன்பப்படும் மக்களின் துன்பத்தில் உடனடியாகப் பங்குகொள்பவர். நண்பர்களை நேசிப்பவர், உதவுபவர். கண் பார்வை மங்கி வந்த இறுதிக் காலத்திலும், நண்பர்களின் நலன் விசாரிக்க பல ஊர்களுக்கும் அவரோடு போய்வந்ததை யான் மறக்கவில்லை.

தனிமனிதனாக வாழாமல், இயக்கபூர்வ தெளிந்த பார்வையுடனும், பரந்துபட்ட சாதாரண மக்கள் கூட்டத்தின் அன்புடனும், நெஞ்சுக்கினிய நண்பர்களின் தொடர்புடனும் வாழ்வைத் தொடர்ந்தவர். நேர்மையும் துணிவும் அதேவேளை பணிவும் அவரது இயல்புகள். அவரது இலக்கியங்கள் யாவும் சாதாரண மக்களின் துன்ப துயரங்கள், அவர்கள் அனுபவித்த கொடுமைகள், அதற்கெதிராக அவர்களது நிமிர்வு, ஒன்றிணைவு, போராட்டங்கள் பற்றியதே. மக்களிடம் போய்ப் பழகுதல், படித்தல், தேடல், சிந்தித்தல், புடமிட்டு எழுதுதல். இது தான் அவரது இலக்கிய வழி!

டானியல் என்ற மனிதனின். இலக்கியம் அவரிலிருந்து வேறுபட்டதல்ல. அவர் வாழ்க்கை வேறு. அவரது இலக்கியம் வேறு அல்ல. அவரது பார்வை, எண்ணம், எழுத்து எல்லாம் ஒரே பாதை தான். டானியல் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் சுயநலன்களுக்காக விலைபோனவரல்ல. தன் கருத்துக்களை விட்டுக் கொடுத்தவரல்ல. மாற்றிக் கொண்டவருமல்ல.

'டானியல்... நீ என்றுமே உனது கருத்துக்களை விட்டுக்கொடுத்தவன் அல்ல. அரசியலில் நாங்கள் இருவரும் ஒரே வண்ணத்தின் இருகோடுகள். எது கெட்டியானது என்பதுபற்றி எத்தனை தடவை சண்டையிட்டிருப்போம். ஆனால் அந்தச் சண்டைகள் எம்மை மேலும் நெருங்கிய நண்பர்களாக்கிவிட்டதே தவிர பகைமையை வளர்க்கவில்லை. உனது இலக்கிய நேர்மையை உணர்ந்தவர்கள் என்றுமே உன்னோடு பகைக்க முடியாது. நீ ஒரு நல்ல நண்பன். அற்புதமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளி...' எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதியமை நோக்கத்தக்கது.

டானியலின் நூல்கள் வெளிவந்த காலத்தில், அன்று அவற்றின் வெளியீட்டு விழாக்கள், அறிமுக - விமர்சனக் கூட்டங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் நடைபெற்றன. யாழ்ப்பாண நகர் முதல் வடபகுதிக் கிராமங்கள், திருமலை, கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு என பல்வேறு பகுதிகளிலும் அவரது நூல்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன. அவரை அழைத்து மக்கள் கலந்துரையாடினர். இன்றுவரை, டானியல் நூல்களுக்கான வெளியீட்டு விழாக்கள் - அறிமுக விழாக்கள் போன்று வேறு எழுத்தாளர்கள் நூல்கள் கிராமம் முதல் பட்டினங்கள் வரை விழாக் கண்டதில்லை எனக் கூறலாம். இதற்கு டானியலது மக்கள் பணியும், தொடர்பும் தான் காரணமாகும்.

டானியலது வேலைத்தலமான 'ஸ்ரார் கராஜ்' பலவிதமான மனிதர்களைச் சந்தித்திருக்கிறது. பலதரப்பட்டவர்கள் டானியலை நாடி வருவர். அங்குள்ள வாங்குகளும் இரும்புக் கதிரைகளும் எத்தனையோ சர்ச்சைகளைக் கேட்டிருக்கும். டானியலுடன் உரையாடிவிட்டு, உள்ளம் திறந்து கொட்டிவிட்டு, ஆலோசனை கேட்டுவிட்டு, உதவிகளும் பெற்றுவிட்டு போவோர் தினம் ஏராளம். டானியல் கலந்துகொண்ட அரசியல், இலக்கிய நிகழ்ச்சிகள், களங்கள் பலவற்றையும் திட்டமிடும் இடமாக 'ஸ்ரார் கராஜ்' அமைந்தது எனலாம். தனது தொழிற்துறைகளிலும் பார்க்க அரசியலுக்கும், இலக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர் டானியல். இதேபோன்று பலதரப்பட்ட இனிய நணர்பர்களைப் பெற்றுக்கொண்ட டானியல், கோட்பாடு, கொள்கை - இலட்சியம் என்று நோக்கும்போது நட்பிலும் பார்க்கக் கொண்ட கொள்கைக்கே முதலிடம் கொடுத்தவர் என்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும். அவர் முக்கிய பங்களிப்புச்செய்த, முன்னின்று நடத்திய இலக்கிய போராட்டங்களிலும், அரசியல் - தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களிலும் அவருடைய தாக்குதலுக்கு இலக்காகியவர்கள் பலர் அவருடன் நன்கு பழகியவர்களும், அவரது நண்பர்களுமாக இருந்திருந்க்கின்றனர்.

டானியல் ஒரு நடுநிலைவாதியல்ல. ஒரு பக்கச் சார்புடையவர். ஒரு வர்க்கச் சார்புடையவர். உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கத்தை எடுத்த டானியல், அந்த மக்களின் நலனுக்கு உகந்த விடயங்களிலேயே ஈடுபட்டார். தான் ஆதரிக்கும் மக்களின் நலனுக்குப் பாதகம் என்று அறிந்த கணமே அவர் எந்த விடயத்தையும், எந்த மனிதனையும் எதிர்த்துப் போராடத் தயங்கியதேயில்லை.

'தமிழில் தலித் இலக்கியம் படைத்த சிறந்த நாவலாசிரியர் என்று டானியலைக் கூறமுடியும். இவரது மார்க்சியப் பார்வையும், சாதியப் பார்வையும் முரண்படுவதாகத் தெரியவில்லை. மார்க்சியத்திற்குள் சாதியப் பார்வை ஒத்து இயங்குகிறது...' என்கிறார் கோவை ஞானி. இது தான் டானியலின் தெளிவு, பார்வை, அனுபவத் தேடல் எனலாம்.

டானியலின் நாவல்களில், யாழ்ப்பாணத்தின் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட பகுதியின் வரலாற்று ஓட்டத்தைக் கவனிக்கலாம். குடாநாட்டின், யாரும் காட்டியிராத இருண்ட பகுதிகளை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளார். டானியல். இதனால் அவரைச் சிலர் அறவே விரும்புவதில்லை. டானியலை ஒழித்துக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுமுண்டு. மக்கள் பணிகளில் ஈடுபட்ட 'குற்றத்திற்காக' சிறைவாசமும் கண்டவர். பல தடவை தலைமறைவு வாழ்க்கைக்கும் உள்ளானவர் டானியல்.

அன்றைய குடாநாட்டின் கோலங்களை, யாழ்ப்பாணத்திற்கு முதல் ரயில் வருகை, கார் வந்தமை, ஆங்கில மருத்துவ அறிமுகம், மாந்திரீகம், பேயாட்டம், தேங்காயடி, சேவல் சண்டை, வீடுகளின் அமைப்பு, திருவிழாக்கள், திருமணம், இழவு வீடு, கள்ளுக் கொட்டில், பத்திரிகை, வலை விரிப்பு - மீன் பிடிப்பு, சமயச் சடங்குகள், பறை முழக்கம், தீப்பெட்டித் தொழிற்சாலை ஆகியவற்றோடு வேளாள நிலச் சொந்தக்காரர் பலரின் ஆதிக்கக் கொடுமை, ஆடம்பரம், பெருமிதங்கள், சின்னத்தனங்கள், அடக்குமுறைகள், நிலப்பறிப்பு, கோவில்களில், பாடசாலைகளில், தேநீர்க் கடைகளில் உரிமை மறுப்பு, குளங்களிலும் குளிக்கத் தடை, பாலியல் ஏகபோகம் ஆகியனவும், இவற்றிற்கு எதிராக ஆங்காங்கே பஞ்சமரின் நிமிர்வு, ஒன்றிணைவு, போராட்டம், முற்போக்காளரின் ஆதரவு என்பனவெல்லாம் டானியலின் நாவல்களில் வரலாற்றோடு ஒட்டியதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. 'தீண்டாமைக் கொடுமை சமகாலப் பிரச்சினை தான்' என்பதனை டானியல் பேச்சில் மாத்திரமல்ல எழுத்திலும் உறுதிபடக் கூறியுள்ளார்.


'மனிதன் என்னே அற்பதமானவன்' என்ற மார்க்ஸிம் கார்க்கியின் வார்த்தைக்கேற்ப அற்புதமான மனிதன் டானியல்.

'டானியல்....
நல்ல மனிதத்தின் நாமம்.
உலகத்தை
வெல்லப் புறப்பட்டு வெண்சிறகு அசைத்திட்டுத்
தூரப்பறக்கத் துடித்த புறா ஒன்று..
கார எழுத்தின் கரங்கள்
யாருக்கும்
பாரவிலங்கின் பளுவென்றால்... ஓடிப்போய்
அந்த விலங்கை அகற்றத் துடித்தவொரு
பந்தத்தின் நாமம்
'டானியல்'
பண்டிதரும்,
வித்துவான் பரம்பரையும்,
பேனாவைக்
கொண்டிருந்த காலத்தில் கொடிபிடித்த கலைஞனிவன்.
சாதிக்கெதிராக சமர்க்களத்தில்
முன்னின்று
நீதிக்கே என்றும் நிழல் விரித்த ஆலமரம்.
நாடெல்லாம் சுற்றி நடந்த புயற்காற்று.
கூடுடைத்து நின்று கூவத் துடித்த குயில்.
தீண்டாமை யென்ற சிறுமைக்கு எதிராகப்
பூண்டோடதை அறுக்கப் புறப்பட்ட போராளி.....
........... ............ ............. ........ .........

என எழுதிய கவிஞர் புதுவை இரத்தினதுரையின் வரிகளும் நினைவில் கொள்ளத்தக்கன.

சாதாரண மக்கள் முதல் கல்வியாளர்கள் வரை கவனத்தில் கொள்ளும் மனிதாபிமானி, மக்கள் எழுத்தாளர், அரசியல் - சமூக விடுதலைப் போராளி டானியலின் எழுத்துக்கள் நீடித்து நிலைக்கும். இளந்தலைமுறை இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் டானியலது எழுத்துக்களைப் படிப்பதின் மூலம் வரலாற்று ரீதியாக வடஇலங்கை வாழ்வின் மறுபக்கத்தையும் அறிந்துகொள்ள முடியும் எனக் கூறலாம்.
இதைத் தெரிந்து கொள்வதும் அவசியமானதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிகாலையும் அந்திக்கருக்கலும்

என் சுயத்தை விழுங்கி
ஏப்பமிடப்போகும்
பரீட்சையொன்றின் அதிர்வுடனோ
அல்லது
நள்ளிரவில் வகையின்றியருந்திய
மதுவின் எஞ்சிய கசப்புடனோ
காலைப்பயணம் விரிவுகொள்ளும்

வானிலிருந்து கீழிறங்கும்பனியும்
துளிகளின் மென்மையுடன்
புற்களுடன் புணர்வதில்லை:
திட்டுத் திட்டாகவே
தரையினில் மிதக்கின்றன
புலம்பெயர்ந்த அகதியின்
இறுகிய இதயத்தைப்பிரதியெடுத்தாற் போல

இரவில் உதிரும்
நட்சத்திரங்களிடையே,
மழலையாகி மாறி
பால்வீதியில் சுழன்றாடும்
ஒளியாண்டுவாழ்வு குறித்தஇலயிப்பில்
விரிவுரைகள் தினம் விரைவுபெறும்

மதியவுணவுடன்
நதியின் மொழியுடன்
தொடர்புகொள்ளும்
மௌன சமிக்ஞைகளை
ஒவ்வொருமுறையும்
எவரோ வந்து
கலைத்தபடியிருக்கின்றனர்

வசந்தகாலங்களில்
தோழியொருத்தியின்
கைகளைக்கோர்த்தபடி
நதியோரமாய் நடக்கும்
நிர்மலமான ஆசைகள்
இலைகள் உதிரும்வரை நிறைவேறியதில்லை

உறைந்துபோன நதியின் மறைவிடங்களில்
இருளப்பிய காரின் கண்ணாடிகளுக்குள்
என்னையும் அவளையும்
அறியும் முயற்சிகள்
உணர்வுகள் அரிதாரமின்றியுருகும்
குளிர்காலத்துப்பொழுதுகளில் மட்டுமே
நிகழ்கின்றன

எப்போதாவது
மையங்கொள்ளும் ஒன்றுகூடல்களில்
அனைத்தும்மீறி
நவீனத்துவப்பெண்ணே
வார்த்தைகளால் துகிலுரியப்படுவாள்
ஆண்களின் கனத்துப்போன
குரல்களின்பெருக்கத்தால்

மூர்க்கமாய்
குதறிக்கிழிக்கும் நாய்களிடையே
இணையவிரும்பும்
என் நூற்றாண்டுகால தொன்மத்தை,
நேற்றுக்கிறங்கிய விழிகளிலிருந்து
விரியும் நெருப்புப்பார்வைகள்
உண்மையின் ஆழத்தினுள்
புதைத்துக் கொல்லும்

தாங்கள்
வந்ததற்கான அடையாளங்களாய்,
இருக்கைகளில்
நிரப்பமுடியாத மௌனத்தை
வீசிச்செல்கின்றனர்
நவீன பாஞ்சாலிகள்

அதில்
நாளையமரும் தங்கள் குழந்தைகள்
கிளர்ந்தெழுவதற்கான
சின்னஉரசல்களை
அந்த சப்தமின்மைகள் உருவாக்கலாம்
என்கின்றதான கனவின்மீதியை
மட்டும் காவியபடி
கலைகின்றனர்
ஒவ்வொருபொழுதுகளிலும்.

2001.11.19 அதிகாலை 2.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி *காசி அல்குசைபி* அரபுலகின் தற்கால குறிப்பிடத்தக்க புத்திஜீவிகளுள் ஒருவர். தன் படைப்பாளுமைகளுடாக அரபுக் கலாசார இலக்கியத்தளத்தில் தனக்கென்றே ஓர் இடத்தையும், அந்தஸ்தையும் பெற்றிருப்பவர். ஐக்கிய ராச்சியத்துக்கான சஊதித் தூதுவராக மிகவும் பொறுப்புவாய்ந்த அரச பணியில் ஈடுபட்டிருப்பினும், கலை கலாசார இலக்கியத் துறைகளில் இன்னும் தனது பன்முகப் பங்களிப்பினை வழங்கிக் கொண்டு வருகிறார். லண்டனில் இருந்து வெளியாகும் அரபு இதழான 'அல்-ஹயாத்'தில் இவர் எழுதிய 'தியாகிகள்' என்ற கவிதை அண்மையில் இராஜதந்திர அரசியல் வட்டாரத்தில் ஒரு பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் கவிதை பலஸ்தீன தியாகத் தாக்குதல் போராளிகளை போற்றிப் புகழ்ந்திருப்பதோடு அவர்களின் போராட்டத்தின் பாலான கவிஞரின் ஈடுபாட்டையும் வெளிப்படுத்தியிருந்தது. 'அல்வசத்' அரபு இதழொன்றுக்கு வழங்கிய இந்நேர்காணலில் அக்கவிதை ஏற்படுத்திய அசைவுகள் குறித்தும், அரபுலக நிலைமைகள் குறித்தும் தன் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். 'அஷ்ஷர்குல் அவ்சத்' என்ற மற்றுமொரு அரபுப் பத்திரிகைக்கான நேர்காணலில் தன் கவிதை பற்றிய சலசலப்புகளுக்குப் பிறகு, பிரித்தானியாவில் வைத்து தனது மகன்கள் யூதர்களினால் தாக்கப்பட்டுள்ளனர் என்றும், தான் ஒரு தியாகியாக மரணிப்பதை விரும்புகிறேன் என்றும் தெரிவித்துள்ளார். சமகால மத்திய கிழக்கு நிலைமைகள் தொடர்பாகவும், பரந்தளவான பிற கலாசார அரசியல் பதிவுகளுக்காகவும் இந்நேர்காணல் மொழிபெயர்த்துத் தரப்படுகிறது.

**ஆங்கிலவழி தமிழாக்கம்:**
**எம்.கே.எம்.ஷகீப்**



▶ விமர்சனங்களையும், சலசலப்பையும் ஏற்படுத்தியிருந்த *தியாகிகள்* என்ற உங்கள் கவிதை பற்றிய கதையுடன் தொடங்குவோம். ஆயத் அல்-அக்ராஸ் என்ற பலஸ்தீன இளம்பெண் தியாகத் தாக்குதல் போராளியை புகழ்ந்து பாடும் அக்கவிதையுடன் பிரித்தானிய வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களம் உடன்படவில்லையென்று அதன் பேச்சாளர் தெரிவித்திருந்ததாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தன. நீங்கள் புகழும் இந்தத் தியாக நடவடிக்கையை பிரித்தானியா ஒரு பயங்கரவாதச் செயலாகவே கருதுகிறது. இத்திணைக்களத்தின் ஆட்சேபனை உங்களுக்கு நேரில் - சில பத்திரிகைகள் எழுதியது போல நீங்கள் அத்திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு - உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்பட்டதா? அப்படியானால், இவ்வாறான ஒரு எதிர்வினையை தோற்றுவித்திருக்கக் கூடிய காரணம் எதுவாக இருக்குமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

இந்தக் கூப்பாடுகளின் நோக்கம் என்னவென்பது தெளிவானது. இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க வலதுசாரி கடும்போக்காளத் தீவிரவாதிகளுக்கு அல்லது யுத்தக் குற்றவாளி ஏரியல் ஷரோனது ஆதரவாளர்களுக்கு எதிராக எழும்பும் எந்தக் குரலையும் நசுக்கிவிடுகிற ஒரே நோக்கமே இக்கூப்பாடுகளுக்குப் பின்னாலிருப்பது. இவர்களுக்கு ஆதரவாக எழும்பும் எந்தக் குரலும் கண்டுகொள்ளப்படாது. ஆனால் அவர்களை எதிர்த்து அல்லது அவர்களுக்கு எதிராகச் செய்யப்படும் இவ்வாறான தியாகத்தாக்குதல்களைப் புகழ்ந்து ஏதாவது குரல் எழும்பினால் போதும், உடனே மௌனமாக்கிவிடுவார்கள். என்றாலும் நான் இங்கு இது தொடர்பில் மேலதிகமாக சில விடயங்கள் சொல்கிறேன். தேடலுள்ளோருக்கு உதவியாகவுமிருக்கும் இது. நான்

# எங்கள் கனவுகள் கனவுகளாகவே இருக்கும்

**- கலாநிதி காசி அல்குசைபி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980ல் 'ரோஜாக்களும் சன்ஆவின் கூந்தலும்' என்ற கவிதை நூலொன்று வெளியிட்டேன். இது லெபனானின் முதலாவது தியாகத் தாக்குதல் போராளி சன்ஆ மஹைதலியைப் புகழ்ந்து எழுதப்பட்ட கவிதைகள். 'கற்களாலான கழுத்துவடம்' என்கிற இன்னொரு கவிதை நூலை 1990களில் வெளியிட்டேன். இது பலஸ்தீன இந்திபாதா பற்றியது. 'உங்கள் கண்களுக்கு ஓர் அர்ப்பணிப்பு' என்ற எனது மூன்றாவது புத்தகம் பலஸ்தீனின் இளம் தியாகி முஹம்மத் அல்-துர்ராவுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. (இச்சிறுவன் தன் தந்தையின் மடியிலேயே பரிதாபமாக சுட்டுக்கொல்லப்படுவது ஒளிப்படமாக எடுக்கப்பட்டதும், அது பரவலான கவனிப்பைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.-மொ.ர்) இவையெல்லாவற்றுக்கும் முதல் 1970களில் 'கொடியில்லாத ஒரு போராட்டம்' என்ற கவிதை நூலை வெளியிட்டு அதன் வருவாய்களையெல்லாம் பலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்கு வழங்கினேன். பலஸ்தீனியர்கள், மிகக் கொடுரம்வாய்ந்த இனவாத சக்திகளுடனான ஒரு போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். தற்கால அரசியல் வரலாற்றில் மிக மோசமான யுத்த இயந்திரமொன்றுக்கு எதிராக அவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த விடுதலைப் போரில் ஈடுபட்டு மரணிப்பவர்களை நான் இப்போது மட்டுமல்ல எப்போதுமே 'தியாகிகளாய்த்தான்' கருதுவேன். இந்தப் பிரயோகத்தை விரும்பாத சியோனிஸ்டுகள் அவர்கள் பாட்டில்கிடக்கட்டும். அவர்களால் ஜீரணிக்க முடியவில்லையென்றால் சாக்கடலில் போய் வயிறு முட்ட மட்டும் தண்ணீர் குடித்துக் கொள்ளட்டும். பிரித்தானிய வெளிவிவகாரத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டேன் என்ற விடயத்திற்கு வருகிறேன். இந்த சேறுபூசல்களெல்லாம், பொய்களையே தங்கள் கண்டுபிடிப்புகளாகக் கொண்டிருக்கிற, பொய்களையே நம்பிக் கொண்டிருக்கிற இனவாத எழுத்தாளர்களது வேலை. திணைக்களத்துடனான எனது உறவு சுமுகமாக புரிந்துணர்வான அடிப்படையில் இன்னும் இருந்துகொண்டுதானிருக்கிறது.

▸ **ஆரம்பத்தில் அரபுகளின் கோரிக்கை முழுப்பலஸ்தீனமாக இருந்தது. பின்பு அந்தக் கனவு ஜெருசலமாக, காசாவாக, மேற்குக்கரையென சுருங்கிப் போனது. இப்போது நாப்லஸ், ஜெனின், ரமல்லாஹ், பங்குனி 29க்கு முதலிருந்த பிரதேசங்கள் என வேறொரு வடிவத்தில் சுருங்கியிருக்கிறது! இப்படிப்போனால் எதிர்கால சந்ததியின் உரிமைக்கோரிக்கை எதுவாக மாறிவிடும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? இப்படியான ஒரு வெட்கங்கெட்ட விட்டுக்கொடுப்பு தன் உரிமைகளை தானே தாரைவார்க்கும் இந்த இழிநிலை ஏன் உருவாகியது?**

மாற்றமுடியாத சில இயற்கை நியதிகள், சட்டங்கள் இருக்கின்றன என்பதை நாம் முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும். அது இறைவிசுவாசிகள், நாஸ்திகவாதிகள் என்ற பாகுபாடுகள் இல்லாமல் அனைவர்பேரிலும் பிரயோகமாகக் கூடியது. இந்த விதிகளில் ஒன்றுதான், வெற்றி எப்போதும் பலம்பொருந்தியவர்கள் பக்கம் என்பது. இந்தப் பிணக்குகளின் ஆரம்பத்திலிருந்து பார்த்தாலே சியோனிச சக்திகள் தான் எண்ணிக்கையிலும் சரி ஆயுத பலத்திலும் சரி - இஸ்ரேல் இதை பலமுறை மறுதலித்தாலும் கூட- பலம் பொருந்தியவர்களாகவே இருந்துவருகிறார்கள். அதன் இராணுவ பலம் மிக உயர் செல்வாக்குகளையுடையதும் கூட. இஸ்ரேலியர்களது சொந்தத் தகவல் ஆவணங்களின்படி 1948 யுத்த காலத்தில் அராபிய படைபலத்தைவிட இஸ்ரேல் இரட்டிப்புப் படை பலம் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகிறது. இராணுவத்துடன் தொடர்பான அனைத்து நிலைகளிலும் இஸ்ரேல் உச்சநிலையில் இருக்கிறது. ஆக, இராணுவ படைபலம்தான் கள நிலையைத் தீர்மானிக்கிறது. இவ்வளவு படைபலம் பொருந்திய இஸ்ரேலிய இராணுவம் தன் ஆதிக்க பலத்தாலேயே பலஸ்தீனைச் சுரண்டி எடுத்திருக்கின்றது என்ற உண்மை எல்லாருக்கும் தெரிந்த ஒன்றுதான். அரபிகள் தங்கள் நல்லெண்ணத்தாலும், தாராளத்தன்மையாலும் வழங்கியவைகள் அல்ல அவைகள்.

எனவே, இவ்வாறான இராணுவ பலத்தாலும், சர்வதேச அழுத்தங்கள், மற்றும் எங்களது சொந்தப்பலவீனங்கள் போன்றவற்றாலும் நாம் இந்த சுருங்கிப் போன ஒரு சுதந்திர பலஸ்தீனத்தைக் கோரும் நிலைக்கு வந்திருக்கிறோம். இதுதான் பலஸ்தீன சட்டபூர்வ தலைமைத்துவம் ஏற்றுக்கொண்ட குறைந்தளவு எல்லை உடன்பாடும் கூட. இதை எதிர்க்கிற உரிமை வேறு யாருக்காவது இருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆனால், இந்த எல்லை அளவானது, ஏனைய அளவீடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகச் சிறு அளவானது. 1947ல் ஐ.நா தீர்வு 55 வீதமான பலஸ்தீனிய நிலங்களை இஸ்ரேலுக்கு உரித்தாக்கியது. ஆனால், 1948ன் யுத்த முடிவுகாலத்தில் கிட்டத்தட்ட 80 வீதமான பலஸ்தீன பூர்வீக நிலத்தை இஸ்ரேல் சுவீகரித்துக்கொண்டது. இப்போது பலஸ்தீனியர்கள் எஞ்சிய அந்த 20 வீத நிலத்தைத் தான் கோருகிறார்கள். ஆனால் யுத்தக் குற்றவாளி ஏரியல் ஷரோன் 5 வீதமான நிலமே வழங்கப்படுமென்றும், அதுவும் சுயாட்சிப் பிரதேசமாக அல்லவென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார். மேற்குக் கரை, காசா, கிழக்கு ஜெருசலம் உட்படவான ஒரு சுதந்திர பலஸ்தீனம் பெறப்படும் என்பது எனது நம்பிக்கை. நான் எதிர்வுகூறக்கூடிய ஒருவன் இல்லை, இது எனது தனிப்பட்ட கருத்து. அத்துடன் இந்தச் சுதந்திரத்திற்கான போராட்டம் மிகக் கடுமையானது, நிறைய இரத்தங்கள் சிந்த வேண்டிய போராட்டம். அது 5-10 வருடங்களைக் கூட எடுக்கலாம். இன்றைய சந்ததி, அதன் பலவீனங்கள் எவ்வளவு தான் இருப்பினும் இதைவிடக்குறைவாக எதையும் ஏற்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இதுதவிரவும், எதிர்காலச் சந்ததி எந்தப் பாதையில் எப்படிப் போவார்கள் என்பது இறைவனுக்கு மட்டுமே வெளிச்சமானது.

▸ **அரபுகளும், முஸ்லிம்களும் தங்களைத் தற்பாதுகாத்துக் கொள்ளக்கூடிய, எதிர்த்துப் போரிடவேண்டி இருக்கிற ஒரு சாத்தானிய சக்தியாக மேற்கு தற்போது மாறியிருக்கிறது. இவ்வாறான நிலைமையை எதிர்கொள்வதற்கான சிறந்த வழி எதுவாக இருக்குமென்று கருதுகிறீர்கள்? இந்த ஒரு சிந்தனைப் போக்கிற்குக் காரணம் பாடசாலைக் கற்கை விதானங்கள்தான் என நினைக்கிறீர்களா? மேற்கு குற்றம்சாட்டுகிற 'மற்றவர்களை நிராகரிக்கிற' போக்கின் ஊற்றே இந்த கல்வி முறைகள் தான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்தோன்றித்தனமான நியாயப்படுத்தல்களால் உண்மையை எப்போதும் மூடி மறைத்துவிட முடியாது. அமெரிக்காவே ஒரு பயங்கரவாதிகளின் நாடு. ஆனால் யாருமே அதன் கல்வித் திட்டங்களைக் குறைகூறுவதுமில்லை அதன் ஜனநாயகக் குறைபாடுகளைக் கண்டுகொள்வதுமில்லை. உண்மையில் இந்தப் பயங்கரவாதம் என்ற விடயம் இடியப்பச் சிக்கல் நிறைந்தது. அது கவனமான ஆய்வை, அவதானிப்பை, பிரயோகிப்பை வேண்டிநிற்பது.

நான் இங்கு மேற்கு என்ற இந்த ஒட்டுமொத்தமான பொதுமைப்படுத்தலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை முதலில் சொல்லிக் கொள்ளவேண்டும். ஏனென்றால் ஸ்விட்சர்லாந்து, டென்மார்க், பின்லாந்த் போன்றவைகள் கூட மேற்கு நாடுகள் தான். ஆனால் அவைகளுக்கும் முஸ்லிம் அல்லது அரபு நாடுகளுக்குமிடையே எந்தப் பிரச்சினைகளும் இருப்பதில்லை. பிரச்சினையே அமெரிக்காவோடுதான், அதுவும் குறிப்பாக செப்டம்பர் பதினொன்றுக்குப் பிறகு. தற்போது அதற்கு ஒரு வகை நோய் ஏற்பட்டிருக்கிறது. அது தலைமைத்துவங்களையும், பொதுமக்களையும் மிக மோசமாகப் பாதித்திருக்கிறது. அதற்கு எங்கு பார்த்தாலும் யாரைப்பார்த்தாலும் பயங்கரவாதமாக, பயங்கரவாதிகளாகத்தான் தெரிகிறது. எல்லா இடங்களிலும் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்த வகையான நோய்கள், பைத்தியக்காரத்தனங்கள் இயல்பிலேயே கொஞ்ச நாட்களில் குறைந்து அல்லது இல்லாமலேயே போய்விடக்கூடியது. அது ஏற்கனவே ஆட்டம்காணத் தொடங்கிவிட்டதற்கான அறிகுறிகள் இப்போது தெரியத் தொடங்கியிருக்கின்றன. மிக இலகுவாக வெற்றிகொள்ளப்படுமென்று சொல்லப்பட்ட ஆப்கான் யுத்தம் பல யுத்த எதிர் விளைவுகளுடன் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.!

ஈராக்கிற்கு எதிரான தாக்குதல் எல்லாப் பக்கமிருந்தும் பல எதிர்ப்புக்களையும், பலத்த ஆட்சேபனைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த எதிர்ப்பு அமெரிக்காவுக்கு தன் நடவடிக்கைகளை பிற்போடச் செய்திருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் அது அந்த நினைப்பையே கைவிட்டு விடும். இவ்வாறானதொரு குழப்பமும், மன உளைச்சலும் மிகுந்த சூழலுக்கு அதன் புத்தி ஜீவிகளும், எழுத்தாளர்களும் கூட பலிக்கடாவாகியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நாட்டின் இந்த நோயைத் தேற்றுவதற்கான அல்லது மூடிமறைத்து ஆற்றுப்படுத்துவதற்கான வேலைகளில் ஈடுபடுகிறார்கள். தங்களை நியாயப்படுத்திக் கொள்ளும் இலகுவான விடைகளை கண்டுபிடிக்கத் தொடங்குகிறார்கள். அதுதான் அவர்கள், எங்கள் பாடசாலைக் கல்வி விதானங்கள் தான் எதிர்ப்புணர்வைத் தூண்டிவிடுகிறதென்றும், அதுவே எல்லாவற்றுக்கும் காரணமென்றும் கதை பரப்புகிறார்கள். வேறும் சிலர், ஜனநாயகப் போதாமையே காரணம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான தான்தோன்றித்தனமான நியாயப்படுத்தல்களால் உண்மையை எப்போதும் மூடி மறைத்துவிட முடியாது. அமெரிக்காவே ஒரு பயங்கரவாதிகளின் நாடு. ஆனால் யாருமே அதன் கல்வித் திட்டங்களைக் குறைகூறுவதுமில்லை அதன் ஜனநாயகக் குறைபாடுகளைக் கண்டுகொள்வதுமில்லை. உண்மையில் இந்தப் பயங்கரவாதம் என்ற விடயம் இடியப்பச் சிக்கல் நிறைந்தது. அது கவனமான ஆய்வை, அவதானிப்பை, பிரயோகிப்பை வேண்டிநிற்பது. உதாரணத்திற்கு, குற்றங்களுடன் தொடர்பான பயங்கரவாதம் என்று ஒன்றிருக்கிறது. பாதாள உலகத்தினர், போதைப்பொருள் வியாபாரிகள் என பலர் தங்களுக்கு எதிராக இருக்கும் பொலிசாரை, நீதிபதிகளை என பலரையும் கொலை செய்கிறார்கள். பிரிவினைக் கருத்தோடு தோன்றுகிற பயங்கரவாதச் செயற்பாடுகளும் இருக்கின்றன. முதலாவது சொல்லப்பட்டதற்கும், இதற்கும் இயல்பான வித்தியாசங்கள் வேறுபாடுகள் உண்டு. மூன்றாவது வகையிலான பயங்கரவாதமாக அப்பாவி மக்களைப் படுகொலை செய்வதையே குறியாகக் கொண்ட 'புரட்சிகர'ப் பயங்கரவாதத்தைக் குறிப்பிடலாம். பயங்கரவாதச் செயற்பாட்டைக் கையாளுகிற விடுதலை இயக்க வகையிலான பயங்கரவாதமுமுண்டு. மதத்துடன் தொடர்பான பயங்கரவாதம் என்று இன்னொரு வகையைக் காணலாம். இதற்கு உதாரணமாக Jones பாதிரியார் தன் நூற்றுக் கணக்கான சீடர்களை நஞ்சூட்டிக் கொன்றதை உதாரணமாகச் சொல்லலாம்.



ஜப்பானில் சில சமூகத்தாரிடையே பயங்கரவாதச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் அது மிகக் கவனமான அறிவார்ந்த அணுகலை வேண்டி நிற்கின்றன. அதை விடுத்து குற்றவாளிகளுக்கும், அப்பாவிகளுக்குமாய் சேர்த்து குண்டு மாரி பொழிந்து அவற்றை இல்லாதாக்கிவிடலாம் என்பதெல்லாம் சரியான அணுகலாக இருக்காது. அரபு, இஸ்லாமிய உலக கல்வித்திட்டங்கள், பாடவிதானங்கள் மிகப் பின்தங்கியதாகவே இருக்கின்றன. அவை எந்த விதத்திலும் பயன்தருகிற ஒன்றுமல்ல. பட்டதாரிகள் வேலையற்றிருக்கும் நிலையைத் தான் அது உருவாக்கி வருகிறது. நலன்காப்பு, நலஉரிமை என்ற அடிப்படையில்தான் அங்கேயே பாடத்திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கின்றனவே ஒழிய அது எந்தப் பாரிய, எதிர்பார்க்கப்படும் நல்விளைவுகளையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. உண்மையில் இதுதான் கல்விமுறைகளை, பாடவிதானங்களை மறுபரிசீலனை செய்வதற்கான தருணம். இது அமெரிக்காவைத் திருப்திப்படுத்தவோ, அல்லது அங்கேயே கல்வி முறைகளில் இருக்கும் இஸ்லாமிய அடையாளங்களை இல்லாமல் செய்வதற்காகவோ அல்ல. மாறாக இருபத்தோராம் நூற்றாண்டை சவாலுடன் எதிர்கொள்கிற திறமைமிகு கல்வியாளுமைகளை உருவாக்குவதற்காகச் செய்யப்படவேண்டியது. இப்போது நாங்கள், எம்மைப் பற்றிய சில சுய விமர்சனங்களைச் செய்து கொள்வோம். நாம் பொதுவாக பிற சமூகத்தவருடன் உரையாடும் போது நமது பெருமைமிக்கதும், முன்னேற்றகரமானதாக, முற்போக்கானதாக இருந்த எமது இறந்த கால வரலாறுகளைச் சொல்லி எங்களை நாம் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக் கொள்கிறோம். ஆனால், தற்கால இஸ்லாமிய உலகின் இயலாத்தனங்களைப் பற்றி எதுவுமே கதைப்பதில்லை.. எல்லாம் இறந்த காலப் பெருமிதங்கள்தான்.! ஆனால் நாம் முதலில் எங்களை ஒரு கேள்வி கேட்டுக் கொள்ளவேண்டும். அதாவது ஏன் எங்களால் இந்தப் பெருமை மிகு வரலாற்றை இன்றைய சமகால வரலாறாக ஆக்க முடியாதிருக்கிறது? என்ற கேள்வி. குறிப்பாக சஊதி மக்களுடன் தொடர்பான இன்னொரு கேள்வியும் எனக்கிருக்கிறது. ஏன் முழு முஸ்லிம் உலகினருக்கும் பாதகம் ஏற்படுத்துகிற விதத்திலான 'பயங்கரவாதச்' செயற்பாட்டில் அனேகமான சஊதிகள் ஈடுபட்டார்கள் என்ற கேள்வி! எல்லாச் சமூகங்களிடையேயும் தமக்கேயுரித்தான பலவீனங்கள், குறைகள் இருக்கலாம், அம் மக்களில் சிலர் தவறாக வழிநடத்தப்பட்டிருக்கலாம் என்று ஓர் ஆறுதலுக்காக நாம் சொல்லிக் கொண்டாலும் இதுவிடயத்தில் எங்களிடையே ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இது நாம் இதுவரைச் செய்யாத, இப்போது கட்டாயம் செய்யவேண்டிய ஒரு விடயம் என நினைக்கிறேன்.

எங்களின் பிரதான பொது எதிரியான இஸ்ரேலுடனான எங்கள் மோதலில், எதிர்ப்புகளில் நாங்கள் உரத்துப்பாடுகிற எங்கள் தேசப்பற்றுக் கீதங்களில் 'மில்லியன் கணக்கான எம்மவர்கள் எங்கே?' என்ற வரியினை பலமுறை திருப்பித் திருப்பிப் பாடுவோம். எங்களின் எண்ணிக்கை மூலமான இந்த எதிர்பார்ப்பின் மூலம் எங்கள் எதிரிகளை முழுமையாக அழித்துவிடுவோம் என்ற அச்சுறுத்தலை நாம் மறைமுகமாக எதிரிகளுக்கு விடுக்கிறோம். ஆனால் உண்மையிலேயே நாமெல்லாம் ஒருமித்த குரல்கள்தானா?, எங்கள் இந்த குரல்கள் ஆளுமைமிக்கதுதானா என்றெல்லாம் எனக்கு கேள்வியாயிருக்கிறது. சிலவேளை அரபுக் கவிஞர் நிஸார் கப்பானி சொன்னது போல "எல்லோருமே செத்துவிட்டார்களா?" அல்லது ஒரு பலஸ்தீன வயதான தாயொருத்தி விரக்தியினால் பலமுறை சொல்லியது போல "அரபிகள் எல்லோருமே செத்துவிட்டார்களா?"

ஒரு நாட்டின் தேசிய பலம், ஆளுமை என்பது பல விடயங்களில் தங்கியிருக்கிறது அல்லது பல விடயங்கள் இணைந்ததாக இருக்கிறது. அதன் மனித வளங்கள், அதன் புவியியல் அமைவு, பொருளாதாரம், தொழிற்றுறை, அதன் இராணுவ படை மற்றும் பயிற்சிப் பலம் போன்ற பல அம்சங்கள் பொருந்தியதாக அது இருக்கிறது. நான் மேற்சொன்ன இந்த அம்சங்கள் கல்விரீதியான ஆய்வுகள், வியாக்கியானங்களுக்கு உட்படக்கூடியவைகள். ஆனால் இவை தவிர வேறொரு காரணியொன்று இருக்கிறது. அதை நாம் பார்க்கவோ படித்துத் தெரிந்து கொள்ளவோ முடியாதது. இது அரசியல் விஞ்ஞானத் துறை மாணவர்களால் -நானும் அவர்களில் ஒருவன்தான்- காரணி என அழைக்கப்படுகிறது. இந்த காரணியின்றி மற்ற எந்தக் காரணிகளும் தன் பங்கினை முழுமையாக வழங்கிவிடமுடியாதென்பது ஒரு குறிப்பிடத்தக்க விடயம். இதை 'தன்னம்பிக்கை', 'சுய வேட்கை', 'உந்துதல்' என பல பெயர்களில் அழைக்கலாம். ஆனால் நான் இதனை 'இருப்புக்கான அடிப்படை உணர்வு' என அழைத்துக் கொள்கிறேன்.

நீண்ட விளக்கத்தை வேண்டி நிற்பதும், ஏற்கனவே முஹம்மத் ஆபித் அல்-ஜப்ரி, முஹம்மத் ஜாபிர் அல்-அன்சாரி போன்ற சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டதுமான இந்த இருப்புக்கான உணர்வு என்ற காரணி அரபு மற்றும் முஸ்லிம்களிடையே போதுவான அளவில் இருக்கின்ற



வெற்றி தோல்விகள்
பொதுவாக
உலகின் எல்லா
தேசங்களுமே,
தேசியங்களுமே
எதிர்கொள்வதுதான்.
ஆனால்
அடையாளம் என்பது வேறு.
பழசாகிப்போனால்
கழற்றியெறிந்துவிடுகிற
சப்பாத்தோ,
போடமுடியாத நிலையில்
நான் கழற்றிப்போடுகிற
ஒரு சட்டையோ,
காலப்பொருத்தமற்றது என்று
கருதி விற்றுவிடக்கூடிய ஒரு
பழைய வாகனமோ அல்ல
எனது அடையாளம் என்பது.
எனது அடையாளம் என்
ஒவ்வொரு கலங்களிலும்
ஊறிக் கிடப்பது.
என் உடலின்
இரத்த ஓட்டம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'உங்கள் கண்களுக்கு ஓர் அர்ப்பணிப்பு' என்ற எனது மூன்றாவது புத்தகம் பலஸ்தீனின் இளம் தியாகி முஹம்மத் அல்-துர்ராவுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. (இச்சிறுவன் தன் தந்தையின் மடியிலேயே பரிதாபமாக சுட்டுக்கொல்லப்படுவது ஒளிப்படமாக எடுக்கப்பட்டதும், அது பரவலான கவனிப்பைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.)

ஒன்றல்ல. அரபுகள் செத்துவிட்டார்கள் என்ற கோஷம் உண்மையில் சுய அனுதாபத்தினாலோ அல்லது இயலாமையினாலோ வருகின்ற ஒன்றல்ல, மாறாக அவர்களை உசுப்பேற்றிவிடுவதற்காக அடிக்கடி சொல்லப்படுகின்ற வார்த்தை அது. அதை அடிக்கடி நானும் சொல்லிக் கொள்கிறேன்.

▶ கலாநிதி துருக்கி அல்-ஹமாத்தினதைப் போன்றே உங்கள் நாவல்களும் யதார்த்தமானவையல்ல என்ற விமர்சனத் தாக்குதல்களுக்குள்ளாகிறதே..! ஏன்?

எவரினது கருத்தும் உங்கள் சுயகருத்தை ஆளுமைப்படுத்துவதற்கு அனுமதிக்காதீர்கள். இப்படிப் பார்க்கப்போனால் எத்தனையோ எதிர்விதமான விமர்சனங்களை அரபுலகில் பார்க்க முடியும். முதனப்பி, ஷவ்கி போன்றோர் கவிஞர்களே அல்லர் என்றார்கள் சிலர். முஹம்மத் அப்துல் வஹாபின் இசை மேற்கிசையின் தாக்கத்திற்குட்பட்டது, அதிலிருந்து உள்வாங்கப்பட்டது என்றார்கள் சிலர். பிரபல நாவலாசிரியர் தாஹா ஹுசைன் அரபிகளதும், இஸ்லாத்தினதும் எதிரிகள் என்றார்கள் வேறும் சிலர். இப்படியான விமர்சனங்களின் பட்டியல் நீண்டது. எம்மைப் பற்றிய விமர்சனங்களுக்கான காரணத்தைச் சொல்வதானால் அவர்கள் சொல்கிற அந்த 'யதார்த்தமற்றது' என்ற விடயத்தினால் நாங்கள் பரவலாக மறுபுறத்தில் அங்கீகரிக்கப்பட்டிருப்பது காரணமாக இருக்கலாம். இதற்கு இன்னொரு காரணம் நாங்கள் ஒரு குறித்தளவான சுதந்திர எல்லைகளுக்குள் இருந்து எழுதுகிறோம். இந்த சுதந்திர எல்லைகள் அந்த சொகுசு விமர்சகர்களுக்கும், பல்கலைக்கழக இலக்கிய ஜாம்பவான்களுக்கும் கிடைக்காத ஒரு விடயம். எனவே எங்கள் நாவல்களை அவர்கள் அப்படிச் சொல்வதொன்றும் ஆச்சரியமானதல்ல.

▶ அரபுலகில், தன் எழுத்துக்களுடன் வாழ்கிற மாதிரியான எந்த ஒரு நேர்மையான எழுத்தாளனையும் காணக் கிடைப்பதில்லை. இதன் காரணமாக அவனது எழுத்துக்களும் அநீதிகளை, ஊழல்களை எதிர்த்துப் போராடக் கூடிய ஆயுதமாக மாறுவதுமில்லை. ஒரு எழுத்தாளன், ஒரு புத்திஜீவி தன் சமூகத்தில் எந்த மாதிரியான ஆளுமைகளை, தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென்று கருதுகிறீர்கள்?

இறைவன் அருள்பாலித்த ஒரு சிலரைத் தவிர அரபுலகில் எவருமே சட்டரீதியான முறையில், நேர்மையான முறையில் சம்பாதித்து வாழ்கிறவனாக இல்லை. எத்தரப்பு ஊழியனாக இருக்கட்டும் அவன் தன் மாதாந்த சம்பளத்துடன் திருப்தியாக வாழ்கிறானா சொல்லுங்கள்..இல்லை.! அரபுலகில் பொதுவாக அரசியல், பொருளாதார, கல்விசார் துறைகள் மிகப் பின்தங்கியவொன்றாகவே இருந்து வருகிறது. இது, இரத்த ஆறுகளை ஓட்டாத ஒரு மறுசீரமைப்புப் புரட்சியை வேண்டி நிற்கிறது. அரசியலிலுள்ள சர்வாதிக்கம், நடைமுறை ஊழல்களை எதிர்த்துப் போராடுகிற ஒன்றாக இந்தப் புரட்சி இருக்க வேண்டும். பொருளாதாரத்திலுள்ள சில வரைமுறைகள், இறுக்கங்களிலிருந்து விடுதலை பெற்றுத் தரும் புரட்சியாக இது இருக்க வேண்டும். மாற்றுக் கருத்துக்களுக்கும், சகிப்புத்தனத்திற்கும் இடமளிக்கிற ஒரு புத்திஜீவித்துவப் புரட்சியாகவும் இது இருக்க வேண்டும். இவ்வாறான புரட்சி எனது வாழ்க்கைக் காலத்தில் நடக்காது என்று தெரியும், ஆனால் எனது பிள்ளைகள் இந்த மாதிரியான ஒரு நிலைமையை அனுபவிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன். எனவே, புத்திஜீவிகளால் தற்போது முடியாதிருக்கிற அவர்கள் சக்தியற்றிருக்கிற விடயங்கள் பற்றிக் கேட்காதீர்கள்.

▶ ஒரு இராஜதந்திரியாக, கவிஞராக, நாடக, நாவலாசிரியராக, ஒரு புத்திஜீவியாகவென தங்களின் பல பரிமாணங்களுக்கிடையிலான இணைப்பை எவ்வாறு கண்டு கொள்கிறீர்கள்? எழுதுவதற்கான நேரம் எப்படிக் கிடைக்கிறது உங்களுக்கு?

இராஜதந்திர தூதுவர் பதவி எனது தொழில். கவிதை எனது விதி. எழுதுவது எனது வேட்கை. நாடக எழுத்து எனக்குக் கிடைத்த கொடை. புத்திஜீவித்துவம் எனது அவசியம். இவற்றையெல்லாம் என்னால் செய்யமுடியுமாயிருப்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. உங்களுக்கு நேரம் வேண்டுமா..? சாப்பாடுகளுக்கு வரும் அழைப்பை மறுத்துவிடுங்கள், நீண்ட நேரம் தொலைக்காட்சித் திரைகளில் தொங்கிக் கொண்டிருப்பதை நிறுத்திவிடுங்கள். இப்படி சில தேவையற்ற விடயங்களை நிறுத்திவிடுவீர்களானால் பயனுள்ள சில விடயங்களைச் செய்வதற்கான தாராளமான நேரம் உங்களுக்கு கிடைத்துவிடும்.

▶ விமர்சகர்கள் 'முதனப்பி'யின் தவறுகளை, போதாமைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அவர் பால் அளவிலா ஈர்ப்புக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஈர்ப்பின் ரகசியம் என்ன?

முதனப்பி ஒரு கருமியாக, பிச்சைக்காரனாக, பெருமை பிடித்தவராகத்தான் இருந்தார் என்பது எனக்கும் தெரியும், அவர் பெரிய பக்திமானாகவும் இருந்ததில்லை. ஆனால் இதெல்லாம் நாம் பேசுகிற விடயதானத்திற்கு எந்தச் சம்பந்தமுமற்றது. அவர் ஒரு பெரிய கவிஞராக இருந்தார் என்ற ஒன்றிற்காகத்தான் அவரில் நாம் ஈர்ப்புக் கொள்கிறோமே தவிர வேறு அடையாளங்களுக்காக அல்ல. கலை தொடர்பாக ஒருவரை சம்பந்தப்படுத்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகையில், பேச்சு எப்போதும் அந்தக் கலை தொடர்பாகவே இருக்க வேண்டும். நாம் ஒரு ஓவியத்தை ரசிக்கும் போது அதை வரைந்தவன் அழகாக இருக்கிறானா, அசிங்கமாக இருக்கிறானா என்று பார்ப்பதில்லை. இசையமைப்பாளனை விமர்சிக்கையில், கதைக்கையில் அவன் தன் மனைவியோடு, பிள்ளைகளோடு எப்படி நடந்து கொண்டான் என்பதை ஆராயப் போவதில்லை, இது மாதிரித்தான் ஒவ்வொரு கலைஞனுக்கும். நாம் கலையல்லாத அம்சங்களை கலைஞனிடத்தில் தேடி விமர்சிக்கப்போனால் இது மாதிரியான எதிர்ப்பார்வைகளைத் தான் முன்வைக்க வேண்டிவரும். அதலல்லாமல் புனிதங்களை மட்டும் படைப்பாளிகளில் தேட விரும்புபவர்கள் அதை பக்திமான்களிடமும், புனிதர்களிடமும் தேடிக் கொள்ளட்டும். இதல்லாமல் ஒன்றை வேறொன்றில் தேடுவதால் குழப்பங்களும் கூப்பாடுகளும் தான் எஞ்சும்.

**▸ உங்கள் ஓய்வுக்குப் பிறகு நீங்கள் நாடு திரும்ப விரும்புகிறீர்களா அல்லது லண்டனில் தங்கிவிட விரும்புகிறீர்களா?**

இந்தக் கேள்வி எனக்கு ஒரு விதத்தில் ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் ஒன்று சொல்கிறேன். நம்பினால் நம்புங்கள், இங்கே இந்த லண்டன் மாநகரத்தில், எனது அலுவலகம் அதன் ஓய்வற்ற வேலைகளைத் தவிர வேறெதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இங்கே, மெழுகுபொம்மை காட்சியகத்தையோ அல்லது பக்கிங்ஹாம் மாளிகைக்கு முன்னால் மாளிகைக் காவலாளிகள் பணி மாறுகிற அழகை ரசிப்பதற்கோ வரவில்லை. நான் மிகவும் பொறுப்புவாய்ந்த வேலைப்பளுவால் கட்டுண்டு கிடக்கிறேன். எனவே இந்த எனது நிலைமையின் மூலம் எனது விடை எதுவாக இருக்குமென்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.



**▸ அறுபத்து மூன்று வயதையடைந்து கொண்டிருக்கிற உங்களுக்கு இன்னும் கனவுகள், எதிர்பார்ப்புகள் என்று ஏதாவது இருக்கின்றனவா?**

**புரட்சி எனது வாழ்க்கைக் காலத்தில் நடக்காது என்று தெரியும், ஆனால் எனது பிள்ளைகள் இந்த மாதிரியான ஒரு நிலைமையை அனுபவிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன். எனவே, புத்திஜீவிகளால் தற்போது முடியாதிருக்கிற அவர்கள் சக்தியற்றிருக்கிற விடயங்கள் பற்றிக் கேட்காதீர்கள்.**

நாம் அனைவருமே ஒரே இராணுவம், ஒரே கொடியின் கீழான ஐக்கிய அரேபிய ராச்சியம் என்ற ஒன்றைக் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அராபிய மனிதன் சுய கௌரவத்துடன் வாழக்கூடிய ஒரு சமூகத்தைக் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அநியாயமாக எந்தவொரு மனிதனும் கைது செய்யப்படவோ தடுத்து வைக்கப்படவோ கூடாத, ஒரு சமூகத்தை அவாவிக் கொண்டிருக்கிறோம். அத்லாந்திக் சமுத்திரத்திலிருந்து அரேபிய வளைகுடாவரை நுழைவு விசா இன்றி வாகனங்களில் சென்றுவரவும், களைப்பாறும் உணவுச் சாலைகளில் எங்கள் அடையாள அட்டைகள் கேட்கப்படாத ஒரு காலத்திற்காகவும் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். எங்களுடன் கூட வருபவர்கள் யார் யார் என்று விசாரிக்கப்படாத காலத்திற்காகக் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அராபிய நகரங்களின் வீதிகளில் திருமணச் சான்றிதழையோ அல்லது ஒரு பெரும்புள்ளியின் சிபாரிசு அடையாள அட்டையையோ அல்லது எங்கள் இரத்த வேர்களையோ யாரும் கேட்டுத் தொந்தரவு படுத்தாமல் நடந்து திரியக் கூடிய ஒரு காலத்திற்கு அவாவிக் கொண்டிருக்கிறோம். இதுதான் எனது இப்போதைய கனவுகள். இதெல்லாம் குழம்பிப் போன, ஏமாற்றம் தரக்கூடிய கனவுகள் தானென்றாலும் இந்தக் கனவுகள் என்னில் தொடர்ந்து கொண்டுதானிருக்கும்.!

**▸ முன்னர் நீங்கள் 'அரபுத்தேசியம் சாகவில்லை அது எதிர்காலத்திலும் சாகவும் மாட்டாது' என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் பலர் அது எப்போதோ செத்துவிட்டது, அதன் விளைவுகள் தான் இன்றைய தோல்விகளும் பலவீனங்களும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அது ஏனைய தேசங்களின் ஆளுகைக்குள் சுற்றப்பட்டுப் கட்டுண்டு போயிருக்கிறதென்றும் சொல்கிறார்கள். இந்த நிலையில் நீங்கள் இப்போதும் உங்கள் அதே கருத்தில் தான் இருக்கிறீர்களா?**

வெற்றி தோல்விகள் பொதுவாக உலகின் எல்லா தேசங்களுமே, தேசியங்களுமே எதிர்கொள்வதுதான். ஆனால் அடையாளம் என்பது வேறு. பழசாகிப்போனால் கழற்றியெறிந்து விடுகிற சப்பாத்தோ, போடமுடியாத நிலையில் நான் கழற்றிப்போடுகிற ஒரு சட்டையோ, காலப்பொருத்தமற்றது என்று கருதி விற்றுவிடக்கூடிய ஒரு பழைய வாகனமோ அல்ல எனது அடையாளம் என்பது. எனது அடையாளம் என் ஒவ்வொரு கலங்களிலும் ஊறிக் கிடப்பது. என் உடலின் இரத்த ஓட்டம் அது. எனது இரத்தத்தில் நான் இம்ரஉல் கைசின் சோகங்களையும், சைபுத் தௌலாவின் வெற்றிகளையும், மொங்கோலியர்கள் ஆக்கிரமித்த போது பக்தாத் வடித்த கண்ணீரையும், ஹித்தீன் யுத்த களத்து வாள்களின் மினுமினுப்பையும், பலஸ்தீனியப் பெண்போராளிகளின் பெருமைகளையும் சுமந்து கொண்டு திரிகிறேன். இந்த ஞாபகங்கள் என் இறப்பு வரையும் தொடர்ந்தும், என்னிடத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தும் கொண்டிருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப்பாலம்

ஆழியாள்

போர்க்கால அமைதி
எனது கிராமத்தின்
எஞ்சிய ஊர்மனைகளில்
வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்
சிற்றாறுகள் பின்னி வைத்த
வண்டல் மண் கரைகளில்
சின்னப்பாலத்தின் வெறிச்சோடலில்
ஐந்துவிரல் கொண்டு அறைந்து கிடந்தது.

சின்னப்பாலத்தடிக்கு
நித்தம் செட்டை அடித்து வந்தன
வழக்கத்திலும் கொழுத்த
ஒற்றைக்கால் கொக்குகளும், சுழியோடும் நீர்க் கோழிகளும்,
அவற்றிலும் அதிகமாய்
விளைந்து கிடந்தன
ஊறி அழுகிய பிணங்களின்
வாசனை முகர்ந்து, சுவை அறிந்த
ஜப்பான் குறளிகளும், குறட்டை பெட்டியான் மீன்களும்.
கபறக்கொய்யாக்களோ
எவ்வித நிர்ச்சலனமுமின்றி
நீரிற் பொசிந்தூறிய மனிதக் கபாலங்களை
ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்
பங்கிட்டுக் கொண்டன - சண்டை சச்சரவின்றி சமாதானத்துடனே.

தேவைப்படும் போது
அவை பின்னிற்பதில்லை
தம் நாவால் மனிதக் கட்குழிகளை நீவிக்
கறுத்த விழிகளைத்
திராட்சைகளாய் உறிஞ்ச.

சின்னப்பாலத்தடி
தன்னைக் கடந்து போனவர்களை
நினைவில் பதித்துக் கொண்டாலும்,
ஊறி வெடிப்புற்றுச் சிதிலமாய்த் தொங்கும் தசைகளை
ஒட்டவைத்து
அடையாளம் காண்பதற்குள்
தலை கிறுகிறுத்துப் போய்விடும் அதற்கு.

அக் கிறுகிறுப்பில் அதுவோ தினமும்
"என்னை மட்டும் தனிக்க விட்டு
இந்த மனிதர் எங்கு போயினர்
எங்கு போயினர"
எனப் பெருங்குரலெடுத்துக்
கதறத் தொடங்குகையில்,
எப்போதும் போல
ஊர்மனைச் சுவர்களில்
பிளவுண்ட கீறல்கள் வெடிப்புற்றுத் தொடர்ந்தன.

சிற்றாறுகள் அன்றைய வண்டலைக்
கரைகளில் கொட்டிக் களையாறின.
வயல்வெளிகளில் காற்றின் ஓலத்துடன்
இரவு வந்து தரையிறங்க
கபறக்கொய்யாக்கள்
உண்ட களை தீர அரைக்கண் மயக்கத்தில்
கோயில் தெப்பங்களாய் மிதந்தன.

(14-04-2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

"என்ன, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிட்டதா?"

அவன் இதற்குப் பதில் சொல்லவில்லை. கதிரையை அதன் அருகாக நகர்த்தி உட்கார்ந்தான். நள்ளிரவு நேரம். வீட்டின் முன் 'போர்டிகோ' வில் தனியாக உட்கார்ந்திருந்தான். வெளி விளக்கு எரியவில்லை. நிலவின் முழு வெளிச்சம் வெளியே பரவிக்கிடந்தது. வழமையாகவே அவன் தூங்க, நேரம் மூன்றாகிவிடும். இன்று வாசிக்கவில்லை, எழுதவுமில்லை. அவனது மனம் அமைதியின்றித் தவித்தது. அவனின் நிலை கண்டு 'அது'வும் பாவப்பட்டிருக்க வேண்டும். நெடுநேரமாக எட்டடி, பத்தடி செவ்வக சிமென்ற் பரப்பில், கைகளை வயிற்றில் கட்டியபடி இருக்க உலாவியபின், பிரம்புக் கதிரையை நகர்த்தி அவன் உட்கார்ந்ததும் கேள்வி கேட்கிறது. அதற்குப் பதில் சொல்லவும் விருப்பமின்றி மௌனமாயிருந்தான். அது என்ன நினைத்ததோ தெரியவில்லை, பேசாமல் அவனையே நோக்கியபடி இருந்தது. சிலவேளை அவனது உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டி, மௌனமாயிருக்கக் கூடும்.

இங்கு 'அது' என்பது அவரை மரத்தை. உண்மையில் அவன் அதன்மீது வைத்திருக்கிற மரியாதை நிமித்தம் 'அவர்கள்' என விழிப்பதுதான் பொருத்தமானது. மனிதர்களை விட மேலானதாக அதைக் கண்டான். இந்த ஒரு மாதத்தினுள் அவரை அவர்களிடமிருந்து அவன் பெற்ற போதனைகள், சமாதானங்கள், அரவணைப்புகள் அனந்தம். இப்படிப் படாரென இதனைச் சொல்வது அவனைப் பைத்தியமாக நமக்குக் காட்டும். ஆதலால் முதலிலிருந்து...!

அது, அவன் விதை நட்டு வளர்த்ததல்ல. சுமார் அரையடி உயரம் வளர்ந்த பின்னரே அதனை முதன் முதலில் அவதானித்தான். வாசலின் முன் மதிலிலுள்ள தண்ணீர்க் குழாயடியில், புற்களுடன் சேர்ந்து அதுவும் வளர்ந்திருந்தது. அதன் இலைப்பரப்பு புற்களை விட்டும் வேறானதாயிருக்க, இனம் கண்டு வேறாக்கி நட்டான். பாத்தி அமைத்தான். நாளாந்தம் தண்ணீர் ஊற்றினான். அது ஈராண்டுப் பயிராயிருக்க வேண்டும். நெடு நெடுவென வளரத் துவங்கிற்று. வீதிச் சுவருக்கும், தாழ்வார இரண்டடி மதிலுக்குமிடையே அது இருந்ததால் தினமும் அவனால் அதனை அவதானிக்க முடிந்தது. அதன் ஒவ்வொரு இலையுமே அவனறிய வளர்ந்தவைதான். அதற்கு நல்லதொரு மருத்துவனாகவும் இருந்தான். இலையில் மஞ்சள் விழுகிறதாயின் நைதரசன் குறைவு எனக் கண்டான். நடு நரம்புகள் வெளிறியிருப்பின் பொசுபரசும், பொட்டாசியமும் தேடினான். எதற்கும் மருந்து வாங்கக் கடைக்கு ஓடவில்லை. வெட்கம் தொலைத்து, மாட்டின் சாணம், கோழியின் மீதி என சாக்கினுள் கொண்டு வந்து கொட்டினான். பட்டதாரி வாத்தியார் அங்கு காணாது போயிருந்தான். அவரை கூட அவனை ஏமாற்றவில்லை நாலரையடி உயரமாய் வளர்ந்து, அகலக்கிளை பரப்பி 'போதுமா இது?' என்பதாகச் செழித்து நின்றது. இதனால் தாழ்வாரத்தின் இடைப்பரப்பு இரண்டாகப் பிரிந்து, போக்குவரத்தே தடைப்பட்டது. அதனால் அவன் கவலை கொள்ளவில்லை. கிளைகளின் பாரம் தாங்க மாட்டாதே என்று, கம்பு நட்டு, தூண்களூன்றினான்.

அவனது மனைவி ஜெஸ்மினுக்கு இந்த நிகழ்வுகள் ஆச்சரியகரமானவை. எந்தச் செடிக்குமில்லாத மவுசு, இந்த மனிதரிடம் இதற்கெப்படி ஏற்பட்டது என்பதில் சம்சயம் இருந்து கொண்டேயிருக்கிறது, இருக்கும். ஜெஸ்மின் வாசல் கூட்டு முன்னரே, அவரையின் உதிர்ந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பொறுக்குவான். ஒரு இலை சுருண்டு கிடந்தால், துடித்துப் போய் விடுகிறான். கூரான கத்தியெடுத்து கணநேர வீச்சில் அதனைக் களைகிறான். ஏனெனில் கூடிய நேர மெடுப்பது, அதன் வேதனையை அதிகரிக்கச் செய்யுமென நம்பினான். பின், அந்த இலையை வேறாக்கி, தூரத்தே வெயிலில் காய வைத்து எரிக்கிறான். பச்சையாக எரிப்பதில் மன அமைதி குலைந்தான்.

அவனின் அந்தி நேர, பின்னிரவுப் பொழுதுகள் அதன் பார்வையிலேயே கழிந்தன. அதன் அருகாமை ஒரு ஆறுதலை அவனுக்கு அளித்தது. அதன் பசுமை மனதில் மலர்ச்சியை ஏற்படுத்தியது. அதனில் பட்டு வருகின்ற காற்றில் சுகந்தம் உணர்ந்தான். மன அமைதி குலைகின்ற பொழுதுகளில், அதன் அருகாமை தேறுதல் அளித்தது, அவனுக்கு. அதனருகாக நிறைய வாசிப்புகளை மேற்கொண்டான், ஓரளவு எழுதவும் செய்தான். ஒன்றுமில்லையானால் அதனைப் பார்த்தபடியே உட்கார்ந்திருப்பான். ஆக, அவனது பொழுதுகள் 'அவரையும் - அவனுமாகவே' கழிந்தன.

வீடு தேடி வரும் நண்பர்களை அங்கேயே உட்காரவைத்து அளவளாவத் துவங்கினான். ஒரு நாள் பேச்சினிடையே நண்பன் சபா கூறினான், "நல்ல செழிப்பாயிருக்கிறதே" அவனுக்குச் சீலிரென்றது. கண்பட்டு விடுமோ என அஞ்சினான். சபாவைப் பார்த்துக் கெஞ்சுதலுடன் கேட்டான், "எங்கே, இன்னொரு முறை அதனைச் சொல்" "நல்ல செழிப்பாயிருக்கிறது, இல்லையா?"


அவனுக்கு அப்போதுதான் அமைதி கிடைத்தது. இதன் பின்னர், முன் 'வராண்டா'வில் யாருடனும் அவன் உட்காருவதில்லை. உள் வரவேற்பறையில் வைத்துப் பேசியனுப்புவான். நாட்கள் செல்ல, அவரையைக் காணாத நாட்களில், மனது ஒரு வெறுமையை அடைவதாக உணர்ந்தான். இதனால் வெளியே தங்குகின்ற பொழுதுகள் வராதபடி பார்த்துக் கொண்டான்.

சென்ற வருடம், ஒக்டோபர் இரண்டாம் திகதியை அவனால் ஒரு போதும் மறக்க முடியாது. அவன்



- எஸ். நசீறுதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவரையின் இருப்பிடம் வரும் போது இரவு பதினொரு மணி. எட்டரைக்கு ஜெஸ்மினுடன் வாய்த்தர்க்கம் ஆரம்பித்திருந்தது. இருவரும் ஆழமான, மனதைக் காயப்படுத்துகின்ற பேச்சுக்களைப் பரிமாறியபின், தங்கள் மீதே வெட்கம் கொண்டு, தங்களையே மலமாக உணர்ந்து அடங்க நேரம் பதினொன்றாயிற்று. ஜெஸ்மின் கடைசியாக, 'நீ ஆண்மகனேயல்ல' என்றதும், சகலதும் உடைந்து சுக்கு நூறாகினான், வெறும் வார்த்தையில், இவ்வளவு விஷம் தடவ முடியுமா என மலைத்தான். மனது குமைந்தான். அவள் படுக்கையறையுள் கதவைத் தாளிட்டபடி புகுந்தான். விசும்பி அழுகின்ற ஒலிகேட்டது. அவன் தாழ்வாரத்தில் பிரம்பு நாற்காலியினுள் தஞ்சமடைந்தான். யோசனை பிடித்துக் கொண்டது. ஏற்கனவே ஒன்பது நாட்களாக முகம் பாராதபடி உள்ளே கொஞ்சம் கொஞ்சமாகப் புகைந்திருந்த நெருப்பு இன்று கனலாக வெளியேறிற்று எனக் கண்டான். இருவரது படிப்பும், அதிமேதாவித்தனமும், சுய ஈகோக்களை விட்டுக் கொடுக்கத்தடை செய்ய, போர் மூண்டு விட்டதாக அறிந்தான். ஜெஸ்மினுக்கு ஒரு ஆணை, எங்கே, எப்படித் தாக்கினால் அடிவேர் விழ வீழ்த்த முடியுமெனத் தெரிந்திருந்தது. அவனுக்கு வாழ்வே நரகமாயிற்றென்ற பயமெழுந்தது. சிகரட்டை ஒன்றின் மேலொன்றாகப் புகைத்தான். மனசு மறுகிற்று. புகைந்தெழுந்தது. 'சே... இவ்வளவுதானா?..' என ஆர்ப்பரித்தது. அப்போதுதான் அந்த சப்தத்தைக் கேட்டான்.

"அஸ்வர், அழுகிறாயா?"

இந்த நடு இரவில் மரத்துள் மறைந்திருப்பது யார்? அவனுக்கும் தெரிந்து போயிருக்குமே. மனதில் அருசையும், பயமும் எழுந்தன. ஆயினும் கேட்டான்.

"யாரது?"

"நான்தான், இலகுமினோசாரம்"

"என்ன உளறல் இது. யாரது?"

"நீதான், உனது மகளுக்குச் சொல்லிக் கொடுத்தாய் அவரையின் பெயர், இலகுமினோசாரமென்று"

"பகிடி போதும். வெளியே வா"

"பகிடி இல்லை. நான்தான்"

அவன் திடுக்கிட்டான். ஆச்சரியமடைந்தான். மரம் பேசுமா? ஆவலும் எழுந்தது. விளக்கைப் போட எழுந்தான்.

"விளக்கை" போடப் போகிறாயா?"

"ம்..."

"சரி"

வெளிச்சத்தில் மரத்தைப் பார்த்தான். எந்த மாற்றமுமின்றி அமைதியாக அப்படியே இருந்தது. 'இப்போது இதுதானா பேசியது?' என்ற சந்தேகம் அவனில் எழுந்தது. அவன் கேட்டான்,

"எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நீ பேசுவது?"

"ஏன்?"

"தாவரம், எங்கேயாவது பேசுமா?"

'க்ளுக்' கென நீரலைகள் தளும்புகின்ற சப்தம் கேட்டது.

"சிரிக்கவும் செய்கிறாயா?"

"நீ மடையன். நீயாகவே சில பிம்பங்களைச் சிருஷ்டித்து வைத்து விட்டு, அதற்கு ஆதாரமானவற்றை மட்டுமே நம்பவும் செய்கிறாய். உண்மை என நிறுவியவற்றைக் கூட ஓரம் கட்டுகிறாய்"

அதனது பேச்சு அவனில் சினத்தை எழுப்பிற்று

"ஏய், இங்கே பார், முதலில் இந்த முட்டாள், நீ என்பதையெல்லாம் நிறுத்து, மரியாதையாகப் பேசுவதற்கென்ன?"

"என்னால் அது முடியாது. நான் உனது உணர்வுகளுடன் ஒன்றித்திருப்பவன். அங்கு மரியாதையெல்லாம் சாத்தியமேயில்லை."

அவன் சிரித்தான் சற்று நேரத்தின்பின், கூறினான்.

"சரி அப்படியே இருந்து கொள். எப்படி உன்னால் பேச முடிகிறது"

"நான் தான் சொன்னேனே, நீ முட்டாளென்று. என்னருகே இருந்துதான், நீ ஞானியும் - புறாக்களும் சம்பவம் வாசித்தது. அதைவிட நாயின் குணம் தெரியுமா உனக்கு?"

"ஞாபகமில்லை"

"இது, நல்ல பதில். வீட்டு நாய் முன் தாழ்வாரத்தில் படுத்திருக்கிறது. கள்வன் பின் மதிலால் வருகிறான். அவனைக் காணாத போதும், அவனது உணர்வலை வீச்சைப் புரிந்து, குரைத்தபடி விரட்டுகிறது. கண்டிருக்கிறாயா?"

"ம்... அதனால்..."

"இன்னொன்று கேள், நீ முன்னர் சந்தித்தே இராத நபரைக் கண்டதும், ஆசை கொள்கிறாய், அல்லது எரிச்சல் கொண்டு விலகி ஓடுகிறாய். இந்த உணர்வு அலைகளின் கவர்ச்சிதான், தலைவர்களையும் ஆக்குவது இது எல்லாமே நீ வாசித்ததுதான்..."

"ஞாபகம் வந்து விட்டது. அது என்ன ஞானியும் - புறாக்களும்"

"ஞானி, தவத்தில் உட்காரும் போது, புறாக்கள் உடம்பெங்கும் வந்தமருவது வழக்கம். ஒருநாள், பேரப்பிள்ளை, ஒரு புறா எடுத்து வரும்படி சொல்ல, 'ஓம்'பட்டு வந்தவர் அருகே, அன்று ஒரு புறாவேனும் அண்டவில்லை. ஞானியின் உணர்வு வீச்சு(க்)கள் புறாக்களுக்கு அத்துப்படி"

"சரி, அது எப்படிப் பேசும் ஆற்றல்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கும் அவைகள் பேசின. ஆனால் அறிவாரில்லை. அல்லது, உணர்வுகள் ஒத்தவராக எவருமில்லை"

அவன் மீண்டும் குழப்பமுற்றான். 'என்ன சொல்கிறது இது. உணர்வுகள் இழைந்தபின் எதுவும் துலங்குமென்றா? பேசுவதற்கென்று குரல்நாண், பற்கள், நாவு என இத்தனை உபகரணங்கள் தேவைப்படுகின்ற போது இது சாத்தியமானதா? இது என்ன பேதமையான உளறல்' மீளவும் சிரிக்கிற சப்தம் கேட்டது.
"இப்போது எதற்காகச் சிரிக்கிறாய்?"
"உனது யோசனையை நினைத்துத்தான்"
"அதில், சிரிக்கும்படி என்ன இருக்கிறது?"
"இந்த உண்மையை நான் சொல்வதற்காக நீ கோபிக்கக் கூடாது. நீ தனிமை விரும்பி. அன்புக்கு ஏங்குகிறவன். ஆயினும் பெரிய மேதாவித்தனமான நினைப்புகளால், மற்றவருடன் கீழிறங்கிப் பழக முடியாதவன். ஆயினும் மனிதன் சமூகப் பிராணியல்லவா? எனவே உனக்கும் உன்னைப் பகிர்ந்து கொள்ள ஒரு செல்லப் பிராணி தேவைப்பட்டிருக்கிறது...

இடையே ஊடறுக்க அவனுக்கு எண்ணமெழுந்தது. அதன் வார்த்தைகள் கோபமூட்டின. எனினும் முடியட்டுமென மௌனமாயிருந்தான். அவரை மேலே பேசியது.
...."அது நானாக வந்து வாய்த்தேன். உனது அன்பான கவனிப்பு, என் மீதான பற்றுதல் எல்லாமே உனது இடைவெளியை நிரப்புவதற்கே நானும் உன்னுடன் ஆட்பட, உணர்வு ஒன்றித்தாயிற்று. ஆக, இனிப் பேசுவது ஒன்றும் சிரமமானதல்ல, ஏனெனில் நீயே நான்..."

அவன் பதில் கிடைக்காததில் ஆயாசமுற்றான். அவனது அகத்தை அது கண்முன் திறந்து வைத்ததில் கோபமே எஞ்சிற்று.
'நீ, நாசமாய்ப் போக...' என மனதுள் திட்டினான்.
"அப்படியென்றால் என்ன?, இதுவரை நீ வாசிக்கவோ, பேசவோ செய்ததில்லை. ஆனால் கூடாத வார்த்தை என்று தெரிகிறது"

அவன் மௌனமானான். அவனுக்குக் குழப்பமே எஞ்சிற்று. கதிரையை பின்னே தள்ளியபடி எழுந்தான், தூங்கப் போனான். அவனுக்குத் தூக்கமற்ற இரவு அது.

படுக்கையை விட்டு காலையில் எழுந்த போது மேஜையில் தேனீர் இருந்தது. ஜெஸ்மின் இன்னமும் கோபத்துடனேயே இருந்தாள். தேனீர் ஆறிக்கிடந்தது. அதை அப்படியே விட்டு விட்டு எழுந்தான். காலைக்கடன் முடித்து வெளிக்கிட்டான். சைக்கிளை தள்ளிக் கொண்டு வெளியே வர,
"குட்மோர்னிங் அஸ்வர்" என்றது அது.
"குட்மோர்னிங்" என்றான்.
"குட்மோர்னிங் டடா" என்றாள் மகள் சிரித்த படியே. அவரை, வணக்கம் சொன்னது மகளுக்குக் கேட்டிருக்குமோ என்ற சந்தேகம் வந்தது. எதுவும் பேசாமல் வீதிக்கு வந்தான். மகளை சைக்கிளில் ஏற்றினான். மிதிக்க ஆரம்பித்தான்.

அன்று பாடசாலையில் அவனால் சரியாக இயங்க முடியவில்லை. அவரையின் நினைப்பிலேயே இருந்தான். அஸ்வர் உயர்தர வகுப்பில் உயிரியல் கற்பிப்பவன். மாணவர்களுக்கு பரிசோதனைகளைச் செய்யும்படி ஏவி விட்டு, வாசிகசாலைக்கு வந்தான். தாவரங்களின் உணர்வுகளுக்கான ஆய்வுகளைத் தேடிப்படித்தான். தகவல்களைத் திரட்டினான். ம்ஹூம்... இந்த மாதிரி நிகழ்வு சாத்தியமில்லை என்றே அவை கட்டியம் கூறின. அஸ்வருக்கு குழப்பம். கூடிப் போயிற்று. யாரிடமும் சொல்லச் சங்கடமாயிருந்தது. வினோதமாகப் பார்க்கக் கூடும். அரை நாள் விடுமுறை எடுத்து, வீட்டுக்கு வந்தான்.

மனைவி, மகள் யாருமற்ற நேரம். சூரியன் தலை மேல் நின்று எரித்தது. புழுக்கமாயிருந்தது. உடைகளைக் கழற்றி விட்டு சாறன் அணிந்தான். உடலைக் கழுவி சற்றே ஓய்வெடுத்தான். - பின் அவரையின் அருகாய் கதிரையில் உட்கார்ந்தான். வீதியில் யாரும் இல்லை என்பதை உறுதிப் படுத்திய பின், பட படக்கின்ற மனதை அடக்கியபடி கூறினான்,
"ஹலோ, குட் ஆப்டர் நூன்"
"..........."
"கேட்கவில்லையா? வணக்கம் சொன்னேனே..."
"..........."

பதிலில்லை. மீண்டுமிரு முறை சீண்டினான். அது பேசவேயில்லை. அவனுக்கு எல்லாம் மனப் பிரமையோ என்ற சந்தேகம் எழத் துவங்கிற்று. அவரையை வெறித்தான். அது காற்றில் இலைகள் அசைய அழகாயிருந்தது. இலைகள் கூம்பி நிலம் பார்த்தபடி இருந்தன. அவன் மீதே அவனுக்குப் பயம் எழ ஆரம்பித்தது. மனது முழுக்கவாய் அவனுக்குக் குழம்பிப் போயிற்று. "ப்ளடி ஷீற்..." என்றபடி எழுந்தான். படுக்கையில் வந்து வீழ்ந்தான். தூக்கம் வரமாட்டேனென்றது. யோசிப்பிலேயே கிடந்தான். எப்போது தூங்கினான். என்பது நினைவிலில்லை.

மகள், பகல் சாப்பாட்டிற்கென எழுப்பினாள், பின்னேரச் சிற்றுண்டியும் மகளாலேயே பரிமாறப்பட்டது. ஜெஸ்மினின் கோபம் இன்னமும் ஆறவில்லை. அஸ்வரும் வீம்பு கொண்டான். 'பெண்ணாகிய உனக்கே, இவ்வளவு திமிர் இருப்பின், எனக்கெவ்வளவு இருக்கும்' என்ற நினைப்பில் பாரா முகமாயிருந்தான். இன்றுடன் பனிரெண்டாவது வெற்றிநாள் கொண்டாடப்படுகிறது. அஸ்வருக்கு மனசு கொள்ளவில்லை. மனசு சூம்பிக்கிடந்தது. மகள் கூட, உம்மாவின் பக்கமாய் நிற்பதாகவே உள்மனதில் நினைத்தான். சிலவேளை சிறுமிகள் தாயை அண்மித்தே வளர்வதால், இந்த நெருக்கம் தவிர்க்க முடியாததே என்றுமுணர்ந்தான். தான், அவரை சொன்னதைப் போல, தனிமையாகிவிட்டோமோ என்பதில் மனசு கிடந்தழுதது. முகம் கூட சோபையிழந்து கிடந்தது.

இரவு வந்தது. பகல் தூக்கம், இரவுத் தூக்கத்தையும் கொண்டு போயிருந்தது. அஸ்வர் மௌனமாக, கண்கள் மூடியிருக்க, தலையை கதிரையில் சாய்த்தபடி கால்களை நீட்டியபடி சாய்ந்திருந்தான். மனசு அமைதியை வேண்டி யாசித்தது. அவரையில் பட்டு வருகின்ற காற்றின் சுகந்த வீச்சு சந்தோசம் தரவில்லை. பால் நிலவு மன அமைதியைத் தரவில்லை. மனச் சுமைகள் அவனை நிம்மதியிழக்கச் செய்திருந்தன. திடீரென அந்த சப்தம் அவனுக்குக் கேட்டது.
"ஹலோ..."
அவன் இப்போது திடுக்கிடவில்லை. பேசாதிருந்தான்.
"என்ன, என்மீது கோபமா?"

இதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. தலையை நிமிர்த்தினான். அவரையை வெறித்து நோக்கினான். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட அவனுடன் சீண்டி விளையாடுவதாகவே தோன்றிற்று. அவரை மீண்டும் கேட்டது.
"என்ன, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறி விட்டதா?" அஸ்வர் இதற்கும் பேசவில்லை. நீண்ட நேரம் அமைதியில் கழிந்தது. அவனது வேதனையை அவரை புரிந்து கொண்டதுவா? தெரியவில்லை. அமைதியின் வன்மம் தாளாது, அவரை கேட்டது.
"எதுவானாலும் பேசித் தீர்க்கலாம். இப்படியே மௌனமாயிருந்தால் எப்படி?"

இப்போதுதான் அஸ்வர் வாய்திறந்தான், அவனின் குரல் சற்றே காட்டமாயிருந்தது.
"உண்மையைச் சொல், யார் நீ? எதற்காக என்னுடன் இந்த விளையாட்டு?"
அவரை அதே சிரிப்பைச் சிந்திற்று. பின் கூறியது.
"நான் தான் இலகுமினோ..."
அஸ்வர், இடை மறித்தபடியே கூவினான்.
"ஸ்ரொப் இற். நான் நம்புகிறேன். பிற்பகல் ஏன் நீ என்னுடன் பேசவில்லை"
"உனது மனம் ஒரு நிலையிலில்லை. நீ சந்தேகப் புத்தியுடன், அலை பாயும் வீச்சிலிருந்தாய்"
"ஓஹோ, எனது மனம் முழுக்கவே தெரியுமாக்கும்?"
"இல்லாமலா, உன்னுடன் பேச முடிகிறது..."
"என்ன சொல்கிறாய் நீ"
"ஒன்றுமில்லை"
"தயவு செய்து நீயும் என்னைக் குழப்பாதே. ஏற்கனவே நான் நிம்மதியற்றிருக்கிறேன், தெரியுமா?"
"தெரியும். அத்தனையும் உன் பைத்தியக்காரத்தனத்தால் ஏற்பட்டதுதான்."

அஸ்வர் மேலே பேசப் பயந்தான். அவனை நோக்கி சுட்டு விரல் நீட்டாததுதான் குறை. இந்த விடயத்தை அதனுடன் விவாதிக்கவே விருப்ப மற்றிருந்தான். ஆயினும் மனம் அதையே சுற்றிச் சுற்றி வந்தது.
"உனக்கு ரோசம் வந்து விட்டதுவா? ஏன் மௌனமாகி விட்டாய்?"
"அப்படியில்லை. எனக்கு ஆறறிவு. உனக்கு ஓரறிவு. அதை வைத்துக் கொண்டு, எனக்கே உபதேசிக்கிறாய். அந்த அளவு மோசமான நிலைமை, எனக்கு!"
"ஆகா! ஒன்றை மட்டம் தட்டி, உண்மையை எதிர் கொள்வதிலிருந்து என்னமாய் விலகுகிறாய். இதுதான் ஆறறிவின் விஷேடமென்பது எனக்குத் தெரியாதா?"

திடீரென காற்று வீசத் தொடங்கிற்று, அவரையின் மணம் காற்றில் கலந்து பரவிற்று. வெள்ளைப் பூக்கள் அழகாக அசைந்தன. மொத்த அவரை மரமே பூரிப்பில் தத்தளிப்பதாக நினைத்தான். அஸ்வர் கூறினான்.
"இத்தனை செழிப்பாக இருக்கிற உனக்கு, இப்படித்தான் பேசவரும். இறைவனின் படைப்பில் நீங்கள் எல்லோருமே ஒன்றுதான்"

அவரை சற்று நேரம் மௌனமாயிருந்தது. அஸ்வர் கதிரையை விட்டும் எழுந்தான். அவரையின் அருகானான். அதன் இலையொன்றை விரல்களால் பற்றினான். மெதுவாகத் தடவிக் கொடுத்தான். மெல்லிய பூனை மயிர்கள் விரல்களில் சிலிர்ப்பூட்டுவதை அனுபவித்தான். அவரையே மீண்டும் பேசிற்று.

"தயவு செய்து, இந்தப் பழக்கத்தை விட்டு விடு. எல்லாவற்றுக்குமே மௌனமாயிருப்பது நல்லதென நினைக்கிறாய். மௌனத்தின் பெறுதியை உணர்ந்தவர்க்கே அது சரி. இங்கு நிலைமை அதுவல்ல. வாழ்க்கையே போராட்டமாக மாறிவிட்டபின், நிராயுத பாணியாய் நின்று, மறு கன்னத்தையும் காட்டிக் கொண்டிருப்பது உன்னை அழிக்கவே துணை செய்யும் உன்னை, அவளிடம் திறந்து வை"

அவனுக்குச் சற்றே சினமெழுந்தது அவரையை முறைத்தான்.
"என்ன, விட்டால் தொடர்ந்து உபதேசமாகவே பொழியப் போகிறாய் போலிருக்கிறது"
"சரி, இனி நான் வாயே திறக்கவில்லை"

அவ்விடம் மீள அமைதியாயிற்று. அவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். நட்சத்திரங்கள் மின்னின. தென்னை மர இலைகள் காற்றுக்கு நடனமாடின. குளிர் காற்று உடலை வருடிற்று. ஆனால், அவனின் மனம் குழம்பியே கிடந்தது. நினைவு அதிலேயே சுற்றிச் சுழன்றது.
"குட் நைட்" என்றபடி படுக்கைக்கு வந்தான். அவரையின் பதிலை அவன் எதிர் பார்க்கவில்லை. தூக்கமின்றிப் புரண்டான். எண்ணம், அவனையே நோட்டமிட்டது.
'ஜெஸ்மினுடன் பிரச்சினை என்பது முதன் முறையானதல்ல. கூடிப் பிரிந்து, கூடிப் பிரிந்து..., இது தொடர் சங்கிலிதானா? இருவருமே எதற்கு இந்த வளையை மாட்டியபடி உக்கிச் சாகிறோம். பிரச்சினையின் அடிவேரை அலசிக் கொள்ள - நாகரீகமாய்ப் பேசிக் கொள்ள தடையாய் எது நின்றது? கேவலமான சொற்களை முகத்தெதிரே வீசி, பின் எப்படி மீண்டும் சேர்ந்து கொள்ள முடிகிறது? ரெஸ்ரெஸ்ரரோனின், ஈஸ்ரஜினின் வீதம் உடல்களில் கூடியதும் எண்ணம், அறிவு, ரோசம் யாவும் மறந்து, மற்றவர் உடலை யாசிக்கத் துவங்கி விடுகிறோமா? பின்னர் எல்லாம் அடங்க நிஜம் தெரிந்து, பிறாண்டிக் கொள்கிறோமா? வெறும் பட்டப்படிப்பு, அவளின் பணத்தில் விலை போன பாவத்தைச் சுமக்கிறேனா? என்னை எனது மனைவி அனுசரிக்க வேண்டும், கணவனின் - சந்தோசத்தை முதன்மையாக மனைவி கொள்ள வேண்டும்' என்ற எனது பாரம்பரியப் படிப்பினைகள் பொய்யா? அவளின் குடும்ப பாரம்பரியம் அவளுக்கு வேறானதாயிருக்கலாம். ஆயினும் பெண்ணென்பதால் என்னையல்லவா அவள் அடிபொழுக வேண்டும். அல்லது நான் தவறா? எனது படிமங்கள் பிழையா?' அஸ்வர் யோசித்தான். குழப்பமே எஞ்சும் போலிருந்தது. நேரம் மூன்றரை ஆகியிருந்தது. தூக்கம் வர ஆரம்பித்தது.

மூன்று நாட்கள் எதுவித ஆரவாரமுமின்றி ஓடிப் போயின. அஸ்வருக்கு வீடு நிம்மதியைத் தரவில்லை. மனதில் அலுப்பும், சலிப்பும் குடி கொண்டிருந்தன. இரவுகளில் அவரையின் அருகாக உட்கார்ந்திருப்பதில் மட்டுமே ஓரளவு அமைதி கிடைத்தது. அன்று அவரை இரண்டு இழப்புக்களைச் சந்தித்திருந்தது. வீதியால் வந்த உழவு'மிசின்' அதனைக் காயப்படுத்திவிட்டுச் சென்றிருந்தது. ஜெஸ்மின், அஸ்வரிடம் சொல்லாமலேயே அதன் காய்களைக் களைந்து சுண்டல் செய்திருந்தாள். அவனால் அதனைச் சாப்பிட முடியவில்லை. பாவமாக இருந்தது. அதனருகே ஓடிப்போய்விட எண்ணம் வந்தது. இரவுப் பொழுதை ஆவலுடன் எதிர் பார்த்தான்.

இரவும் வந்தது. எப்படி அதனுடன் பேச்சைத் துவங்குவது என யோசனை வந்தது. பின் கூறினான்,
"மன்னித்துக் கொள். மனைவி இப்படிச் செய்வாள் என நான் எதிர்பார்க்கவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை சிரித்தது. அவன் வியப்புடன் கேட்டான்.
"வேதனையே இல்லையா? உழவு மெசின் கூட உன்னைக் காயப்படுத்தியிருக்கிறதே..."
"நீ என்ன நினைத்திருக்கிறாய். இந்த வருடத்துள் நான் அழியப் போகிறவன். நீ கூட எப்போதோ. அதுவரை மற்றவருக்கு உதவியாயிருப்பது தானே இயல்பானது. இதில் துக்கம் ஏது?"
"என்ன சொல்கிறாய் நீ"
"இங்கே பார். எனது எல்லா விதைகளுமே எனது பிரதிகள். அவர்களை நல்ல போசாக்குடன் உருவாக்கவே, நிலத்தில் வேர் பரப்பி நீருறுஞ்சினேன். இலை பரப்பி ஒளி உறுஞ்சினேன். காற்று வாங்கினேன். எனது வித்துக்கள் வீரியமாய் வாழ வழி சமைத்துள்ளேன் என்ற திருப்தியையே எனது கடமையாகக் கொள்கிறேன்"
"பொய் சொல்கிறாய். உனக்குச் சுயம் என்பதே இல்லையா?" அவரை சிரித்த படியே கூறியது.
"எனது பெற்றோர், இதையே எனக்குச் செய்தனர். அதை நான் திருப்பிவிட வேண்டாமா? இன்று என் மக்களுக்கு நான் செய்கிறேன். வாழ்க்கை என்பதை அதுவாகவே நான் காண்கிறேன்."

அஸ்வர் மௌனமானான். பின் கூறினான்.
"உனக்குக் குடும்பம் என்றில்லை. ஆதலால் என்பக்க நியாயங்களை மறுக்கிறாய்"
"அப்படியல்ல. உன்னை நேராக எதிர் கொள்ள உனக்குப் பயம். பயந்து பயந்து, வாழவே இல்லை நீ"
"உண்மைதான். வாழ்க்கை இந்த மாதிரியே போய் விடுமோ என அஞ்சுகிறேன்"
"இவ்வாறு நீ மட்டும் வேதனைப்படுவதாக நினைத்துக் கழிவிரக்கம் கொள்வதை முதலில் நிறுத்து. நீ, உன்னை உனது சுகத்தை மட்டுமே யோசிக்கிறாய்"
"அப்படியானால் அவளில் தவறே இல்லை என்கிறாயா?"
"இல்லை. அவள் புறமாக நின்று, அவளின் நிலையை யோசி என்கிறேன்"
"இப்படி வன்மம் கொள்ளுமளவு அப்படி என்ன தப்புச் செய்தேன்?"
அவரை சற்றே நிதானித்தது. பின் கூறியது.
"ஒன்றா, இரண்டா? முதலில் உனது வாழ்க்கைப் படிமங்களைத் தூக்கி எறி. அவளில் உனது மூத்தம்மாவைத் தேடாதே. நீ மூத்தப்பாவும் அல்ல. வாழ்க்கையின் மாறுதலை அங்கீகரிக்க முயல். அவளில் அன்பு செலுத்து..."
"என்ன சொல்கிறாய். நீ எனக்கு அவளின் மீது அன்பில்லை என்கிறாயா?"
"ச்சே..., அவளில்லாத நிலையை உன்னால் தாங்கவே முடியாது. ஆயினும் அவளறியக் கூடியதாக ஒரு போதும் வெளிக் காட்டியதில்லை என்கிறேன்."
"இதில் பகிரங்கத்தனம் தேவையா?"
அவரைக்குக் கோபம் வந்து விட்டது. குரல் காட்டமாயிருக்கக் கூறிற்று.
"ஒரு வாத்தியாரா இதைக் கேட்பது? எதற்கு வகுப்பில் 'கெட்டிக்கார மாணவன்' எனப் புகழ்கிறாய். மனிதன் இயல்பால் மற்றவரின் அங்கீகாரத்திற்கு ஏங்குபவன். நீ ஒரு போதும் அந்த ஏக்கம் தீர்த்ததில்லை"
"உண்மையாகவே, வேதனைப்படுகிறேன்..." அஸ்வர் இழுத்தான். அவரை பொருட்படுத்தாமல் பேசியது.
"உனது விருப்பமறிந்து கஷ்டப்பட்டு சமைத்ததற்கு ஒரு நன்றி சொன்னதில்லை. அவளுடன் சமையலறையுள் அளவளாவியபடி துணை நின்றதில்லை. எத்தனை அலங்காரம் பண்ணி, உன் முன் வந்த போதிலும், 'நீ என்ன அழகு' என ஒரு சொல் சொன்னதில்லை"

அஸ்வர் எதுவும் பேசவில்லை. அவனது முகத்திலறைந்த மாதிரி இருந்தது. பின் கூறினான்.
"எனக்கு விருப்பமிருக்கிறது. ஆயினும் பழக்கமில்லையே" அவரை அவனை மறுத்தது.
"அப்படியில்லை. உனது ஆண் திமிர் உன்னை விடவில்லை. அது அவள் கடமை என நினைத்தாய். அவள் கூட ஒரு மனுஷி, அன்பு, காப்பு, அங்கீகாரத்திற்கு ஏங்குபவள் என்பதை மறந்து போனாய். நீ உன்னை மாற்றிப்பார். அவளை நேசி. வெளிப்படையாகவே அன்பு செய். பெருமைப்படுத்து.."
"என்னால் இது முடியுமா?"
"செய்தே ஆக வேண்டும். மாறுதல் என்பது தான் வளர்ச்சியின் முதல் படி..."
"இன்னும் திமிர் ஏறப் போகிறது அவளுக்கு"
"அதை அவளிடம் விளங்கச் செய். பணத்தில் வளர்ந்த ஏக புதல்வி அவள். அதிகாரமும், பகட்டும் கொண்டு வாழ்ந்தவள். உணர்வு வடிந்ததும், தன் தவறை உடனேயே உணருகிறாள் அவள். ஆயினும் உனது நன்றி கெட்டதனமே அவளை மாற்றிவிடுகிறது"
"நீ சொல்வது உண்மைதான். ஒவ்வொரு முறையும் 'மன்னியுங்கள்' என அழுகிறாள்தான். ஆயினும் மனைவிக்குக் கூடவாய் இடம் கொடுப்பது..."
"அடப்பாவி, நீ திருந்தவே போவதில்ல"

அவரை மௌனமாயிற்று. அஸ்வரும் கூட. அவன் நிதானமாக யோசித்தான். அவனின் தவறுகள் புலப்படத் துவங்கின. மனதில் கவலைகள் விலகத் துவங்கின. அவரையிடம் மெல்லிய குரலில் கேட்டான்,
"சரி, இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?"
"அவளிடம் நான், 'ஆண்' என்கிற போர்வையைக் கழற்றி விட்டுப் பழகு. அதிகாரம், வெட்கம் என்பதெல்லாம் மனைவியிடம் தேவையில்லை. உனது மனதை முழுக்கவாய்த் திறந்துவை, பேசு, முதலில் உன்னை முழுக்கவாய் விளங்கச் செய். அப்போது அவளின் மாற்றங்களைப் பார். உன்னைக் குழந்தையாக்கித் தாங்குவதைக் காண்பாய். உன்னை, உனது மனதை பொத்திப் பொத்திப் பாதுகாப்பாள். அப்போது அன்பின் வல்லமையை உணருவாய். உனதருகான மனுசியை நேசிக்கத் தெரியாத உனக்கெதற்கு இத்தனை வாசிப்பும், எழுத்தும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்வர் தலை தாழ்த்தினான். அவனுக்கு வெட்கமாகப் போயிற்று. ஓரறிவு ஜீவன், அல்லது இந்த அவரை புத்தி சொல்லுமளவில் தாழ்ந்ததை நினைக்கக் கூச்சமாயிற்று. எனினும் அதனிலான அன்பு வெறுப்புக் கொள்ள இடம் கொடுக்கவில்லை. நன்றி சொல்ல ஆயத்தமானான்.

"நீ என்னை முழு மனிதனாக்கியிருக்கிறாய். நான் தெளிந்து விட்டேன். அவளிடம் உன்னை அறிமுகம் செய்து வைப்பேன். பேசுவாயா?"

இப்போது அவரை பதில் சொல்லவில்லை. அது காற்றுக்கு அசைந்தது. அவரையின் வாசம் எங்குமே பரவிற்று. 'ஆசீர்வதிக்கிறதா?' அஸ்வருக்குத் தெரியவில்லை. மீண்டும் கேட்டான்,

"என்ன, நீ பதிலே சொல்லவில்லை?

"அவளுடன் நான் பேச முடியாது"

"ஏன்?"

"மரம் எங்கேயாவது பேசுமா?"

"அப்படியானால், இத்தனை நாட்கள் என்னுடன் பேசியதெல்லாம்?"

அவரை சிரித்தது. அஸ்வருக்குக் கோபமெழுந்தது.

"என்ன, அவமானப்படுகிறாயா?"

"அப்படியில்லை. உனக்கு உன் மீதே கழிவிரக்கம். நமக்கு யாருமில்லை. தனியனாகி விட்டோம் என்ற சுய பச்சாதாபம். அன்புக்கு, ஆறுதலுக்கு ஏங்கினாய். இதை வெளியே சொல்லவும் கூச்சம். அவர்கள், 'மனைவியை அடக்க முடியாதவன்' எனப் புறம் பேசுவார்களோ என்ற சந்தேகம். ஆக, உள்ளாய்க் கிடந்து புழுங்கினாய். தூக்கம் கெட்டு இவ்விடம் வந்து புலம்பித் தவித்தாய். யாருடைய துணையாவது உனக்குத் தேவைப்பட்டது..."

அவரைக்கு மூச்சு வாங்கிற்று. சிறிது நேரம் மௌனமாயிருந்தது. அஸ்வர் ஆவலுடன் கேட்டான்.

"அதனால்..."

"நீயாகவே சிருஷ்டித்துக் கொண்ட பாவனைதான் இது. உனது குருட்டு நம்பிக்கையே இது. அதற்கு சான்றுகளும் வைத்து, ஆறுதல் பெற்றாய். உனது மனசுக்கு ஒத்தடமாயிருந்ததால், நம்பத் துவங்கினாய்"

"என்ன சொல்கிறாய் நீ. எனது காதால் கேட்டதெல்லாம்..."

"அத்தனையும் நீயே. உனது உள்ளம் சிருஷ்டித்தவையே. எய்த அம்பு, எய்தவன், அம்பை நெஞ்சினில் வாங்குகிறவன் அத்தனையும் நானே, என்பதைப் போல. உன்னில் தர்க்கிக்கிற மறுபகுதிக்கு என்னை ஆக்கிக் கொண்டாய்.."

"எனக்கு விளங்கவில்லை"

"பொய் சொல்லாதே, உனக்குத் தெளிவும், சுய நம்பிக்கையும் கிடைக்க, பழைய மன விம்பங்களிலிருந்து விலக முயல்கிறாய், இனி நீ மாற முடியாது என்பதால், எனது பேச்சு என்ற திரையிலிருந்து கழன்று கொள்கிறாய்..."

அஸ்வர் அவரையை உற்று நோக்கினான். அதன் தண்டுப் பகுதி காற்றிலாட அப்படியே இருந்தது. அவனது மனதுள் எல்லாக் கேள்விகளும் விடைபெற்றுப் போயின. ஒரு தெளிவு கிடைத்த நிம்மதி பிறந்தது. புத்தன் மட்டுமல்ல தனக்கும் ஒரு போதி மரம் கிடைத்ததை நினைக்கப் பெருமையாகவுமிருந்தது.



எல்லாமே
என்னிலிருந்து அந்நியமானதாய்...

பனையிடை விரியும் வயல்வெளி
முள்நெருஞ்சி திடலென
நகர்வினை நெருடின

மிதிவண்டிகள் வலம் வரும்
செம்மண் புழுதி வீதி
ஆள் அரவமற்ற வெளியென
பின்பகல் நீளும் இரவுகளில்
தொடரும் இரவுகள்
மௌனமாய் அச்சுறுத்தும்

படலை ஒன்றில் மணிச்சத்தம்
விளக்கணைத்து மெல்ல
இறுகின சாளரங்கள்
பெருமூச்சுக்கள் உரசின

நினைவுக்கு வராவிடினும்
நன்றாகவே தெரிந்த முகம்
நேர்நோக்க அச்சம்
நுதல் சுருங்கி
தலைகுனிந்து விலகிற்று

நாளையும்
வாழ்ந்திருந்திடாத
பொழுதொன்றாகவே
புலர்ந்து மறையும்

உயிர்வாழ்வுக்கான
உந்துதல் ஒன்றினைத் தவிர
எல்லாமே அந்நியமானதாய்...

ஆழிக்கூத்தில்
விகாரமுற்றது வாழ்வு.

**அமுதமொழியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழில் க. சண்முகலிங்கம் அவர்களடனான நேர்காணலின்போது ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில்: அவர் “தெல்லிப்பழைக்கு அருகில் வறுத்தலைவிளான் என்ற சிற்றூர் இருந்தது” (இன்று இல்லை) எனக் குறிப்பிட்டிருந்தார்.
நான் தவழ்ந்து எழுந்த சிற்றூர் அது. இன்று இல்லை என்று அவர் குறிப்பிட்ட வார்த்தை உண்மை. எனினும் அக்கூற்று என்னை மிகவும் காயப்படுத்தியது. அவர் குறிப்பிடுள்ள விழாவினைக் கூட அம்மாவின் கையைப் பற்றிப்பிடித்தபடி ஆறு வயதுப் பாலனாய் நின்று வேடிக்கை பார்த்த நினைவு இன்னும் ‘ஈரமாக’ உள்ளது...



# ஈரம்


*இன்னும் இருக்கிறது*
*என் ஊர்*

*தாழம்பூ மணங்கமழ*
*இதழ்பரப்பி*
*தகரப் பெட்டியுள் பத்திரப்படுத்திய*
*அம்மாவின் கூறைச்சேலையைப் போலும்*

*சித்திரைச் சிறுமாரியிடை*
*நனைந்து*
*காரைப் பற்றையுள் பிடித்த*
*பொன்வண்டின் குஞ்சை*
*நெருப்புப் பெட்டியுள் பதுக்கி*
*அடிக்கடி திறந்து*
*கிளுவந்துளிர் ஊட்டி கிளர்வுற்றிருந்த*
*பால்ய நினைவினைப் போலும்*

*இன்னும் இருக்கிறது*

*குளக்கரையிருந்து*
*தென்னங் கோம்பையுள் மருதங்காய்*
*நிரவித் தீமூட்டி*
*புகைக்கப்பல் விட்டு மகிழ்ந்திருந்த காலம்*
*ஈரம்*
*பலாக்கொட்டைக் குருவியை போலும்*
*பத்திரமாய் இருக்கிறது*
*என் சின்னக்கிராமம்*



*பனியிலும் குளிரிலும்*
*பொத்திப் பாதுகாக்கிறேன்*
*தினமும் எடுத்து*
*புரட்டிப் பார்த்து மூடிவைக்கிறேன்*
*ஒரு உலோபியைப் போலும்*

*நொடிப் பொழுதில்*
*சைக்கில் கட்டையில்*
*விளாவெளி ஒழுங்கையை*
*சுற்றி வரவும்*

*சங்கத்தாவத்தைக் கிணற்று*
*துலாக்கொடிபற்றி மிதியில் காலுதைத்து*
*நீரள்ளிப் பருகவும்*
*அன்னப்பிள்ளைகாணி முன் நின்று*
*அரட்டை அடிக்கவும்*
*பாண்டிமாவுக்கு கல்லெறியவும்*
*வேப்பந் தூவலில்*
*பூக்கொத்தை கிள்ளி முகர்ந்து பார்க்கவும்*
*முடிகிறது இன்றும்*

*முச்சந்தி மதிற்சுவரில்*
*வீட்டுக்கு நேரே புள்ளடியிட்ட*
*தார்ச்சுவடின் தடம் இன்றும்*
*முற்றாய் அழியவில்லை*

*மாமரக் கொப்பிருந்து*
*நாவறள*
*கரைகிறது காகம்*
*யார் வரவும் இல்லை*

*சங்கக் கடையின் ஒற்றைக் கதவு*
*திறந்தபடி*
*காற்றோடு பறைகிறது*

*முற்றத்து முருங்கையில்*
*உலாந்தாக்காய் நெற்றாகித் தொங்கிறது*
*வீணில்*

*வேலியோரப் பூவரசெல்லாம்*
*பூத்துச் சொரிகிறது*
*தன்னார வாரம்*

*கொத்தியாலடி சுடலை மடச் சுவரில்*
*கிள்ளிப் பிடிக்க இடமிலாதளவுக்கு*
*கரித்துண்டால் குறித்துவைத்த*
*தோற்றம் - மறைவுக் குறிப்புகள்*

*ஆனாலும்*
*ஆனி பன்னிரண்டு, 1990ற்குப் பின்*
*யார் குறிப்பும் இல்லை*

இளவாலவன்

முதுவேனில் -2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மனிதன் இதழும் நண்பர்களும் இணைந்து நடாத்திய 'இலக்கியச் சந்திப்'பில் ஆற்றப்பட்ட உரை.

# தமிழில் மேற்கிளம்பும் புதிய ஊடகக் கலாசாரம்




- சிவகுமார் -

இந்தக் கட்டுரையை எழுதுவதற்கான சில தரவுகளுக்காக இலத்திரனியல் ஊடகங்களில் பொறுப்பான பதவியில் பணியாற்றும் இரு நண்பர்களுடன் உரையாடினேன். அந்த உரையாடலில் அந்த நண்பர்களில் ஒருவர் தெரிவித்த இரண்டு விடயங்கள் மிக முக்கியமானவை.

முதலாவது : எங்களைப் பொறுத்தளவில் எங்களது ஊடகத்தில் Entertainment தான் பிரதானம். அதற்கு அடுத்தபடியாகத் தான் மற்றையவை எல்லாம்.

இரண்டாவது: நிறுவனத்தின் 70 வீதமான பங்குகள் ஐரோப்பிய நாடொன்றின் நிறுவனத்திற்குச் சொந்தமானவை. மீதி 30 வீதமும் தான் எமது நாட்டைச் சேர்ந்த இரு பங்குதாரருடையவை. 70 வீதமான பங்கைக் கொண்டவர்களின் தீர்மானங்களின்படி நாங்கள் ஒழுகுவதைத் தவிர வேறு வழி எங்களுக்கு இல்லை.



இந்த இரண்டு விடயங்களும் அதாவது நிறுவனத்தின் உடமை, மற்றையது அது, உருவாக்கி வளர்த்தெடுக்கும் மகிழ்வளிப்பு இந்த இரண்டும் தான் நாங்கள் பார்க்கப் போகிற பார்க்க வேண்டிய பிரதான விடயங்கள்.

சோவியத் யூனியனின் உடைவு இன்னும் சொல்லப் போனால் சிதைவு (அது சிதைவது தர்க்க விதியாயினும் கூட) உலக ஏகாதிபத்திய சமநிலையில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. 80களில் ஏற்பட்ட இந்தச் சிதைவு, 90களில் அமெரிக்கா ஒரு புதிய உலக ஒழுங்கமைப்பு உருவாகவும் இலகுவாக பலம் பெறவும் வழிகோலிற்று.

அமெரிக்கா தலைமையிலான அந்தப் புதிய உலக ஒழுங்கு பூகோளமயமாதல் அல்லது உலகக் கிராமம் என்கிற மாயத் தோற்றத்துடன் முழு உலகையும் கபளீகரம் பண்ணும் முயற்சியில் இறங்கியது.

இந்நடவடிக்கைகளில் பல்தேசியக் கம்பனிகள் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. அவற்றின் பலம் பெரும்பாலான தேசங்களை விடப் பெரியது. சவூதி அரேபியா, நோர்வே ஆகிய இரு நாடுகளையும் சேர்த்தாலும் அவற்றை விட Ford நிறுவனத்தின் பொருளாதார பலம் பெரியது. நியூசிலாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பிலிப்மொறிஸ் (Phillip Morris) நிறுவனத்தின் மொத்த விற்பனை தாண்டியுள்ளது.

கொகோகோலா நிறுவனத்தின் 2000ம் ஆண்டின் முதல் நான்கு மாத இலாபம் மட்டும் 5000 கோடி ரூபா. 150 நாடுகளில் ஏறத்தாழ ஐந்து லட்சம் ஊழியர்களைக் கொண்டு கடை விரித்திருக்கும் பெப்சியின் சொத்து மதிப்போ சுமார் ஒரு லட்சம் கோடி ரூபா. உலக குளிர்பான சந்தையில் 46 வீதம் கொக்கோ கோலாவிடமும் 21 வீதம் பெப்சியிடம் இருக்கிறது என்றால் பாருங்களேன்.

1990களில் இந்த பல்தேசியக் கம்பனிகள் மட்டுமல்லாமல் சிறிய நிறுவனங்கள் கூட காலம், இடம், தேசிய எல்லைகள், மொழி, பழக்கவழக்கம் என எல்லாப் பழைய வரம்புகளையும் தகர்க்கக்கூடிய தொழில்நுட்ப வகைகளையும் சாதனங்களையும் நீண்ட காலத் தொலைநோக்கையும் கொண்டு செயற்பட ஆரம்பித்தன.


உலகம் முழுவதும் விரவிய தொழில் நுட்பத்தைப் பெறுவதன் மூலமும், எங்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்து எங்கு வேண்டுமானாலும் விற்கக்கூடியதாக பொருளுற்பத்தியை முன்னேற்றியதன் மூலமும், கடன் வழங்கும் முறையை உலகெங்கும் பரவச் செய்ததன் மூலமும் அண்டை அயலானாலும் சரி அல்லது எந்தக் குக்கிராமமானாலும் சரி அங்கெல்லாம் ஊடுருவக்கூடிய உலகு தழுவிய தகவல் தொடர்பு வழித்தடங்களால் (கவனியுங்கள் தகவல் தொடர்பு வழித்தடங்களால்) அவற்றை இணைத்ததன் மூலம் தங்களுடைய இலக்கை நோக்கி அவை முன்னேறி வருகின்றன.

உலக கலாசாரச் சந்தை, உலகப் பொருள் சந்தை, உலகத் தொழிலகம், உலக நிதி வலைப் பின்னல் ஆகியவை தாம் புதிய உலக பொருளாதாரம் பெருமளவு நிலைகொண்டுள்ள சர்வதேச வர்த்தக நடவடிக்கையினது நான்கு சிலந்திவலைப் பின்னல்கள்.

எந்தவொரு உலகப் பேரரசோ அல்லது தேசிய அரசோ முன்னெப்போதும் சாதித்திராத அளவுக்கு உலக ஒருமைப்பாட்டை இந்த உலகு தழுவிய வலைப்பின்னலின் பொருளாதார நடவடிக்கை ஏற்கெனவே சாதித்து விட்டது.

இலக்கியச் சந்திப்பு 28, 29 ஜூலை 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவை ஒவ்வொன்றின் பின்னாலும் இருந்து இயங்கும் சக்தி அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சலாந்து, நெதர்லாந்து, பிரிட்டன் ஆகியவற்றைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் அதேசில நூறு பல்தேசியக் கம்பனிகள் தான். மேல் மட்டத்தில் உள்ள 300 நிறுவனங்களின் கூட்டு மொத்த சொத்து உலகின் மொத்த உற்பத்திச் சொத்துக்களின் ஏறக்குறைய கால்பங்காக இருக்கிறது அதிர்ச்சி தரக்கூடிய செய்தியல்லவா?

இதில் அமெரிக்காவின் பல்தேசியக் கம்பனிகள் சேர்ந்து உலக வர்த்தகக் கழகம் (WTO) என்ற அமைப்பை உருவாக்கின. இந்த உலக வர்த்தக கழகம் என்பது வாஷிங்டனின் பொதுக் கருத்து அடிப்படையிலான விரிவாக்கப்பட்ட பொருளாதார ஆதிக்கத்திற்கான ஒரு கருவி என்று அதன் முகமூடியைக் கிழிக்கின்றார் அனைத்துலக தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் அன்ரோனியோ நேடோ. பிரேஸிலைச் சேர்ந்தவர் இவர்.

நாங்கள் மேலே பார்த்த உலக வலைப்பின்னல்களில் மிக முக்கியமானது உலக கலாசாரச் சந்தை. அது மிகப் பெரும்பாலும் அகில உலக வீச்சுடையது. திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி, இசை, பத்திரிகைகள், சஞ்சிகைகள், ரி.சேர்ட்டுகள், விளையாட்டுகள், பொம்மைகள் ஆகிய இவை உலகக் கற்பனைப் பாத்திரங்களை மிதக்கவிடக் கூடிய, உலகக் கனவுகளைப் பரப்பக்கூடிய மக்கள் திரள் தொடர்பு சாதனங்கள். குலுக்கல் இசை நடன (Rock Dans) (உ-ம் Spicy Girls) நட்சத்திரங்கள், அமெரிக்கத் திரையுலக தடைகளைத் தகர்க்கும் சாதனை சினிமாக்கள் ஆகியவை உலகு தழுவிய தயாரிப்புகளாகின்றன.

பூகோள கிராமம் எங்கும் வாழும் மக்கள் அனைவரும் ஒரே சந்தைத் தயாரிப்பான பாடல்களையும், கதைகளையும், ஒரே மின்னணுச் சாதனங்களைக் கொண்டு கேட்கிறார்கள். அல்லது பார்க்கிறார்கள். அல்லது கேட்கவும் பார்க்கவும் பழக்கப்படுத்தப்படுகிறார்கள்.

செயற்கைக் கோள், கேபிள் ரிவி என்பவற்றின் விளைவாக மிக எதேச்சதிகாரமான அரசாங்கங்கள் கூட செய்திகள் பரவுவதன் மீது முன்னர் கொண்டிருந்த கடுமையான கட்டுப்பாடுகளையும், தமது குடிமக்களின் கனவு, கற்பனை வாழ்க்கை மீது அவை கொண்டிருந்த பிடிப்பை இழந்து கொண்டிருக்கின்றன.

மூன்றாம் உலகம் என இன்னமும் அழைக்கப்படும் பழம் பண்பாட்டு சமூகங்களில் கூட சாப்பாட்டு இடைவேளையை தொலைக்காட்சிகள் பிடித்துக் கொண்டு விடுகின்றன. உலகம் முழுவதும் உள்ள மதுபான விடுதிகளில், தேநீர் கடைகளில், சிற்றுண்டிச் சாலைகளில், ஏன் வாழிடங்களில் கூட ஒரே நிலைமை தான். உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்லும் போது அவர்களுடன் உறவாட, உரையாட முடியாமல் தொலைக்காட்சிகள் தடுத்து விடுவதாக முணுமுணுப்புகள் கிளம்புகின்றன.

தனித்திருந்தாலோ, சேர்ந்திருந்தாலோ, குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலோ எப்படியாயினும் பேசிக் கொள்ளும் உரையாடல்கள் கிடையாது. ஒருவருக்கொருவர் மனித உறவுகள் கிடையாது. தொலைக்காட்சியின் முன் ஆணி அடித்தாற் போல் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய முன்னேறிய தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் தாக்கத்தினால் பல நூற்றாண்டுகாலப் பழக்க வழக்கங்கள், ஏன் பண்பாடுகளே அழிந்து போகின்றன.

உலகம் முழுவதும் மிகவும் பரவலாக விற்கப்படும் கலாசாரத் தயாரிப்புகள் அமெரிக்கத் தயாரிப்பு என்ற முத்திரை தாங்கியுள்ளது. ஏறக்குறைய எந்த அமெரிக்கத் திரையுலக சினிமாவானாலும் சரி, அது தனக்கெதிரானது எனக்கருதும் ஏதாவது ஒரு இடத்து மரபு, மதிப்பீடு, ஒழுக்கக் கோட்பாடுகளைத் தாக்கக் கூடியதாக இருக்கிறது.

உலகப் பொருள் சந்தை என்பது இந்தப் பூமி முழுவதுமான அதி நவீன சந்தை (Super Market) இதில் உண்ணவும், குடிக்கவும், அணியவும், அனுபவிக்கவும் தேவையான பொருட்கள் திகைப்பூட்டும் வகையில் பரப்பிக் கிடக்கின்றன. செல்வச் செழிப்புள்ள வாழ்க்கைக் கனவுகள் உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று பரவும்படி பரிமாறப்படுகின்றன. ஆனால் உலக மக்களில் ஒரு சிறுபான்மையினர் மட்டுமே இந்த உலகப் பொருள் சந்தையில் வாங்கக்கூடியவர்களாக, வசதி படைத்தவர்களாக இருப்பார்கள். உலகில் வாழும் 650 கோடி மக்களில் ஏறக்குறைய 400 கோடிப் பேர் இதில் எதனையும் வாங்கக்கூடிய பணமோ கடன் வசதியோ இல்லாதவர்கள். இந்தப் பூகோள கிராமத்தில் வாழும் பெரும்பான்மையானோர் பெட்டிக் கடைகளில் பொருட்கள் வாங்கும் அளவே அதிகபட்ச வசதி படைத்தவர்கள்.

உலக தொழிலகங்கள் என்பவை பொருட்கள் உற்பத்தி செய்யும் செய்தித் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யும் எல்லா விதமான சேவைக்கும் புரியும் ஆடைகள், தொழிற்கூடங்கள், சட்ட அனுபவங்கள் மருத்துவமனைகள், உணவகங்கள் இன்னபிற எல்லா வகையான இடங்களும் அடங்கிய ஒரு வலைப்பின்னல்.

உலக நிதி வலைப்பின்னல் என்பது நாணயப் பரிமாற்றங்கள், உலகப் பங்குப் பத்திரங்கள் Master Cards என்று தொடர்ந்து மாறிக்கொண்டே போகும். இவ் வலைப்பின்னல் சூதாட்ட விடுதிகளின் சங்கிலிப் பிணைப்புக்கு நிகரானது. ஒரு நாளின் 24 மணி நேரமும் உலகின் பெரும் அந்நியச் செலாவணிச் சந்தைகளுக்கிடையே புள்ளி விபரங்கள் வினாடித் துளி வேகத்தில் போய் வந்து பலநூறு கோடி டொலர்கள் பரிமாறப்படுகின்றன.

இந்நான்கு சிலந்தி வலைப்பின்னல்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது அது உலகு தழுவிய கிராமம் என்பதில் இருந்து மிகவும் மாறுபட்ட ஒரு சித்திரத்தையே தருகின்றன. புது உலகப் பொருளாதாரத்தில் ஆதாயம் அடைபவர்களுக்கும் அவ்வாறின்றி விடுபட்டுப் போனவர்களுக்கும் இடையே ஒரு மிகப் பெரும் இடைவெளி நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

உலகின் தொண்ணூறு வீதமான செய்திகள் நான்கு பெரிய மேற்கத்தைய செய்தித் தாபனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளவை. UPI (United Press International, AP, (Associated Press), Reuter, AFP (Associated France Press) முதலிரண்டும் அமெரிக்கருடையவை. மற்றையது பிரித்தானிய, பிரான்சிய அரசுகளுக்கு உரியவை. அவர்களுடைய வெளியீட்டிற்கு மேடொக்கிலிருந்து ரைம்ஸ், வார்னர், சி.என்.என் வரையான நிறுவனங்கள் உதவுகின்றன. இவை எல்லாம் அமெரிக்கருடையவை. UPI க்கு அமெரிக்க செய்திப் பத்திரிகைகளிடமிருந்து நிதி உதவி கிடைக்கிறது.

UPI செய்தி தாபனம் 71 வீதம் அமெரிக்கச் செய்திகளையும், 9.6 வீதம் ஐரோப்பியச் செய்திகளையும் 5.9 வீதம் ஆசியச் செய்திகளையும் 3.2 வீதம் லத்தீன் அமெரிக்கச் செய்திகளையும் 1.8 வீதம் ஆபிரிக்கச் செய்திகளையும் தருகிறது என்கிறது ஒரு புள்ளி விபரம்.

இந்தப் புள்ளி விபரங்கள் தகவல் ஏகாதிபத்தியத்தின் தன்மையைக் காட்டும் நல்லதொரு படம். 50 நாடுகளுக்கு மேல் இருக்கும் ஆபிரிக்காவுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தைக் காட்டிலும் ஐக்கிய அமெரிக்காவுக்கு அதி கூடிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார் டொன் றோஜஸ் என்கிற எழுத்தாளர்.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டுப் பிரஜைகளை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். ஏனெனில் அங்கு போட்டியிடும் அங்கத்தவர்களைப் பற்றிய முழு விபரமும் எவ்வளவு அமெரிக்கப் பிரஜைகளுக்குத் தெரியுமோ அதேயளவு இவர்களையும் தாக்கி இருக்கின்றன என்று நக்கலாகக் கூறியிருக்கிறார் முன்னாள் தன்ஸானிய ஜனாதிபதி.

சிம்பாபே நாட்டு செய்தியாளராகிய டினகான் ம்பொன்டா மேற்கிலிருந்து வரும் அகன்ற செய்தி ஆற்று நீரோட்டத்திற்கு எதிராக மூன்றாம் உலக நாடுகளிலிருந்து சொட்டும் தகவல்களே, நியூயோர்க், லண்டன், பாரிஸ் ஆகியவற்றின் வாசல்களை மிகவும் சிரமப்பட்டுத்தான் அடைகின்றன என்று கூறுகிறார்.

மேற்கிற்கும் ஆசியாவிற்கும் இடையில் நடைபெறும் செய்திப் பரிமாற்றத்திற்கு ஒரு உதாரணம். AP என்கிற அசோசியேட்டட் பிரஸ் 90 ஆயிரம் வார்த்தைகளை ஒரு நாளில் நியூயோர்க்கிலிருந்து ஆசியாவுக்கு அனுப்புகிறது. பதிலுக்குத் திருப்பி 19 ஆயிரம் வார்த்தைகளையே ஆசியாவிலிருந்து பெற்றுக் கொள்கிறது.

பிரித்தானியாவின் மதிப்பைக் காப்பாற்றுவதற்கு றொய்ட்டர் நிறுவனம் பாடுபட்டதைப் போல வேறெந்த நிறுவனங்களும் பாடுபட்டதில்லை என்கிறார் றொய்ட்டரின் முன்னாள் தலைவரான ஜோன்ஸ்.

இத்தகைய செய்தி தாபனங்கள் நேரடிச் செய்திகளைத் தருகின்றன. நிகழ்வுகளை விமர்சிக்கின்றன. ஆராய்கின்றன. இருந்தும் இவை பொய்யான எடுகோள்களைச் சுட்டிக்காட்டுவதில்லை. அவற்றைத் திருத்துவதில்லை. மாற்றமுறாத ஒரே அச்சான சிந்தனைகளிலிருந்து அவை மீள முடியாமல் உள்ளன.

ஒவ்வொரு நாளும் அவற்றிலிருந்து வெளிவரும் வார்த்தைகளில் பல உயிர் திருகப்பட்டவை. உதாரணத்திற்கு பயங்கரவாதம் என்ற வார்த்தை. இந்த வார்த்தையை மேற்கு நாடுகளுடன் தொடர்பு படுத்தி இந்த தொடர்பு சாதனங்கள் ஒரு போதும் பாவிப்பதில்லை. அவ்வார்த்தை மூன்றாம் உலகுக்கு மட்டுமே சொந்தமானது. அமெரிக்க அரசு பயங்கரவாத இராணுவத்துக்குப் பயிற்சி கொடுத்து அதன் முகவர்களை அனுப்பி தனக்கு வேண்டப்படாத அரசுகளை அழித்தொழிக்க முயல்கிறது. வேண்டப்படாத நபர்களைக் கொன்று தள்ளப் பார்க்கிறது. ஆனால் லிபிய அரசு பயங்கரவாதத்தை வளர்க்கிறது என்று தான் இந்த மேற்கத்தேய ஊடகங்கள் வர்ணிக்கின்றன. ஆப்கானிஸ்தானிலிருந்த சோவியத் சார்பு அரசைக் கவிழ்ப்பதற்காக பின்லேடன் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்டு விருந்து வைக்கப்படுகிறார். அப்போது அவர் பயங்கரவாதியல்ல. எப்போது அமெரிக்க நலன்களுக்கு முரணாக - முரண்டு பிடிக்கத் தொடங்கினாரோ அன்றைக்கு அவர் அமெரிக்க அரசுக்குப் பயங்கரவாதியாகிறார். அமெரிக்க அரசுக்கு மட்டுமல்ல மேற்கத்தைய ஊடகங்களுக்கும் அவர் பயங்கரவாதியாகிறார்.

வியட்னாம் யுத்தத்தின் போது வியட்கொங் கெரில்லாக்களை வலியச் சண்டைக்குச் சென்றோர் என்றே இந்த தொடர்பு சாதனங்கள் அழைத்தன. ஆனால் அமெரிக்கர்களை எந்தத் தொடர்பு சாதனமும் இன்னொரு நாட்டின் மேல்படை எடுத்தவர்கள் அல்லது ஆக்கிரமித்தவர்கள் என்று குறிப்பிட்டதில்லை. தனியே ஈடுபட்டவர்கள் (Involved) என்று மட்டுமே குறிப்பிட்டன.

ஆறு மாதத்திற்கு மேல் சதாமை ஹிட்லராகக் காட்டிய பின்னர் தான் அமெரிக்காவால் ஈராக்கை வெல்ல முடிந்தது. இதனைத் தான் தொடர்புசாதன யுத்தம் என்பர். யுத்தம் ஆரம்பிக்க முன்னர் ஈராக்கிய தலைவர் பலமுறை பலர் ஊடாக சவூதி அரேபியாவூடாகக் கூட தாம் குவைத்திலிருந்து சென்று விடுவதாகக் கூறினார் என்பது பலருக்கும் தெரியாது. யுத்தம் முடியும் வரை அமெரிக்க பிரித்தானிய ஊடகங்கள் எவையும் இதுபற்றிச் சொல்லவில்லை.

ஆபிரிக்கா பற்றிய மேற்கு நாடுகளின் எண்ணத்தைப் பாருங்கள். ஆபிரிக்காவின் தொடர்ச்சியான பஞ்சம், வறுமை புதிய யுகத்தின் இன்னொரு குணாம்சம். அதிகரித்து வரும் இந்த வறுமைக்கு அரசியற் காரணம் மேற்கு நாடுகளில் வேரூன்றி உள்ளது. ஆபிரிக்காவின் வறுமையும் அதற்கு மேற்கு நாடுகள் கொடுத்த உதவியும் உலகு முழுவதும் பரவிய செய்தி. ஆனால் ஆபிரிக்க நாடுகளிலிருந்து மேற்கு நாடுகளுக்கு வட்டிப் பணமாக இரண்டு மடங்கு செலுத்தியிருக்கிறார்கள். இது பலருக்கும் தெரியாத செய்தி. பிள்ளைகள் பசியால் அவஸ்தைப்படுவதையும், சாவதையும், அச்சிறார்களின் சடலங்கள் தாழ்க்கப்படுவதையும் தொலைக்காட்சியில் காட்டினார்கள். ஆனால் அவர்களுடைய சாவில் தமது நிதி ஸ்தாபனங்களின் பங்கைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

அது செய்தியல்ல, பொய்யான ஒரு நடுநிலையை நோக்கிக் கம்ராக்கள் திருப்பப்பட்டிருக்கின்றன. செய்தி நிருபர் வஞ்சகமில்லாமல் ஒரு பார்வையாளராக நிற்கிறார். பின்னர் தலைப்புக்கள் எழுதுவார். முற்சாய்வுகள் களையப்படாதவிடத்து, விடுபட்டவைகள் நிரப்பப்படாதவிடத்து பொய்த் தகவல்கள் உண்மையாகி விடுகின்றன. இது ஒரு முரண். இதில் புறநோக்கு என்ற பொய் முகத்தைக் களைந்தால் இதன் உண்மை வெளிவரும். வளைகுடாப் போர் இதற்கு நல்ல உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.
இலங்கையில் அரச சார்பு தொடர்பு சாதனங்களை விட தனிப்பட்டவர்களின் அல்லது நிறுவனங்களின் தொடர்பு சாதனங்களும் இருக்கின்றன. பொதுவாகவே நடுநிலை அல்லது சுதந்திர தொடர்பு சாதனங்கள் என்ற அபிப்பிராயம் இவை பற்றி உண்டு. இதன் அர்த்தம் பெரும்பாலும் ஆட்சியிலுள்ள கட்சிக்குச் சார்பற்றதாக இருப்பதாகக் கொள்ளப்பட முடியுமே அன்றி அரசியற் சார்பற்றதாகக் கொள்ளப்பட முடியாது.

இவற்றை விளக்குவதற்காக பின்வருமாறு மூன்றாக வகைப்படுத்தலாம்.
1. வணிகப் பத்திரிகைகள் - பிரதான நாளிதழ்களை இந்தப் பிரிவுள் அடக்கலாம்.
2. அரசியல் கட்சிகளின் பத்திரிகைகள்
3.களிப்பூட்டும் பத்திரிகைகள் (Entertinment)

இதில் முதலாவதான வணிகப் பத்திரிகை என்ற பிரிவுள் இலங்கையில் வெளியாகும் நாளிதழ்களை உள்ளடக்கலாம். இவற்றின் பிரதான நோக்கம் விளம்பரம் மற்றும் விற்பனையூடாக தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதே. இப்பத்திரிகைகள் தமது வணிக நோக்கிலான இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கேற்ற ஒரு அரசியலை வரித்துக் கொள்ளும்.

இரண்டாவது அரசியல் கட்சிகளின் பத்திரிகைகள். இதற்குள் லேக்கவுஸ் நிறுவனத்தால் வெளியிடப்படும் பத்திரிகைகளிலிருந்து சாதாரணமாகக் கட்சிகளால் தமது அரசியல் நோக்கை வெளிப்படுத்த வெளியிடப்படும் பத்திரிகைகளையும் அடக்கலாம்.

> உலகம் முழுவதும் மிகவும் பரவலாக விற்கப்படும் கலாசாரத் தயாரிப்புகள் அமெரிக்கத் தயாரிப்பு என்ற முத்திரை தாங்கியுள்ளது. ஏறக்குறைய எந்த அமெரிக்கத் திரையுலக சினிமாவானாலும் சரி, அது தனக்கெதிரானது எனக்கருதும் ஏதாவது ஒரு இடத்து மரபு, மதிப்பீடு, ஒழுக்கக் கோட்பாடுகளைத் தாக்கக் கூடியதாக இருக்கிறது.

மூன்றாவது களிப்பூட்டும் பத்திரிகைகள் - சினிமாவைப் பிரதானமாகவும் வெறுமனே களிப்பூட்டும் இன்னபிற விடயங்களையும் கொண்டு வெளியாகும் பத்திரிகைகளை இதனுள் அடக்கலாம்.

இப்பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனங்கள் யாவுமே மக்களுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காகத் தான் தாம் பத்திரிகைகளை வெளியிடுவதாகக் கூறக்கூடும். ஆனால் மக்களுடைய விருப்பங்களும் அவர்களுடைய தேவைகளும் எப்போதும் ஒன்றாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவை பல்வேறு சந்தர்ப்பங்களில் முரணாக இருப்பது தான் யதார்த்தம். இந்த யதார்த்தத்தினடியாக மக்களுடைய அல்லது அந்தச் சமூகத்தினுடைய தேவையை எந்தப் பத்திரிகை முன்னெடுத்துச் செல்கிறதோ அல்லது அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறதோ அது தான் மாற்றுப்பத்திரிகையாக இருக்க முடியும்.

அது அரசியலில் மட்டுமல்லாது பண்பாடு, சமூகவியல், அறிவியல், பெண்நிலை, மொழியியல் என்று அனைத்துத் துறைகளிலும் மாற்றைக் கோரி நிற்கும்.

எனவே இன்றைய தொடர்பு சாதனங்களின் போக்கை எப்படி நாம் அடையாளப்படுத்துவது? அல்லது தொடர்பு சாதனவியலாளர்களின் நிலையை எப்படி உருவாக்கிக் கொள்வது? யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சற்றடே றிவியு பத்திரிகையின் ஆசிரியராக அதன் இறுதிக்காலம் வரை இருந்த காமினி நவரட்ண அவர்கள் ஒரு தடவை தெரிவித்த அபிப்பிராயம் இது தொடர்பான இரத்தினச் சுருக்கமான ஒரு விளக்கத்தைத் தருகிறது. அவர் ஜே-ஆருடன் தனிப்பட்ட தொடர்பு வைத்திருந்தவரென்பதால் வழமை போலவே எல்லா இயக்கங்களாலும் குறிப்பாகப் புலிகளாலும் கூட சந்தேகிக்கப்பட்டார். அதே போல வடக்கிலுள்ள பிரிவினைவாதிகளுடன் சேர்ந்துள்ள ஒரு புலி என்று தென்னிலங்கை அரசியல்வாதிகளாலும், பத்திரிகையாளர்களாலும் விமர்சிக்கப்பட்டார். தமிழ் மக்கள் மத்தியிலேயே கடமை செய்யும் ஆர்வத்துடன் வந்து அவர்கள் மீதான அரசின் தாக்குதல்களை விமர்சித்தும் அம்பலப்படுத்தியும் எழுதி வந்த அவர், அவர்களின் அரசியல் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தார். ஆனால் பிற்காலத்தில் விசாரணைக்காக அவர் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டார். தவிரவும் இயக்கங்களில் முன்னணியாக இருந்தவர் இப்போது மாறி விட்டார் என்றும் தமது போராட்டங்களுக்கு எதிராக எழுதுவதாகவும் கண்டிக்கப்பட்டார். அது பற்றி அவர் அவ்வியக்கத்தினர்க்கு தெரிவித்தது இதுதான். நான் தமிழ் மக்களுடைய நலன்களைக் கருத்தில் கொண்டு அதற்காகவே எழுதி வந்தேன், வருகிறேன் அதைச் செய்வதற்காகவே நான், பலர் மறுத்த போதும் யாழ்ப்பாணம் வந்தேன். நீங்கள் தான் மாறி விட்டீர்கள். மக்களுக்காகப் போராடப் புறப்பட்ட நீங்கள் இப்போது அதை மறந்து விட்டீர்கள், அவர்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படுகிறீர்கள். இதுதான் உண்மையான மாற்றம், மாறியது நீங்கள் அன்றி நான் அல்ல, நான் எப்போதும் மக்களின் பக்கமே நிற்கிறேன்.

இதுதான் நான் நினைக்கிறேன் தொடர்புசாதனவியலாளுக்கு வழிகாட்ட வேண்டிய நெறியாக இருக்கும் கோட்பாடு ஆகும். நாம் எந்த அரசியலுமற்ற நடுநிலையாளர்கள் என்பதல்ல, மாறாக நாம் ஒடுக்கப்படும் மக்களின் நியாயங்களுக்கான குரலாக ஒலிக்க வேண்டும் என்றே நான் கருதுகின்றேன்.

எனவே தொடர்பு சாதனவியல் என்பது வெறுமனே தரவுகளைத் தருவதோ, தகவல்களையும் அனுபங்களையும் வெற்றிடங்களிலிருந்து வருமாற் போல் தெரிவிப்பதோ அல்ல. மாறாக அவற்றின் பகைப் புலங்களையும் சேர்த்துத் தருவதேயாகும். இதனால்தான் நவீன தொடர்பியலாளர்கள் ஒரு விடயத்தை ஆதரித்து வாதாடும் இயல்புடைய தொடர்பியலை ஏற்றுக்கொள்கிறார்கள். நான் சார்ந்துள்ள பத்திரிகையான சரிநிகர் இந்த அடிப்படையையே கொண்டு வெளிவருகின்றது.

வெறுமனே தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள் என்று சொல்கிற கூற்றை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் எதைத் தெரிவிப்பது என்பதை அவர்கள் ஏற்கெனவே தீர்மானித்து விடுகிறார்கள். அவர்கள் தீர்மானித்துத் தெரிவிக்கிறார்கள். எதை? தங்களுடைய இருப்புக் குறித்துக் கேள்வி கேட்காத, அவர்களுடைய அரசியலை கேள்வி கேட்காத, அது குறித்து சந்தேகம் கூட எழுப்பாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை அவர்கள் தெரிவிப்பார்கள் மக்களைத் தீர்மானிக்கச் சொல்லி. ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதில் மக்கள் தீர்மானிக்க என்ன இருக்கிறது?

ஆனால் இந்த மேலாட்சியுடைய பத்திரிகைப் பண்பாடே பிரதான பத்திரிகைப் பண்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும். இந்த மேலாட்சியுடைய பத்திரிகைப் பண்பாட்டுக்கு எதிராகவே மாற்றுப் பத்திரிகைப் பண்பாடு எழுந்து வரும். தமிழ்நாட்டில் நிலவும் கோயிற் பண்பாட்டையும் அதனை ஏற்காத சித்தர் மரபையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இந்த விவகாரம் மிகவும் நுண்ணிய உணர்திறனைக் கொண்டதாக வெளிப்படையான ஆரவாரங்களுக்கு அப்பால் விலகி நின்று பிரதான போக்கு என்ன என்பதனை இனங் கண்டு கொள்வதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நாம் சார்ந்துள்ள அரசியலை நாம் தெளிவுறப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அதையொட்டி நாம் கட்டியெழுப்பியுள்ள சிந்தனை முறைகளுக்கும் பிற சிந்தனை முறைகட்கும் இடையிலான தொடர்ச்சியான பரஸ்பர தாக்கங்களை திறந்த மனதுடன் எதிர் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப்படி இருக்கும் போது மட்டுமே, பொதுவான நீரோட்டத்தில் அள்ளுப்படாமல் நின்று, பரந்துபட்ட மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட விதத்தில் தொடர்பியலைப் பேண முடியும். சில உதாரணங்களைப் பாருங்கள். கொழும்பில் தொழில் ஆணையாளர் தர்மலிங்கம் கைது செய்யப்பட்ட விதம், யாழ்ப்பாணம் பிடிபட்ட போது பிரபாகரனின் 'ஆடம்பர மாளிகை' எனக் காட்டப்பட்ட விதம், டென்மார்க் சித்திரா விவகாரம், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட சாரதாம்பாள் வழக்கு போன்ற விடயங்களைப் பொதுவாக நாட்டின் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு கையாண்டன என்பது உங்களுக்குத் தெரியும். பாவிக்கப்படும் மொழி, சம்பவங்கள் குறித்துத் தொகுக்கப்படும் தகவல்கள், இணைக்கப்படும் ஆதாரங்கள் என்பவை தெளிவாக தொடர்பியலாளரின் அரசியலை இனங்காட்டி விடுகின்றது.

தொடர்பியல் ஒரு தொழில் என்ற அடிப்படையில், மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு அதன் விழுமியங்கள் அமைய வேண்டும் என்று கருதப்பட்டாலும், தொடர்பியலாளரது அரசியல் சார்பு நிலை, சிந்தனை என்பவற்றினூடாகவே தகவல்கள் பகிர்வதற்காக வழங்கப்படுகின்றன. எந்தவித சிந்தனையையும் கருத்தையும் கொண்டிருக்கவும் அதை வெளிப்படுத்தவும் ஒருவருக்குள்ள அடிப்படை உரிமையானது தொடர்பியலாளர்களை பாதுகாக்கும் உரிமையாக உள்ளது. அது அவசியமானதும் கூட இதனால் எந்த அரசியல் மக்களின் நலன் சார்ந்தது என்பதில் மாறுபட்ட கருத்துள்ளவர்கள் மாறுபட்ட விதத்திலான தகவல்களைத் தரக்கூடும் (தரவுகளை அல்ல). உதாரணமாக அத்துலத் முதலி அவர்கள் கொல்லப்பட்ட போது முகலன் வீதியில் கண்டெடுக்கப்பட்ட இளைஞன் ஒரு தமிழ் இளைஞன் என்பதையும், அவனிடம் இருந்து எடுக்கப்பட்ட அடையாள அட்டை அவனை அடையாளம் காண உதவியது என்பதுவும் பற்றி அன்றைய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால் அவை எவையும் அந்த இளைஞன் கொலை செய்தவனாக இருக்கலாமா? அடையாள அட்டை போலியாக இருக்க முடியாதா? என்று ஆராய முற்படவில்லை. சித்திராவை புலி என்றும், அவர் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்தார் என்றும், டென்மார்க்கில் புலிகளுக்காக நிதி சேர்த்தவர் என்றும் எல்லாப் பத்திரிகைகளும் எழுதின. அவற்றில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பதை அவை கேள்விக்குள்ளாக்கவில்லை. தர்மலிங்கம் விவகாரத்தில் 'றொக்கற் லோஞ்சர் ஏவுகணைகள்' பொம்மைக்குள் இருந்ததாக சொல்லப்பட்டதை அப்படியே நம்பி தமது கற்பனையையும் சேர்த்து எழுதியது தினமுரசு பத்திரிகை. இவ்வாறு எழுத ஒருவருக்கு உரிமை இல்லையா? என்று கேட்கலாம், நிச்சயமாக இருக்கிறது. ஆனால் இவற்றின் அரசியல் என்ன என்பது தான் முக்கியமானது. இது மக்களின் நலன் சார்ந்த ஒன்றா என்பது கேள்வியாக எழுகிறது. இவ்வாறான தகவல்களை வெளியிடும் போதும், அனுபவங்களைத் தெரிவிக்கும் போதும் ஒரு தொடர்பியலாளர், பிற்காலத்தில் நடக்கப் போகும் பல அநியாயங்களுக்குத் துணை போபவராகின்றார். இதுவே அவரது நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்புவதற்குக் காரணமாகி விடுகிறது.

இறுதியாக தொடர்பு சாதனங்களுக்கு மட்டுமல்ல, அவற்றைப் பகிர்பவர்களுக்கும் அரசியல் உண்டு என்பதால், தொடர்பு சாதனங்கள் அந்த அரசியலையும் வியாபாரமாக்கியுள்ளதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாகச் சொல்வதானால் பகிர்வோர்களின் மனதின் விருப்பங்களை சரியாக இனங்கண்டு கொள்கிற அல்லது, பெருமளவு பகிர்வோர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை இனங்காண்கிற தொடர்பியலாளர்கள் அல்லது ஊடக நிறுவனங்கள் அவற்றை அந்த அரசியலைத் தமது தொழிலுக்கும் வருமானத்தைப் பெருக்குவதற்குமுரிய ஒரு விடயமாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. திருவிழாக் காலத்தில் நடைபாதைக் கடை போடுபவர்கள் போல பரபரப்பிற்கும் பிரபல்யத்துக்கும் ஏற்ப தாளமிடுவதன் மூலம் தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. தமிழில் வெளியான தினமுரசு வார இதழ் இதற்கு ஒரு உதாரணமாகும். அப்பத்திரிகைக்கு வருமானம் மட்டுமே முக்கியம். அதற்கு அரசியல் பற்றி அக்கறை கிடையாது என்று சிலர் கருதலாம், ஆனால் அது உண்மையல்ல. அதன் வியாபாரத்தைப் பெருக்க வாய்ப்பான ஒரு அரசியல் அதற்கு இருக்கவே செய்கின்றது. அது அவர்களின் அரசியல். அது மக்களின் நலன்கள் குறித்ததல்ல, அவர்களின் மனங்கள் குறித்தும், பணம் குறித்தும் அக்கறைப்படும் அரசியலாகும். இவ்வாறான அரசியலை மக்கள் நலனுக்கு எதிரான அரசியலாக அடையாளப்படுத்துவதே பொருத்தமானதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை மீறல்கள், யுத்த அழிவுகள் குறித்த தரவுகளை திரட்டி அறிக்கையிடும் அமைப்புக்களுக்கும் கூட ஒரு அரசியல் உண்டு. அவை பகைப்புலன்களை சித்திரிக்கும் விதம், சமூக வரலாற்று அரசியல் ஆழங்களை அவை தொகுக்கும் விதம், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களது அரசியல் இனங்காணப்படல் முடியும்.

முடிவாக இப்படிச் சொல்லி முடிக்கலாம்.

தொடர்பு சாதனத்துறையை வழி நடத்துவதே அரசியல் தான். அரசியல் சார்பற்ற தொடர்பியல் என்று ஒன்று கிடையாது. இருப்பதெல்லாம் எந்த அரசியலைச் சார்ந்தது இது என்ற கேள்வி மட்டுமே. அது மக்களுடைய நலனைச் சார்ந்ததாக இருக்குமானால் அதுவே மக்களின் விடுதலைக்கும் சமூகத்தின் மேம்பாட்டிற்கும் வழி வகுக்கும். அதுவே மாற்று அரசியலாகவும், மாற்று அரசியலைக் கொண்ட பத்திரிகையாகவும் இருக்கும். பெரும் பத்திரிகைகள் எதை நம்ப மறுக்கின்றன என்றால் எதிர்கலாசாரமே எழுந்து கொண்டிருக்கும் புதுக்கலாசாரத்தை விதைப்பதாக இருக்கின்றதென்பதை. அதுவே நாட்டிலுள்ள இன்றைய ஒவ்வொரு நிலைமையையும் அமைதியாகவும் நிதானமாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறது. மாற்றுப் பத்திரிகையே இதன் உயிரோட்ட மையமாக இருப்பது அதாவது தகவல் தருதல், ஆவணப்படுத்தல் போன்றவற்றோடு இம்மாற்றங்களுக்கு உற்சாகமூட்டி வழமையான பத்திரிகைகள் செய்யாத முறையில் வலுவேகமாக வளர்ந்து வரும் வாசகர் மத்தியில் பெரும்பாதிப்பை எற்படுத்துதல். உண்மையில் இத்தகைய பத்திரிகைகள் தரும் உண்மை பற்றிய விபரிப்புக்கும் பெரும்பத்திரிகைகள் உலகு பற்றித் தந்த சித்திரிப்புக்கும் பாரிய வேறுபாடு உண்டு.

பத்திரிகை ஆசிரியர் என்ற ரீதியில் ஒருமுறை நான் மார்கிறட் மீட் அவர்களை ஆலோசனை கேட்டேன். அதற்கு அவர் 'ஒருபோதும் உனது வாசகர்களை என்ன வேண்டும் என்று கேட்காதே.அப்படிச் செய்வாயாயின் அவர்களைச் சந்தோசப்படுத்துகின்ற முறையில் அவர்கள் கைக்குள் ஆட வேண்டி வரும். மாறாக நீ உனக்கு என்ன வேண்டும் என்று கேள்.அதை அவர்களுக்குக் கொடு. அவர்களைச் சந்தோசப்படுத்துவதற்கும் களிகொள்ள வைப்பதற்கும் இடையே வித்தியாசம் உண்டு.

மாற்றுப் பத்திரிகையில் புதிய கருத்துக்கள் மேற்கிளம்புவது என்பது அட்டைப்பட விடயதானங்களுக்காக அவ்வப்போதுள்ள நிலவரங்களை எழுதும் பத்திரிகையாளர்களால் எழுதப்படுவதல்ல.சிந்திக்கும் வாத எதிர்வாதத்தில் ஈடுபடும் சிந்தனையாளர்கள் தரிசன வீச்சுடைய எழுத்தாளர்களாலேயே எழுதப்படுகிறது. இந்நிலையில் மாற்றுப் பத்திரிகையில் தான் எழுச்சி கொள்ளும் புதுக்கலாசாரம் தன்னை இனம்காட்டிக் கொள்கிறது.

எப்படித் தனிமனிதர்கள் உலகில் வித்தியாசத்தைக் காட்டக்கூடும். எப்படி எம்மால் உண்மையான சமூகத்தை ஏற்படுத்தக்கூடும். வோஷிங்டனில் உள்ள மூடப்பட்ட கதவுகளின் பின்னால் உண்மையாக என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஜனரஞ்சக கலாசாரத்தில் எம்முடைய நேரத்தைச் செலவழிப்பதில் என்ன லாபம்? அதன் கருத்து என்ன? உன்னுடைய ஊக்குவிப்பு உணர்வுகட்கு எங்கு போவாய்?

நாங்கள் அதிகாரத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கிய வர்களின் குரலாக எமது குரலை வளர்த்துள்ளோம். நாம் எதற்காக நிற்கிறோம்? எமது எதிர்கால தரிசன நோக்கென்ன? என எம்மை ஊடுருவி ஆராயும் கேள்விகளைக் கேட்பதை நாம் நோக்காகக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவற்றிற்குரிய சாத்தியமான பதில்களைக் கண்டு பிடிப்பதற்குக்கடுமையான தேடலில் ஈடுபட வேண்டும் என நாம் நினைக்கிறோம். இந்தத் தேடலில் நீங்களும் எம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ■

# முகங்களும்...

- த. அகிலன்




*என்னை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களில்லை*
*நான்அவர்களின் - முகங்களின் முன் - கண்ணாடிபிடிப்பதை - அவர்கள்விரும்பவில்லை*
*தங்களுடைய உண்மை முகங்களை - அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள்*
*தம்முடையதில்லை - என சத்தம் போடுகிறார்கள்*
*முகங்களின் காயங்களை கசிந்தொழுகும் - அழுக்குகளை அழகுக் கிறீம்களுக்குள் மறைக்கிறார்கள்*
*வாய்களின் நாற்றத்தை வாசனைத் திரவியத்தால் துரத்துகிறார்கள்*
*இன்னமும் - அவர்களின் முகங்களின் நிஜத்தில் கொப்புளித்தும் சிராய்த்தும் ஊனம் வடிகிறது -*
*அவர்களின் மனசுகள் போலவே விகாரமாய்....* ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளும் ஒரு காற்று



நிலாப் பாட்டுப் பாட
சிறு நேரமும் இல்லை

சமாதான சத்தம்
காதுகளில் கேட்க தொடங்கிவிட்டது

கிடப்பில் கிடந்த தோணி
மீண்டும் ஒரு
வெள்ளோட்டத்தில் கலந்திருப்பதாய்
இன்னும் பல செய்திகள்

ஆமாம் இனி நான் கூட
ஊருக்குப் போகலாம்

மெழுகுகளால் செய்த சந்திபோல
பிணங்கிடந்த அந்த பாதைகள்
செம்மண், தரவைகளில்
உயிர் திரிந்த ஞாபகங்கள்
பள்ளமடு குளத்துமேட்டில்
எனக்காய் காத்திருக்கும்
நினைவுக் கல்லின் உள்ளழகு
இதுபோன்று இன்னும் பல
எனக்காய் காத்திருப்பின்
ஒரு காலை நேர ஆரம்பத்தில்
என் தோளிலோர்
மண்வெட்டியும், பல செங்கற்களையும்
நான் சேர்க்க வேண்டி வரலாம்

நித்தியமான என் பூமியில்
புனர் வாழ்வு உதிப்பது
அவசியமாவதால்
என் தேசக் காற்றே

விரலறுக்கப்பட்ட ஒரு தச்சனின்
முனகலைப் போல
என் மனசு கத்தினாலும்
அந்த காற்றை நான்
சுவாசிக்க வருவேன்

**உவைஸ் கனி**

## பாரிசில் நடைபெற்ற டானியல் நினைவுக் கருத்தரங்கு




கடந்த மே மாதம் பாரிசில் டானியல் நினைவுக் கருத்தரங்கு முழுநாளாக நடைபெற்றது. காலை, பிற்பகல் அமர்வாக இரு அமர்வுகள் நடந்தன. காலை அமர்விற்கு சி.சிவநேசனும், பிற்பகல் அமர்விற்கு வி.ரி.இளங்கோவனும் தலைமை வகித்தனர். நான்கு தலைப்புகளில் இக்கருத்தரங்கில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. பஞ்சமரின் பார்வையில் படைப்பாளி டானியல், டானியல் நினைவுகள், டானியல் சாதிய எதிர்ப்பில் ஓர் புதிய பரிமாணம், இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் என்பன அத்தலைப்புகளாகும். இத்தலைப்பில் முறையே அருந்ததி. வி.ரி.இளங்கோவன், ஏ.ஜி.யோகராசா (சுவிஸ்) சி.கா.செந்தில்வேல் (தேசிய கலை இலக்கியப் பேரவை - இலங்கை) ஆகியோர் உரையாற்றினர்.

உயிர் நிழல், அசை, கீழைத்தேச தொடர்புமையம், தேசிய கலை இலக்கியப் பேரவை ஆகிய அமைப்புகளால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் கலை இலக்கிய வாதிகள், இலக்கிய ஆர்வலர்கள், சமூக அக்கறையாளர்கள் என ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்தும் வந்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

- சுபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகத் தோட்டங்களில் வீதி நாடக அரங்கு

- நல்லபெருமாள் -

அண்மைக்காலமாக மலையகத் தோட்டங்களில் வீதி நாடகங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன, ஆர்வமாய் மக்கள் திரண்டு இவ்வீதி நாடகங்களை பார்ப்பதற்கு கூடிவருகின்றனர். 'வெளிச்சம்' நாடகக் குழுவினால் தோட்டங்களில் வீதி நாடகங்கள் நடாத்தப்படுகிறது. இவ் நாடகக் குழு, தோட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை பிரதான நோக்காகக் கொண்டு செயல்படுவதை இந்நாடகங்களை பார்ப்போர் உணர்வர்.

தோட்ட சிறுவர்களை வேலைக்கு அனுப்புதல், தோட்டப் பெண்களின் நிலை, சமூகப் பாகுபாடுகள் தொடர்பான கருத்துகளை இவ்வீதி நாடகங்கள் மையக் கருவாகக் கொண்டு தோட்ட மக்களுடன் பேசுகிறது. இவ்வீதி நாடகக் குழுவிற்கு அனுசரனையாக கண்டியில் இயங்கும் 'சமூக அபிவிருத்தி நிறுவனம்' உள்ளது.

வெளிச்சம் நாடகக் குழுவின் பிரதான செயற்பாட்டாளராக அந்தனிஜீவா உள்ளார். இவர் நாடகங்களை இயக்குவதுடன் வீதி நாடகங்களில் பாத்திரமேற்று நடிக்கவும் செய்கிறார். அந்தனிஜீவா மலையகத்தில் இன்று பல் தளங்களிலும் செயற்படும் உழைப்பாளியாக உள்ளார். நாடகத் துறையில் 25 வருடத்திற்கும் மேலான ஈடுபாடும் கொண்டவர்.

இலங்கை தமிழ் சூழலில் வீதி நாடகங்களின் செயற்பாடு இன்னும் தீவிரமாக பாத்திரத்தை ஆற்றவில்லை. வடக்குகிழக்கு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக வெடித்த 80, 90களில் வடக்கில் வீதி நாடகங்கள் அதிக கவனிப்பை பெற்றிருந்தது. வன்னியில் தொடர்ச்சியாக வீதி நாடகங்கள் மிகச் சிறப்பாக அரங்கேறுவதாக அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர். மலையகத்தில் இன்று "வீதி நாடகங்கள்" மக்களுடன் உரையாடுவதற்கு சிறந்த மார்க்கமாக உள்ளது கவனிக்கத் தக்கதாகிறது.

வீதி நாடகங்கள் தொடர்பாக அந்தனி ஜீவாவுடன் உரையாடும்போது "இலங்கையில் வீதி நாடகச் செயற்பாடு தீவிரமாகக் காணப்படவில்லை. காமினி ஹத்தொட்டுவேகமவின் குழுவே மலையக மக்களிடையே சில வீதி நாடகங்களை நடாத்தியுள்ளது. மக்களை விழிப்பூட்டுவதற்கு அவர்களிடையே நேரடியாகச் சென்று பேசுவதற்கும் வீதி நாடகம் சிறந்த ஊடகமாகும். மலையகப் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை வீதி நாடகம் மூலம் எடுத்துச் செல்கிறோம். இதனால் அவர்களின் பிரச்சினைகளை அவர்களே உணர்ந்து கொண்டு தீர்வுகளைத் தேடுகின்றனர்."



வீதி நாடகம் என்பது கூட்டு முயற்சியாகும், நடிகர்கள் மாத்திரமின்றி பார்வையாளர்களும் முக்கியமானவர்களாகின்றனர், நாங்கள் இந்த வீதி நாடகங்களில் அந்த மக்களின் வாழ்வியலோடு இணைந்த "தப்பு" இசைக் கருவியை பயன்படுத்துகிறோம். அது மாத்திரமல்ல பங்கு பற்றுபவர்களும் தோட்டப் புறத்தைச் சேர்ந்த நடிகர் நடிகையர், அதனால் தோட்ட மக்களின் உணர்வுகளை சிறப்பாக வெளிப்படுத்த முடிகிறது" என்கிறார். ■





சே குவேரா:
வாழ்வும் மரணமும்

ஜோர்ஜ் ஜி காஸ்டநாடா
தமிழில் - எஸ்.பாலசந்திரன்

இலங்கை விலை
945.00

"காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கும் ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டல்களுக்கும் எதிரான போராட்டத்தில் வீரமணமடைந்த மிகச் சிறந்த மனிதர்களின் வாழ்வும் பணிகளும்தான் விடுதலைவேட்கையின் ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றன"

தமிழின் முக்கிய நூல்களுக்கு

MILLENNIUM BOOK LAND
465/1, GALLE ROAD,
COLOMBO-03, SRI LANKA
Tel: 01 589606, 077 389127 Fax: 01 589460
e-mail: 3man@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சம் முதல் பூமிவரை
ஏ.எல்.ஷிஹாறா

மூன்றாவது மனிதன் பதிப்பகம்
73/14, வொக்ஸ்வல் லேன்,
கொழும்பு -02
விலை: 160.00



- சி.சிவசேகரம்

தமிழில் விஞ்ஞானத் தகவல்களும் விஞ்ஞானம் பற்றிய விசாரணையும் துரிதமாக வளர்ந்து வந்த காலம் ஒன்று இருந்தது. கோவையிலிருந்து ஜி.ஆர்.தாமோதரன் தொடக்கிய பணி அரைநூற்றாண்டிற்கும் அதிகமான காலமாக இன்னும் தொடர்கிறது. தமிழில் விஞ்ஞான நூல்கள் வருகின்றன. எனினும் விஞ்ஞான அறிவினதும் தொழில்நுட்ப வளர்ச்சியினதும் அளவுக்கு ஈடுகொடுக்கும் விதமாக அவற்றின் தரமும் எண்ணிக்கையும் இல்லை. இதற்குக் காரணங்கள் பல. எனினும் தாய்மொழிக் கல்வி விடயத்தில், ஒரு சமூகம் என்ற அளவில் தமிழ்ச் சமூகம் தமிழகத்திலும் இலங்கையிலும் மிகவும் தவறிவிட்டது.

கல்வி பற்றிய நமது பார்வையில் உள்ள குறைபாடுகளை நாம் தீர விசாரிக்கத் தயங்குகிறோம். தீர்வுகளைத் தவிர்க்கிறோம். இலங்கையின் கல்வி முறை கடந்த 25 ஆண்டுகளுள் சந்தித்த பெருஞ் சரிவைக், கல்வியிலாளர்கள் பலர் ஏற்கத் தயங்கி நிற்கின்றதையும் நாம் காணுகிறோம். நமது கல்வியும் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் நமது சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு மானவை என்ற கருத்து எவ்வாறு வலுவிழந்து போயிற்று? இன்று பல தமிழ்ப் பட்டதாரிகளினதும் பல்கலைக்கழக மாணவர்களதும் இலட்சியம் நாட்டைவிட்டு வெளியேறுவது என்றே தோன்றுகிறது. சிங்கள மாணவர்களும் இதற்கு விலக்கல்ல.

இத்தகைய சிக்கலான ஒரு சமூகச் சூழலிற், கல்வியின் நோக்கம் எப்படியாவது பரீட்சையில் தேறுவது என்பதாக முடங்கி விட்ட பின்பு, பாடசாலைகள் வெறும் பேர்ப்பலகைகளாகிக், கிளிப்பிள்ளைகளை உற்பத்தி செய்யும் ட்யூட்டறிகளின் கையில் மாணவர்களது சிந்தனை ஆற்றல் திணறுகிற ஒரு நிலையில் மாணவர்களுக்கு அறிவுத் தாகத்தை உண்டாக்கும் முயற்சிகள் எதிர்நீச்சல்கள் தாம்.

'பிரபஞ்சம் முதல் பூமி வரை' என்ற நூல், விஞ்ஞான அறிவைத் தகவல்களின் கோவையாக நோக்குகிற மாணவர்களை இலக்காக வைத்தே எழுதப்பட்டது போன்ற எண்ணம் ஏற்படுகிறது. மாணவர்களுக்குத் தாம் வாழும் கோள் பற்றியும் அதை உள்ளடக்கிய பரிதியின் கோள் மண்டலம் பற்றியும் எத்தகைய அறிவு இருக்கிறது என்பது பற்றிய ஒரு ஊகத்தின் அடிப்படையிலேயே வானியல் தொடர்பான நூலொன்றை எழுத முடியும். நவீன விஞ்ஞானம் உருவாகுவதற்குச் சில ஆயிரம் ஆண்டுகள் முன்னரே, நுட்பமான வானியல் அவதானிப்புக்கள் மனிதரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை பிரபஞ்சம் பற்றிய சரியான ஒரு பார்வையை உருவாக்கப் போதியனவாக இருக்க வில்லை. நமது கோள் மண்டலம் பற்றிய பல குழப்பமான சிந்தனைகளைக் கூட அவற்றாற் தகர்க்க முடியவில்லை. ஆயினும் அவை விண்வெளி பற்றிய அறிவுக்கு ஒரு வலுவான அத்திவாரமாகவே அமைந்தன. இன்றும் அது முக்கியமான ஒரு அறிவுதான்.

எனவேதான் வானியல் பற்றிய தொடக்க நூல்கள், இன்னமுங்கூட, நமது வெற்றுக் கண்கட்கும் சாதாரண தொலை நோக்கி மூலமும் அவதானிக்கக் கூடிய விடயங்கட்கு முக்கியம் வழங்குகின்றன. இந்த விதமான ஒரு அறிமுகம் இல்லாமல் ஒரு நூலைத் தொகுப்பது சிரமம். அதே வேளை, பொறுமையாக, படிப்படியாக விடயங்களைக் கற்றுத் தேறும் நிதானம் இன்று பாடசாலை மாணவர்களிடையே ஊக்குவிக்கப்படுவது இல்லை. இது தகவல் யுகம் என்கிறார்கள். அதனாலோ என்னவோ தகவல்களைச் சீரணிக்காமலே விழுங்குகிற ஒரு கல்வி மரபு உருவாகி வருகிறது. இதைக் கருத்திற் கொண்டே என்னவோ இந்த நூலும் அடிப்படையில் தகவல்களின் கோவையாகவே அமைந்துள்ளது.

இவ்வாறான நூல்களுக்கான தேவை இருக்கிறது. ஆனால் அவை எவ்வாறு திட்டமிடப்பட வேண்டும் என்ற விடயத்தில் நமது குழந்தைகளின் விஞ்ஞான அறிவுப் பின்னணி கவனிப்பில் எடுக்கப்பட்டாக வேண்டும். இவ்விடயத்தில் இந்த நூல் மிகவும் பலவீனமானது என்பேன்.

மறுபுறம் வெகு சிரமப்பட்டு ஆயிரக்கணக்கான தகவல்களைத் தொகுத்து வாசிக்க உகந்த மொழிநடையில் இந்த நூல் ஆக்கப்பட்டுள்ள போதும், தமிழில் விஞ்ஞான உரையாடல்கள் வழக்கிலில்லாத காரணத்தால் புனையப்படும் கலைச் சொற்கள் மட்டுமன்றி நிலைநிறுவப்பட்ட கலைச் சொற்களும் வாசிப்புக்கு இடையூறாகவே அமைகின்றன. இந்த இடத்து, நூலாசிரியையின் எந்தக் குறைபாட்டையும் விட நூலின் தன்மையே பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது. "பிரபஞ்சம் என்றால் என்ன?" என்ற முதலாவது கேள்வியே வெள்ளுடு என்றால் என்ன, வெள்ளுடுத் தொகுதிகட்கு இடையிலான வெளி என்பது எதைக் குறிக்கிறது. என்ற கேள்விகளை எழுப்புகிறது. அறியாத ஒன்றை அறியாத வேறொன்றால் விளங்குவது கடினம். எனவே தான் பூமியினின்று பிரபஞ்சத்துக்கு மேற்கொள்ளப்படும் பயணம் பிரபஞ்சத்தினின்று பூமிக்கு வருவதை விட இலகுவானது.

எனது வானியல் அறிவு மிக அற்பமானது விண்வெளிப் பயணங்கள் பற்றிய பெரும் அக்கறையும் எனக்கு இருந்ததில்லை. அவற்றின் விஞ்ஞான முக்கியத்தை நான் மறுக்காத போதும் எனது இயங்கு தளத்தில் அந்த அக்கறைக்கு அதிக இடம் இருக்கவில்லை. எனவே நூலில் உள்ள கணிசமானளவு தகவல்கள் எனக்குப் புதியன. எனினும் சில விடயங்களில் எனக்கு ஐயம் ஏற்படுகிறது. உதாரணமாக, உடுத் தொகுதியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் நிலைகளில் ஏற்பட்ட மாற்றம் (ப.118) காரணமாக சூரியன் மேட ராசியில் அமைவது மார்ச் 21ம் திகதியன்றி ஏப்ரல் நடுவில் நிகழ்கிறதற்கு புவியின் நகர்வு வேகத்தில் ஏற்பட்ட மாற்றம் தான் காரணமா?. இது 3000 ஆண்டுகளில் நேர்ந்திருந்தால் புவியின் பாதை சூரியனை நோக்கியா அல்லது விலகியா போகிறது? இம் மாற்றத்தின் காரணம் சாய்வாக உள்ள புவியின் சுழல் அச்சின் அலைவு காரணமானது என்று ஒரு விளக்கத்தை முன்பு கேட்டிருக்கிறேன். அது தவறானதா?

ஓரை வட்டத்தில் 12 ராசிகள் என்பது மனிதர் ஏற்படுத்திய ஒரு கருத்தாக்கம் அல்லவா? ஒபியுஸ் உடுத் தொகுதியின் நகர்வு இந்த ராசிகளின் எண்ணிக்கையை எவ்வாறு அதிகமாக்கும்? இங்கு வாசகருக்கு ஏற்படும் தெளிவீனத்துக்கு நூலுக்குள் விடை இல்லை. இது போன்ற விடயங்களில் நூலாசிரியை கூடிய கவனஞ் செலுத்தியிருக்கலாம்.

இந்த நூல் தமிழில் வானியல் தொடர்பான பல தகவல்களையுடைய ஒரு பயனுள்ள கையேடு. இதன் தொடக்கத்தில் ஒரு பொருளடக்கமும் முடிவில் ஒரு சுட்டியும் வழங்கப்பட்டிருப்பின் வாசிக்க மிகவும் வசதியாக இருந்திருக்கும்.

இவ்வாறான நூல்கள் தமிழில் வருவது மிகவும் முக்கியமானது எனினும் தமிழில் வாசிப்புப் பழக்கம் வளராத வரை விஞ்ஞான நூல்கள் படைப்போரது ஆத்மதிருப்திக்கு மேலாக எதையும் வெல்லப் போவதில்லை என்பது மிகவும் வருந்தத் தக்க உண்மை. அதை அறிந்தும் அதை மீறிச் செயற்படக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களது போராட்டம் நாளைய சமூகத்தில் புதிய விஞ்ஞான வித்துக்களை விதைக்குமாயின் அது அவர்களது மரணத்தின் பின்பும் வாழும் ஒரு பயனுள்ள சமூகப் பணியாகும். எனவே நூலாசிரியையும் அவரை ஊக்குவித்த ஒவ்வொருவரையும் மனமார வாழ்த்துகிறேன். நூலின் தயாரிப்பு மிகவும் செய் நேர்த்தியாக உள்ளமையும் போற்றத்தக்கது.

**உக்குவளை அக்ரம்**

'மூன்றாவது மனிதன்' 14வது இதழில், எனது சிறுகதைத் தொகுப்பிற்கு, சி.சிவசேகரத்தின் பதிவு சமசரங்களுக்கு இடங்கொடாமல், முகஸ்துதிகளை நிராகரித்து நிற்கிறது. அவ்வெழுத்துக்களின் நிதர்சன உண்மைகளை முழுமனதுடன் ஏற்றுக்கொள்கிறேன். இனி வருகின்ற, என் படைப்புகளில் மேற்போந்த தவறுகள் நிகழாமல், என் கதைகளை மதிப்பீடு செய்ய எனக்குள்ளே ஒருவனை, தூண்டி விட்ட சி.சிவசேகரம் அவர்களுக்கு நன்றி. இருப்பினும் என் கதைகள் மீதான, அவரின் சில விமர்சன பார்வைக்கு பதிலளிப்பது உகந்ததாக இருக்குமென்று கருதுகிறேன்.

'அதிர்வு' கதை மாவனல்லை சம்பவத்தின் பின்னர். எனது ஊரில் ஏற்டவிருந்த, சம்பவத்தின் உண்மைநிலையே இக்கதை. உக்குவளை கிராமத்தை சுற்றி பின்னப்பட்ட கதையில் மாவனல்லை இனவாதத்தின் தீ எங்களையும் எரிக்கவிருந்த பதற்றமான நிலையும், இனவாதத்தை தூண்டி, குளிர்காய நினைத்தவர்கள் பொலிஸார் கைது செய்து ஒரு கிழமை தடுப்பு காவலில் வைத்ததும் உண்மை. இது என் பிரதேச சகல இன மக்களும் அறிந்த உண்மை. எவ்வாறு, பொதுசன ஐக்கிய முன்னணிக்கு கும்பிடு போடும் கதையாக இருக்க முடியும்? என் கிராமத்தின் அவலத்தை கோடிடும் இக்கதை அரசியல் தலைமைகளை திருப்திபடுத்தும் கதையல்ல (இக்கதையின் நிகழ்வுகள் மாவனல்லையில் நடந்ததல்ல - உக்குவளையில் நடந்தது)

ஆங்கில சினிமாக்களில் மயிர் கூச் செறியும் இசையுடன், அதிரடியான தாக்குதலைப் பார்த்து, பிரமித்திருக்கிறோம். ஆனால், விடுதலைப் புலிகளால், விமான நிலையத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலும், தீவிரவாதிகளின் அமெரிக்காவின் உலக வர்த்தக கட்டிடம், பெண்டகன் மீதான தாக்குதலும், சினிமா பாணியிலான முடிவாக இருந்தபோதும், உண்மை எம்மை இன்னும் ஆட்கொள்கிறது.

இதைப் போன்ற நிலைப்பாடுடையதுதான் 'சிலந்தி வலை'யின் கதை. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கம்பளையில் நடந்த உண்மை சம்பவத்தின் கதையே இது. இதைப்போன்ற நிகழ்வு, எனது ஊரிலும், அதுவும், எனது அயல் வீட்டிலே நடந்தது. இளைஞர்கள் அடித்து, உதைத்து, ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டதை ஊர்மக்களே வேடிக்கை பார்த்ததை நீங்கள் எப்படி, அறிந்திருக்க முடியும். உங்கள் பார்வையில் சினிமாத்தனமான முடிவாக இருந்தாலும், உண்மையை புறக்கணிக்க முடியாது. உங்களுக்கு கற்பனையாக இருப்பது, இங்கு சம்பவமாக நடந்துள்ளது. ஒரு தளத்தின் மீது இரண்டு பார்வைகள் - இரண்டுமே அவரவர் பார்வையில்.... முடிவுகளாக வெளிப்பட்டிருக்கிறது.

வலிந்தோ - புனையப் பட்டோ, சமாதானத்தை வேண்டி நிற்கவில்லை ஒவ்வொரு கதையின் பாத்திரவார்ப்பும் இம்மண்ணில் உலாவுகின்ற, அன்றாடங் காய்ச்சிகளின் உணர்வு நிலைக்களம் தான். சந்தித்து, அவதானித்து, வேதனையுற்ற சம்பவங்களின் ஊற்றாகவே பல கதைகள் அமையப் பெற்றுள்ளது.

பல்லினங்கள் மத்தியில் வாழும் எம் பிரதேசம், இனங்களை கடந்து, மொழிகளைத் தவிர்த்து, நேசங்களையும், உறவுகளையும், அரவணைக்க உதவும் ஆயுதமாக சமாதானம் இங்கு வேண்டப்படுகிறது. அதுவே, கதைகளிலும் விதியாகிறது.

முரண்கள் வெளியே மட்டுமல்ல, நமக்குள்ளேயும் உண்டு. உள்வாங்கி... கிரகித்துக் கொள்வதில் நம் விமர்சன இதயத்திற்குள்ளும் திரைகள். நிகழ்வுகள், பிரச்சினைகள், இயற்கையின் சீற்றம் இவ்வாறு தான், என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, மனதில் பதியமிடப்பட்ட முடிவுகள் - எதிராக செயல்பட்டாலும் செறிக்க முடியாத நிலைப்பாடாக மனத்திரையில் தலை நீட்டுகிறது நமக்குள். உங்கள் விமர்சனப் பார்வை, எழுத்து தரிசனம். அது உங்கள் கொள்கையின் பிரதிபலிப்பு. அது நிறைவாகவும் இருக்கலாம். தவறாகவும் சித்தரிக்கப்படலாம். கதைகள் மீதான கணிப்பு முடிவல்ல. ஒரு புள்ளியின் தொடக்கம் என்பதே என் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் சித்திரம் வரைந்து

சித்திரமொன்று வரைந்து வந்தேன்
முதலில் பென்சிலால் கோடு போட்டு
நல்ல கலர்கள் தெரிவு செய்து
எனக்குப் பிடித்தாற் போல்
வர்ணம் தீட்டி வைத்தேன்
இளம் கலர்கள் பாவிக்க
வடிவாகத்தான் இருந்தது
ஒவ்வொரு நாளும் அதனைப் பார்த்து
மேலும் மேலும்
அழகு படுத்தினேன்
அதுவும் பார்க்கப் பார்க்க
வடிவாகவே காட்சியளித்தது
எனக்கும் பெருமைதான்
நல்ல சித்திரம் கீறும் ஆற்றல் இருப்பது கண்டு

பின் ஒரு நாளில்
திடீரெனப் பெய்த மழை
எந்த வீட்டினுள்ளும் பட
சித்திரத்தின் பிரதான பாகங்கள்
அழிந்தே போயின
ஏற்க மனம் கஷ்டப்பட்டது
இவ்வளவு நாளும் பாடுபட்டு
வரைந்த ஓவியம்
அசிங்கமாயிற்று
என்றாலும், மீண்டும் நம்பிக்கையோடு
கீறி வருகிறேன் அமைதியாக

கே. முனாஸ்



## சந்திப்பு

வனவாசம் முடிந்தாயிற்று
எம் வாழ்க்கை
கரையொதுங்கிய பிரேதமாய், சுயமிழந்து
திசைமாறிய பின்

வழி நெடுகிலும் அடுக்குமாடிகள் போல்
காலடித் தடங்கள்
நடந்த கால்கள் மட்டும். இல்லை!

சவர அலகினிற்கும் தைரியப்படா நீ
தானியங்கிகளோடு நடந்த சுவடுகள்.
அவையும்
சுவடுகளோடு சுவடுகளாயிற்று!

இன்று
குருதி சொட்டச் சொட்ட
வெறி கொண்டு வேட்டையாடி
உன்னை இழுத்து வந்து வாகைசூடியவர்கள்,
மௌனித்துள்ளனர், ஆயுதங்களோடு,

உன் மண்ணில்
உன் தெருவில்
உன் தோழர்களின் பவனி கண்டு!

நாம் ஒவ்வொரு முகமாய்
இனங்கண்டு இனங்கண்டு வியக்கும் வேளை
அவற்றில் உன் முகம் இல்லை!
காலடிச் சுவடுகளின் ஞாபகங்கள் எழுந்து
திரும்ப முடியாத உன்னை உறுதிசெய்து
திரும்பி விடுகின்றன!

நீ
வீரவணக்கத்திற்குரிய தெய்வமாம்!
நீ
இன்னுமின்னும் நடக்க விரும்பும் கால்களுக்கு
வழிகாட்டியாம்!
திரும்ப முடியாதாம்

துயரை உருப்பெருக்கி ஒட்டிய முகங்களோடு
கைகளையசைத்து நின்றிருந்தோம்
"ஆயுதங்களுக்கு இனி வேலையிருக்காதென"
ஆறுதலிட்டுச் சென்றனர்
உன் தோழர்கள்

ஆயுதங்கள் என்றுதான் வேலைசெய்தன?
மனிதர்களைத்தானே அது ஏய்கின்றது!

- உருத்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரமான இருப்பு

*சூரியன் மேற்கில் உதிக்க வேண்டுமென*
*அவர்கள் விரும்புகிறார்கள்*
*எனினும்*
*அவர்கள் பெரிதும் வியக்கும்படி*
*சூரியன், தன் சொந்த முடிவுகளையே எடுக்கிறது*

## ஒரு சனத்தின் மரண அறிவித்தல்

*உருதுவில் வாழ்ந்த*
*அக்தர்-அல்-இமான் இறந்து விட்டார்.*

*ஆனால் அவர் எப்போதேன் இருந்தாரா?*
*மட்டுப்பட்ட ஒரு சனத்தின்*
*மட்டில்லாத மொழியான*
*உருதுவில் எழுதுவது*
*முதலாவது காதலிக்குக் கடிதம் எழுதுவதுபோல*
*அனுப்புதற்கும் இல்லை,*
*என்றுமே வாசிப்பதற்கும் இல்லை.*

## ஏழையின் அன்னை

*அவள் வயதான, பாழ்பட்ட ஒரு பெண்,*
*நரகத்தை ஒத்த கசப்புணர்வுடையவள்*
*தாம் சாகவேண்டும் எனும் ஆசையை உரக்கச் சொல்லும்*
*தன் வயதையொத்த பெண்களைப் போலன்றி*
*மூச்சுவிட்டபடி*
*நிலைத்திருக்கவே அவள் விரும்பினாள்.*
*ஏனெனில் அவள் சாவீட்டுச் செலவுக்கு*
*அவளுடைய மகனிடம் பணமில்லை.*

## உண்மை

*உண்மை நம் நெஞ்சங்களைக் கவர்வதில்லை,*
*தன்னம்பிக்கை நம்மை மலைக்க வைக்கிறது*
*பொய்யன் நான்*
*பொய்யுரைக்கிறேன்*
*நீங்கள் என்னை நம்புகிறீர்கள்.*

## விதி

*என் நண்பர்கள் அனைவரும்*
*சொர்க்கத்தில் வாழ்கின்றனர்.*
*கடவுள் எனக்கும்*
*பிறந்த நாள் பரிசாக வழங்கிய*
*பகுத்தறியும் கடிகாரத்துக்குச் செவி மடுத்தபடி*
*நான் நரகத்தில் இருக்கிறேன்.*

**ஹரிஸ் க்ஹலிக்**
(பாக்கிஸ்தானிய கவிஞர்)

தமிழில் : மணி



## என் குரலைக் தேடுகிறேன்

*கடலின் காட்டுமிராண்டி மௌனத்துள் என்குரலைத் தேடுகிறேன்*
*கடல் கல்லாகிறது*
*இலை யுதிர் காலத்தின் மஞ்சட் பாலைவனத்துள் தேடுகிறேன்,*
*இலையுதிர் காலம் பச்சையாகிறது*
*(நிலாவொளி விரல்களைக் கொண்ட என் கரங்க*
*என் கரங்கள் என் கரங்களல்ல*
*(தொலைவிலுள்ள காட்சிக்கான*
*என் கண்கள் என் கண்களல்ல*
*காலத்தின் வன்மையான தாடையினின்று என் சொல் புறப்பட்டு*
*விதைகளைப் பற்களாய்க் கொண் வயல்களில் துளிர்க்கிறது.*

அசோ ஷொபோவ் (*Aco Sopov*)
*மஸிடோனியக் கவிஞர்*



மூன்றாவது மனிதன் இதழும் நண்பர்களும் இணைந்து நடாத்திய 'இலக்கியச் சந்திப்'பில் ஆற்றப்பட்ட உரை.

# 80களுக்குப் பின் பெண்ணிய எழுத்துக்களும் அவற்றின் தாக்கங்களும்

இலக்கியச் சந்திப்பு*
28, 29 ஜுலை 2001

- சூரியகுமாரி பஞ்சநாதன்

நவீன ஆய்வியல் துறையில் பெண்நிலைவாதம் ஒரு முக்கியமான கோட்பாடாக வளர்ந்து வருகிறது. மரபு சார்ந்த இரண்டாயிரம் ஆண்டுகளால் பின்னப்பட்ட பல்வேறு வகைகளது கற்பிதங்களைக் கட்டவிழ்க்கும் பெண்நிலைவாதம் அறிவுசார் கற்கை நெறியாகத் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பெண்நிலைவாதச் சிந்தனை ஓட்டத்தினூடாக பெண் ஆனவள் தன்நிலை நின்று சிந்தித்து நோக்கும் Women's Point of View முக்கியமாகிறது. இந்தச் சிந்தனை ஐரோப்பாவில் கூட திடீரெனத் தோற்றம் பெறவில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏற்பட்ட வாழ்வியல் மாற்றமும் அறுபதுகளில் ஏற்பட்ட கருத்துநிலை மாற்றங்களும் பெண்களைச் சிந்திக்க வைத்தன. குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்கள் சமூகத்தினதும் குடும்பத்தினதும் தளைகளிலிருந்து அதாவது சிக்கலிலிருந்து மீள்வதற்காக அமைப்பு ரீதியாக ஒன்று திரண்டனர். அத்தகைய ஆக்ரோஷமான வெளிப்பாடே பெண்நிலைவாதம் தனியே ஐரோப்பாவிற்கு மட்டுமுரியதல்ல கீழைத்தேய நாடுகளுக்கும் உரியது என்கின்ற எண்ணப்பாங்கு வலுப்பெறக்காரணமாயிற்று.

இலங்கையில் எண்பதுகளில் ஏற்பட்ட அரசியல் சமூக விழிப்புணர்வு மற்றும் மொழி இனம் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களுடன் பெண்நிலைவாதச் சிநதனை அறிமுகமாகிறது.

பேரினவாதத்தின் அச்சுறுத்தலுக்கும் நெருக்குதலுக்கும் தமிழ் பேசும் மக்கள் உள்ளான போது அவர்களின் எதிர்ப்புணர்வு விடுதலைப் போராட்டமாக வெடித்தது. ஆரம்பத்தில் ஆண்கள் மட்டுமே போராளிகளாக இணைந்து கொண்டனர். ஆனால் போராட்டத்தை அகலித்து விஸ்தரிக்க வேண்டிய காலத்தேவை காரணமாக இளம் பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு வீட்டை விட்டு வெளியேறினர்.
இலங்கையைப் பொறுத்தவரையில் அதாவது ஈழத்தில் தமிழ்ப் பெண்கள் தமது சுயசிந்தனையின் பிரகாரம் தம்மைப் போராளிகளாக இணைத்துக் கொண்டு முதன்முதலாக வீட்டை விட்டு வெளியேறியமை வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அம்சமாகும்.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் இயக்கங்கள் பல தோற்றம் பெற்று அதில் பெண்களும் இணைந்து கொள்ள பெண்களுக்கான சஞ்சிகைகளும் நூல்களும் தோற்றம் பெறத் தொடங்கின.

அந்த வகையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திடமிருந்து (புளொட்) தோழி எனும் சஞ்சிகையும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிடமிருந்து (ஈ.பி.ஆர்.எல்.எப்.) செந்தணல் என்ற சஞ்சிகையும், தமிழீழ தேசிய விடுதலை முன்னணியிடமிருந்து (என்.எல்.எப்.ரி) சக்தி என்ற சஞ்சிகையும், விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து சுதந்திரப் பறவைகள் என்ற சஞ்சிகையும் வெளியாகின. இச்சஞ்சிகைகளின் உள்ளடக்கமாக மண்மீட்பு, வீரம், சுதந்திர உணர்வு, சக போராளியை இழந்து பாடும் கையறு நிலைப் பாடல்கள் தொடர்பான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

எமது சமூகச் சூழலில் ஆண், பெண் என இருபாலாருக்கும் தனித்தனியே நடத்தைகள் வரையறுக்கப்பட்டிருப்பதானது பால் வேறுபாடு குறித்து பல சர்ச்சைகளையும் கேள்விகளையும் கலை இலக்கியங்களூடாக எழுப்பியுள்ளது.

வர்க்கம், சாதி, இனம், பால் வேறுபாடு என்பன எமது சமூக உருவாக்கத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துவதனால் சமூக உருவாக்கம் தொடர்பான வினாக்களுக்கும் இன்றைய பெண் படைப்பாளிகள் தமது கலை இலக்கியங்கள் வாயிலாகவே பதிலளிக்க முனைந்துள்ளனர்.

கலை இலக்கியங்கள் மக்களை அறிவூட்டிக் கொண்டிருப்பது ஒரு புறமிருக்க மறுபுறத்தில் மாற்றுச் சிந்தனைகளின் வெளிப்பாட்டிற்கும் கலை இலக்கியங்களே பிரதான வடிகாலாகி இன்றைய கால தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

நவீன ஆக்க இலக்கியத் துறையானது மாறிவரும் வாழ்வியல் விழுமியங்களையும் குறிப்பாகத் தனிமனிதனின் ஊசலாட்டம், கூட்டுக் குடும்பச் சிதைவு, தனிக்குடும்பத்தின் தோற்றம் மீண்டும், தனிக்குடும்ப உடைவு, கணவன் - மனைவி உறவு முறைச் சிக்கல், உளவியல் தாக்கங்கள், சமூகத்துடனும் குடும்ப உறவுகளுடனும் ஒட்ட முடியாது அல்லற்படும் இன்றைய இளம் தலைமுறையினரின் பிரச்சினை, வன்முறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம், நெறிப்பிறழ்வு, மாற்றுக்கலாசாரம் போன்றவை பற்றிப் புதியதொரு பாணியில் புதிய குறியீடு படிமங்களை இணைத்துப் பேச ஆரம்பித்துள்ளது.

பெண்நிலைவாதம், தலித்தியம் போன்ற சிந்தனைகளும், அதனடிப்படையான போராட்டமும் ஆய்வு ரீதியாக முன்வைக்கப்படுகின்றன.

தமது ஒழுகலாறுகளின் ஊடே தம்மை உணர்ந்து அதன் வழியே வெளிப்படுத்தும் பெண்நிலைவாத தலித்திய சிந்தனைகள் தமக்கெனத் தனித்த மொழி உருவாக்கப்பட வேண்டும் எனத் தீவிரமாகக் கோருகிறது.

இவ்வம்சங்களை மனதில் நிறுத்தியே பெண் எழுத்துக்கள் குறித்தும் நாம் ஆராய வேண்டி உள்ளது.

பெண்நிலை நோக்கில் பெண் எழுத்துக்களை ஆய்விற்குட்படுத்தும் போது பெண்களின் எழுத்துக்கும் ஆண்களின் எழுத்துக்கும் அடிப்படையில் நிறைய வித்தியாசங்களைக் காண முடியும்.
பெண்கள் தமக்குரிய மொழியில் தமது பிரச்சினைகளை அணுகி வெளிப்படுத்தும் போதே பெண்ணுடைய மொழி பிரதானமாகிறது.

பெண்கள் தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஆணாதிக்கக் கொடூரத்தினின்றும் தம்மேல் திணிக்கப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுத் தமக்கான தளத்தில் நின்று செயற்படவும் எழுதவும் விழைகின்ற போதே பெண்களின் உண்மையான மொழி, கட்டுக்களை உடைத்துக் கொண்டு பிரசன்னமாகின்றது.

ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் என்ற வகையில் 60களில் 'கடவுளரும் மனிதரும்' தந்த பவானி ஆழ்வார்பிள்ளை 80 களில் 'ஒரு கோடை விடுமுறை' தந்த ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 'துயிலும் ஒரு நாள் கலையும்' தந்த கோகிலா மகேந்திரன் மற்றும் கோகிலம் சுப்பையா, நா.பாலேஸ்வரி, குந்தவை, புதுமைப் பிரியை என்ற பத்மா சோமகாந்தன், மண்டூர் அசோகா, கவிதா, யாழ் நங்கை எனப்படும் அன்னலட்சுமி இராஜதுரை என்கின்ற இடைக்கால பெண் எழுத்தாளர்களும், 80 களுக்குப் பின் முக்கியம் பெறுகின்ற பெண் எழுத்தாளர்களாக 'சொல்லாத சேதிகள்' தந்த அ.சங்கரி முதல் ஔவை வரையிலான 12 பெண் கவிஞர்கள், 'விலங்கிடப்பட்ட மானுடம்' தந்த சுல்பிகா, 'காலம் எழுதிய வரிகள்' தொகுப்பின் மேஜர் பாரதி, கப்டன் வானதியின் 'போர்க்கால அனுபவங்கள்', 'மறையாத மறுபாதி ', 'சக்தி' போன்ற புலம்பெயர் இலக்கியத் தொகுதிகளைப் படைத்துக் கொண்டிருக்கும் மல்லிகா, மைத்திரேயி, பிரியதர்சினி போன்றோர் தமக்கென்ற தனித்த முத்திரை குத்திக் கொண்ட சிவரமணி, செல்வி, போன்றோருடன் தாமரைச் செல்வி,, ஔவை சந்திரா தியாகராஜா, ஆழியாள் எனப்பட்டியல் நீளும்.

ஈழத்து பெண் எழுத்தாளர்களுடைய எழுத்துக்களில் ஆண், பெண் உறவு முறைச் சிக்கல்களை மட்டுமல்லாமல் பேரினவாதத்திற்கு எதிரான குரலையும், யுத்தத்தினால் பெண்கள் பாலியல் வல்லுறவு போன்ற குரூரங்களுக்கு முகம் கொடுப்பது போன்ற எரியும் பிரச்சினைகள் பெண்கள் எழுத்துக்களாக விஸ்வரூபம் எடுத்தன. இதையே இன்று ஈழத்துப் பெண் எழுத்தாளர்களது தவிர்க்க வியலாத அனுபவ வார்ப்புகளாகி அதன் அவசியத்தை இலக்கிய ரீதியில் நிலைநிறுத்தி உள்ளது.



பொதுவாக ஈழத்துப் பெண் எழுத்தாளர்களால் யுத்தம், பெண்களின் பிரச்சினைகள் புகலிடங்களில் பெற்ற அனுபவங்கள், ஆணாதிக்கத்தின் கொடூரம் என்பவற்றுடன் சிவரமணி, செல்வி போன்றோரால் ஈழத்துப் போராட்டக் குழுக்களின் உள் இயக்க முரண்பாடுகளும் அரசியல் நிலைப்பட்டதாக முன்வைக்கப்பட்டன. தாமரைச் செல்வி யுத்தகால நெருக்குதல்களையும், பெண் உணர்வுகளையும் கலைத்துவத்துடன் வெளிப்படுத்தியவர் என்று பேசப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆண், பெண் என்ற வரையறுப்பிற்கும் அப்பால் முஸ்லிம் கவிஞர்களும் சேர்ந்து மரணத்துள் வாழ்வோம் என்ற கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றை எண்பதுகளின் வெளியிட்டனர். இதுவே ஈழத்தின் முதல் எதிர்ப்பிலக்கியத் தொகுதியாகப் பெருமை பெற்றது.
விடுதலைப் போராளிகளாக இருந்து தமது போர்க்கால அனுபவங்களை வெளிப்படுத்திய கப்டன் வானதி போன்றோரின் எழுத்துக்களும் அவர்களது அனுபவங்களும் யுத்தத்தில் அவர்கள் பெற்ற உணர்வு உந்துதல்களை வெளிப்படுத்தின. இன ஒடுக்குதலின் பெறுபேறாகத் தமது மண்ணை எவ்வளவு தூரம் நேசிக்கின்றனர் என்பதும் தமது சக போராளிகளை இழந்து துயருறுவதும் இலட்சியத் தாகமும் இவர்களின் ஆக்கங்களில் துலங்கும் விசேட அம்சங்கள்.

அடுத்ததாக, பால்நிலை வேறுபாடுகளை வெளிப்படுத்திய பெண்களின் படைப்புக்களை ஒரு புறமாகவும், சமூகப் பிரக்ஞையுடன் பிரசாரம் கலந்து படைக்கப்பட்ட சிருஷ்டிகளை இன்னொரு புறமாகவும், அழகியல் அனுபவங்களாக வெளிப்படுத்தும் கலைத்துவம் மிக்க ஆக்கங்களை வேறாகவும் பிரித்து நாம் பார்க்கலாம்.

அந்த வகையில் சரிநிகரில் வெளிவந்த சுந்தரியின் சிறுகதைகளான மூடுதிரை, ஒளிபடைத்த கண்ணினாய், கேட்டிருப்பாய் காற்றே போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகள் பெண் எழுத்தாகி எம்முடன் பேச வல்லவையாக உள்ளன. பெண்களின் உணர்வுகள், பால்நிலைப் பிரச்சினைகள் ஒளிவு மறைவின்றித் தெளிவாகவும், கலைத்துவமாகவும் எடுத்தாளப்பட்டதில் இவரது ஆக்கங்கள் முக்கியம் பெறுகின்றன.

இதேபோல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுகள் கவிதைகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் கோணேஸ்வரி பற்றிய கவிதை சர்ச்சையைக் கிளப்பிய மிகமுக்கியமான கவிதை.

மொழியைத் தென்றலாக மட்டுமல்ல பெண்களால் சூறாவளியாகவும் பயன்படுத்த முடியும் என்பதைக் கோடிட்டுக் காட்டியவர் இந்தக் கலா. ஒரு தமிழ்ப் பெண்ணின் நியாயமான கோபம் இக்கவிதையில் தொனிக்கும் முக்கிய கருப்பொருள் .



பெண் எழுத்துக்களை நாம் ஊடுருவி நோக்கினால், அவற்றில் பெண்கள் மனந்திறந்து பேசும் உண்மையை நாம் கண்டு கொள்ளலாம்.

பெண் எழுத்துக்களில் வாழ்வு பற்றிய தேடல், நம்பிக்கை, நம்பிக்கையீனம், அதிர்ச்சி, உளப்பாதிப்புகள் நிறைந்தனவாகவும் இந்த அதிர்வுகளிலிருந்து மீட்கும் பரிசோதனைக் களமாகவும் இருப்பதனை அவதானிக்கலாம்.

இலக்கியங்கள் சமூக மாற்றத்திற்கு உட்படுவது தவிர்க்க இயலாத ஒரு காரணியாகும். 1950 களில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்துடன் ஈழ மக்களுக்குரிய இலக்கியம் தோற்றம் பெற்றது. 60களில் யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்பட்ட சாதிப்பாகுபாடும், 70களில் ஈழவிடுதலைப் போர் முளை கொண்டு வேர்விட்டுத் தனது எழுச்சியினை வெளிப்படுத்தமுனைய ஈழத்துக்கே உரிய தனித்துவமான உள்ளடக்கங்களைக் கொண்ட இலக்கிய வடிவங்கள் வெளிவரத் தொடங்கின.

இக்கால கட்டத்திலேயே பவானி ஆழ்வார்பிள்ளை எழுதிய சிறுகதைகள் உள்ளடக்கத்தில் பரிசோதனை மேற்கொண்டதில் முக்கியம் பெறுகிறது. இவரது 'மன்னிப்பாரா?' என்ற சிறுகதை கலைச்செல்வியில் பிரசுரமாகிய போது எதிர்விமர்சனங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது. கீழைத்தேய கலாசார சூழலில் இக்கதைக்கான எதிர்ப்பு ஆச்சரியப்படத் தக்கதொன்றல்ல.

பவானியுடன் தொடங்கிய பெண் எழுத்துக்கள் கோகிலா மகேந்திரன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் என பெண்கள் பல்வேறுபட்ட தளங்களுக்கும் முகம் கொடுத்து குந்தவை, தாமரைச் செல்வி செல்வி, சிவரமணி, தேவகௌரி, ஆழியாள், சுந்தரி, ஔவை, பெண்ணியா என பெண் எழுத்தாளர்களை உற்பவித்து 90களில் பெண்ணிய எழுத்து என்ற அடிப்படையைக் கூர்மைப்படுத்தியது.

ஈழத்து பெண் எழுத்தாளர்களுடைய எழுத்துக்களில் ஆண், பெண் உறவு முறைச் சிக்கல்களை மட்டுமல்லாமல் பேரினவாதத்திற்கு எதிரான குரலையும், யுத்தத்தினால் பெண்கள் பாலியல் வல்லுறவு போன்ற குரூரங்களுக்கு முகம் கொடுப்பது போன்ற எரியும் பிரச்சினைகள் பெண்கள் எழுத்துக்களாக விஸ்வரூபம் எடுத்தன. இதையே இன்று ஈழத்துப் பெண் எழுத்தாளர்களது தவிர்க்க வியலாத அனுபவ வார்ப்புகளாகி அதன் அவசியத்தை இலக்கிய ரீதியில் நிலைநிறுத்தி உள்ளது. இதன் ஒரு வெளிப்பாடாகவே பல்வேறுபட்ட திரைகளிலுமிருந்து அதிகாரத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சுந்தரியின் - கலாவின் ஆக்கங்கள் முக்கியமாகின்றன.

ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் அனேகமான பெண் எழுத்துக்கள், கலாசார பண்பாட்டம்சங்களை மீறாது மீண்டும் மீண்டும் மரபியல் கருத்தாக்கங்களைப் புதுப்பிப்பதாகவே உள்ளது. பவானி ஆழ்வார்பிள்ளையின் பின்னர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் சமூக ஒத்திசைவிலிருந்து மீறிய ஒரு எழுத்தாளராகத் தெரிகிறார். இவர்களுக்கும் அப்பால், புலம்பெயர் எழுத்துக்களை எக்ஸில், உயிர் நிழல் போன்ற புலம்பெயர் சஞ்சிகைகளில் எழுதிவரும் ஆழியாள், சுமதி ரூபன், வசந்திராஜா போன்றோரை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஆண் - பெண் உறவினையும் அவை குறித்த மரபு நிலைக் கருத்துக்களையும் ஆரோக்கியமான முறையில் இவர்கள் தகர்க்கின்றனர்.

புலம் பெயர்ந்த பெண் எழுத்தாளர்கள், ஒரு கலாசாரத்திலிருந்து இன்னொரு கலாசாரத்திற்குத் தாம் தூக்கி எறியப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட அனுபவமும், ஒரு பால் உறவு பற்றிய நேர்மையான உயிரோட்டமான உணர்ந்து கொள்ளலுமே இவர்களை மிகுந்த நியாயப்பாட்டுடன் கலை ஆக்கம் செய்ய உந்துதல் அளித்துள்ளது போல் தெரிகின்றது.

இலங்கையைப் பொறுத்தரையில் சிங்கள மொழி பேசும் பெண்நிலைவாதிகளும் பெண் எழுத்துக்களும் வெளிப்படுத்தும், நேர்மையான வெளிப்பாட்டு முறைமை தமிழ்பேசும் பெண்நிலை வாதிகளிடமும் பெண் எழுத்தாளர்களிடமும் மிக அருகியே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பெண் எழுத்தாளர்கள், இன்னமும் சமூக - கலாசாரம் கட்டமைத்த ஒழுகலாறுகளை மீறமுடியாதவர்களாக உள்ளனர். சமூகத்தில் உயர் அந்தஸ்துகளை வகிப்பதும், சராசரி ஆண்களுக்கு மனைவிகளாக இருப்பதன் காரணமாகவும் சமூகக் கட்டமைப்பினை உடைத்து உள்ளதை உள்ளபடி எழுதி எழுச்சி பெற முடியாதவர்களாக்கி உள்ளது. இந்த நூலிழையிலேயே சிவரமணி, கலா(சுந்தரி), ஆழியாள், பெண்ணியா என்போரின் எழுத்துக்கள் முக்கியமானவையாகி உள்ளன.

பெண்நிலைவாதம் என்பதன் அடிப்படை அம்சங்களையே நாம் மீண்டும், மீண்டும் கதைத்துக் கொண்டிருக்கிறோம். மேற்கிலே post feminism பற்றிப் பேசப்படுகிறது. - ஆணையும் பெண்ணையும் தனித்தனியே பார்த்தாயிற்று. இனி அதற்கும் அடுத்த கட்டத்திற்கு அவர்கள் நகர்ந்து விட்டார்கள்.

இலங்கையில் தமிழ்ப் பெண்களின் எழுத்தினை நாம் பெண்ணிய விமர்சனத்தின் வருகையின் பின்னர் யார் யார் பெண் எழுத்தாளர்கள்? அவர்கள் என்ன விடயத்தை எப்படி எழுதினார்கள்?என்பது பற்றி ஓரளவிற்குப் பார்த்திருக்கிறோம். ஆனால் நாம் இலக்கியங்களை இதுவரையில் பெண்ணியப் பார்வையில் (A feminist study of Literature)இன்னும் பார்க்கவில்லை.

இலங்கையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சித்திரலேகா மௌனகுருவால் Women writings பெண் எழுத்துக்கள் பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக இறுதி வருட மாணவர்கள் சிலர் பவானி ஆழ்வார்பிள்ளை, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் போன்றோரின் எழுத்துக்களைப் பெண்ணியப் பார்வையில் விமர்சனம் செய்து ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனராயினும், அவை இன்னும் நூல் வடிவத்தில் அச்சேறாததால் அது பற்றிய எந்தப் பார்வையும் அற்ற தேக்க நிலையே பெண் எழுத்துக்கள் சார்ந்து உள்ளன. அத்துடன் பெண் எழுத்தாளர்கள் பெண்ணிய எழுத்தாளர்கள் இடையே காணப்படும் ஏற்ற இறக்கம் பற்றியும் கோகிலாவிற்கும் பவானிக்கும் ராஜேஸ்வரிக்கும் இடையே ஏன் சுந்தரிக்கும் இடையிலான தாரதம்மியங்கள், இன்னும் எம்மவர்களால் பார்க்கப்படவில்லை. இன்றைய இலங்கை தமிழ் பேசும் பெண்நிலைவாத விமர்சகர் முன் எழுப்பப்பட்டுள்ள முக்கிய வினா இது.

பெண் எழுத்துக்கு உரிமை கோருபவர்கள் எமது சமூகத்தின் உறுப்பினராகவே இருந்து கொண்டே சமூகத்தின் போலியான கட்டுமானங்களை உடைத்தெறிய முன்வர வேண்டும். அதை விடுத்து மத, மொழி, பண்பாட்டுக் கூறுகள் அனைத்திலும் காணப்படும் மரபுசார் ஆணாதிக்க கருத்துகளினை மீளவும் புனரமைப்பவர்களாக இருக்கக் கூடாது.

ஈழத்தில் பெண்ணிய விமர்சனமானது 80களுக்குப் பின்னரே ஒரு முறைசார் விமர்சனமாக ஆரம்பிக்கிறது. சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பெண் நிலைப்பட்ட விமர்சனங்கள் 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் மகள், மாதர் மதி, மாலிகா போன்ற பத்திரிகைகளூடாக வெளிப்படுத்தப்பட்டன. ஆயினும் 80கள் வரை பண்டைய இலக்கியங்கள் குறித்தும், அகலிகை, சீதை, மாதவி, கண்ணகி போன்ற கதாபாத்திரங்களை இலக்கியம் மீதான மறுவாசிப்பாக பெண்நிலை நோக்கில் தனித்தும் பார்த்தனர். இதன் பின்னர் மொழி கலாசாரம் பண்பாடு என்பன மீதான ஒடுக்கு முறைகள் தொடர்ச்சியாக இடம் பெற்றதன் காரணமாக பெண்நிலைச் சிந்தனைகளும், பெண்நிலை நோக்கில் இலக்கியங்களை பார்க்கும் தன்மையும் விஸ்தாரம் பெற்று அதனடியாக பல விவாதங்கள் ஈழத்தில் இடம் பெற்றன. இதனடியாக இலங்கையில் கற்பழித்தல் என்ற சொல் நீக்கப்பட வேண்டும் என்றும் பாலியல் வல்லுறவு என்ற சொல்லின் ஏற்புடைமையும் வற்புறுத்தப்பட்டு இன்றைய தேசிய பத்திரிகைகளாயினும் சரி இலத்திரனியல் ஊடகங்கள், சஞ்சிகைகள் யாவற்றிலும் இச்சொல்லையே பயன்படுத்தும் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தியது. இதில் சரிநிகர் பத்திரிகையின் பங்கு முக்கியமானது.

காலத்திற்குக் காலம் இடம் பெற்ற பெண்ணியம் சார்ந்த விவாதங்களில் சித்திரலேகா மௌனகுரு, செல்வி திருச்சந்திரன் என்போரே குறிப்பிடும்படியான ஆரோக்கியமான கருத்துக்களை முன்வைத்து ஈழத்தில் பெண்ணியம் சார்ந்த கருத்தாடல்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தனர். செல்வி திருச்சந்திரன் பெண்ணியம் தொடர்பான நூல் ஆக்கங்களையும் நிவேதினி என்ற பெண்நிலைவாத சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து ஈழத்தில் பெண்நிலை வாதம் சார்ந்த பல்வேறுபட்ட பரிமாணங்களையும் வெளிக்கொணர்பவராகவும் இருக்கின்றமையையும் மறுக்க முடியாது.

அடுத்த பக்கத்தே சித்திரலேகா மௌனகுரு, முதன்முதல் பெண்நிலைக் கவிஞர்களை சொல்லாத சேதிகள் மூலம் உலகுக்கு அறிமுகப்படுத்தியதுடன் மேலும் செல்வி, சிவரமணி கவிதைத் தொகுப்பினையும் பின்னர் கனல், உயிர்வெளி போன்ற தொகுப்பினை வெளிக்கொணர்ந்ததன் மூலம் பெண் நிலைக் கவிஞர்களை அடையாளம் காட்டியதுடன் பெண்நிலைச் சிந்தனை பாரதி கட்டுரைகள் போன்ற பெண்நிலைக் கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளதுடன் இன்று மட்டக்களப்பில் இயங்கி வரும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினூடாக வெளிவரும் பெண் சஞ்சிகைக்கு மூலகாரணியாகவும் உள்ளார்.

இலங்கையின் பெண்நிலைவாதம் சார்ந்த நீண்ட கால சர்ச்சைகளுக்கு இவர்கள் இருவருமே தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகின்றமையையும் நாம் பார்க்கலாம்.

தொண்ணூறுகளின் பின்னர் பெண் நிலைவாதம் சார்ந்த சில சர்ச்சைகள் சரிநிகரில் வெளிவரத் தொடங்கியது. அதில் முக்கியமாக ஒரு பாலுறவு தொடர்பான கருத்தாடல்கள், ராதிகா குமாரசாமியின் பெண் போராளிகள் பற்றிய தொடர் விவாதம், கோணேஸ்வரி என்ற கவிதை தொடர்பான விவாதம், கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியலாமா? என்ற சரவணன், தேவகௌரி, சூரியகுமாரி எழுதிய ஒரு பால் உறவு குறித்த திரைப்பட விமர்சன ஆக்கத்திற்கு எதிரான செல்வி திருச்சந்திரனின் எதிர்விமர்சனங்கள் என்பன ஈழத்தில் பெண்நிலை வாதம் சார்ந்த ஆரோக்கியமான புரிதல்களை முனைப்புடன் வெளிப்படுத்தின என்று கூறலாம்.

ஈழத்தில் இடம்பெற்ற காத்திரமான பெண்ணிய விமர்சனங்கள் அனைத்துமே சமூக அரசியல் கலாசார பின்புலத்தில் கூர்மையாக அவதானிக்கப்பட வேண்டிய அம்சங்கள். இவை நிராகரிக்கப்படக்கூடாது என்ற வாதத்தினை திறந்த மனதுடன் முன்வைத்தன. வெறுமனே உணர்வு நிலைப்பட்ட கோஷங்களை முன்னிலைப்படுத்தாது பெண்ணியம் குறித்து தரிசனம் மிக்க பார்வையை பெண்நிலைவாதிகள் கொண்டிருக்க வேண்டும் என்பதை சரிநிகரினூடாக அழுத்தம் திருத்தமாக முன்வைத்துள்ளனர் அதன் ஆசிரியர்கள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எரிஹ் ஃப்றீட (Erich Fried)

ஒஸ்றியக் கவிஞர், புலம்பெயர்ந்து வாழ்பவர்
ஆங்கில வழித்
தமிழ்ப்படுத்தல : சி.சிவசேகரம்

## பலவீனமாதல்

*"அவர்கள் மீண்டும் வலிமையடைகின்றனர்"*
*"யார்? "*
*"அவர்கள்"*

*"அவர்கள் ஏதாக இருக்கலாகும்?"*
*"அவர்கள் அவ்வாறு இருக்கலாகாது.*
*ஆயினும் இருக்கிறார்கள்"*

*"யாரிலும் வலியோராக?"*
*"உண்ணிலும். விரைவிற், சிலவேளை, பலரினும் "*

*"இதையெல்லாம் ஏன் சொல்கிறாய்?"*
*"ஏனென்றால், என்னால் இன்னமும் சொல்ல இயலும் என்பதால்"*

*"இது உன்னைத் தொந்தரவில் மாட்டிவிடாதா?"*
*"ஓம். ஏனெனில் அவர்கள் வலிமையடைகின்றனர் "*

*"எதனால் இவ்வளவு நிச்சயமாயிருக்கிறாய்?"*
*"நான் தொந்தரவில் மாட்டிவிடலாம் என்ற உன்சொற்களால் "*

---

# யாழ் பல்கலைக் கழகத்தில் நடந்த "மூன்றாவது மனிதன்" சிற்றிதழ் தொடர்பான. மதிப்பீடும் கலந்துரையாடலும் நூல் காட்சியும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில் கடந்த ஜூன் மாதம் 14,15,16,17ம் திகதிகளில் 'மூன்றாவது மனிதன்' பதிப்பக, மிலேனியம் புக் லாண்ட் நிறுவனத்தின் அனுசரனையுடன் மிகப்பெரும் புத்தகக் காட்சியும் விற்பனையும் நடைபெற்றது. பெருந்தொகையான இலக்கிய வாதிகள், ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவ மாணவிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வு சந்தோசமும் மன நிறைவையும் தந்த நிகழ்வாக நடந்து முடிந்தது.





1990 க்குப் பின்னான வடக்கின் யுத்த நிலைமை காரணமாக தமிழின் மிகச் சிறந்த நூல்கள், இலக்கிய ஆர்வலர்களுக்கு, பல்கலைக்கழக மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் கிடைப்பது மிக அரிதாகவே இருந்தது. இந்தக் குறைபாட்டினை நிவர்த்திக்கும் வகையில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான அகிலன், சனாதனன், அருந்தாகரன், ஆகியோரின் முயற்சியினால் இக்கண்காட்சி நடைபெற்றது. இம்முயற்சிக்கு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பாலசுந்தரப் பிள்ளை, தமிழ்த்துறைத் தலைவர் சிவலிங்கராசா ஆகியோர் பூரண உறுதுணை வழங்கினர்.



இறுதி நாள் நிகழ்வாக 'மூன்றாவது மனிதன்' சிற்றிதழ் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலுக்கு யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் சிவலிங்கராசா அவர்கள் தலைமை வகித்தார். இக் கலந்துரையாடலில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளரான அருந்தாகரன், அலை ஆசிரியர் யேசுராசா, எழுத்தாளர் சட்டநாதன் ஆகியோர் சிற்றிதழ் தொடர்பான மதிப்பீடுகளை முன்வைத்தனர்.



கலந்துரையாடலின்போது பேராசிரியர் சண்முகதாஸ், தாயகம் ஆசிரியர் தணிகாசலம் மற்றும் பல எழுத்தாளர்களும், இலக்கிய ஆர்வலர்களும் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். பதில் உரையை 'மூன்றாவது மனிதன்' ஆசிரியர் எம். பௌஸர் ஆற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் 'மூன்றாவது மனிதன்' ஒழுங்காகக் கிடைத்து வருகிறது. மிக்க நன்றி. யான் பிரான்சின் பாரிஸ் நகரிலிருந்து 770 கி.மீற்றர் தூரத்திலுள்ள துலாஸ் நகரத்தில் வசிக்கிறேன். அடிக்கடி பாரிஸ் சென்றுவந்தபோதும், புத்தகசாலையில் 'மூன்றாவது மனிதன்' ஒரு சில இதழ்களே முன்னர் வாங்க முடிந்தது. தற்போது தாங்கள் நேரடியாக எனக்கு அனுப்பிவைப்பதனால் மகிழ்ச்சி யடைகிறேன்.

தரமான ஒரு சஞ்சிகையை, உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பெறுமானம் மிக்கதாக, கணிப்புக்குரியதாக அக்கறை செலுத்தி வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது. சமகாலப் பிரச்சினைகளின் வெளிப்பாடுகளோடு, புதியவர்களின் பாய்ச்சல்களுக்கும் இடமளித்து நவயுகத்தை நோக்கிய பதிவுகளை 'மூன்றாவது மனிதன்' செய்கிறது. தொடர்ந்தும் அந்த வழியில் பயணிக்கும் என நம்புகிறேன்.

நேர்காணல், சிறுகதை, கவிதை கட்டுரை மட்டுமல்ல சில கடிதங்களும் நல்ல பயனுள்ளவையாக இருக்கின்றன. அவையும் இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுவிடுகின்றன.

புலம்பெயர்ந்தோர் மத்தியிலும் 'மூன்றாவது மனிதன்' கணிப்புக்குரியதாகிவிட்டதை மறுக்கமுடியாது.

ஈழத்தில் எழுபதுகளில் உயிர்மூச்சுடன் எழுதிவந்த பலரின் எழுத்துக்களைப் பார்த்துப் பல காலமாகிவிட்டது. இவர்களின் அண்மைக்கால எழுத்துக்களை பிரசுரித்துதவுக.

ஐரோப்பிய கீழைத்தேச
தொடர்பு மையம்,
துலாஸ், பிரான்ஸ

■

மூன்றாவது மனிதன் இதழ் 14 கிடைக்கப்பெற்றேன். ஒரு தனி மனித ஆளுமையின் உழைப்பாக இவ்விதழ் படைப்புகளால், புதிய தளங்களை நோக்கி... பரிணாமம் பெற்றிருந்தது.

'பிணக்குகளின் வேர்கள்' ஷகீப்பின் மொழிபெயர்ப்புச் செறிவில் கவனத்துக்குரிய படைப்பாக வெளிப்பட்டிருந்தது. க.சண்முகலிங்கத்துடனான செவ்வி, சிறுகதைகள், கட்டுரை, மொழிபெயர்ப்பு கவிதைகள், கவிதை, நூல் விமர்சனம் அனைத்து ஆக்கங்களும் தேர்ந்த சிற்பியின் உளியில் செதுக்கப்பட்டு, சிற்பமாக உயிர்பெற்றிருந்தது.

"தமிழக சிற்றிதழ் சஞ்சிகைகளை விட, மூன்றாவது மனிதன் தனித்துவமாக மிளிர்கிறது" இந்தியா டுடே, இலக்கிய மலர் 2002ல் ரவிக்குமாரின் கருத்து முக்கியமானது.

"ஈழத்திலிருந்து வெளிவரும் மூன்றாவது மனிதன் என்ற சிற்றிதழை நான் தனித்தே பார்க்கிறேன், ஏனெனில் தமிழகத்திலிருந்து வெளிவரும் சிற்றிதழ்களிலிருந்து வேறுபட்டு, பொறுப்பும் கடப்பாடும் கொண்ட தீவிரமான ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகிறது'' என்கிறார் ரவிக்குமார். உங்களது விடாமுயற்சி, தன்னம்பிக்கைக்கு கிடைத்த வெற்றியாகும் இப்பாராட்டுதல்.

அக்ரம்,
உக்குவளை

■

'மனிதம்' டயரில் போட்டு எரித்த மணம் இன்னமும் எனது நாசித்துவாரங்களில் அப்பிக்கிடக்கிறது. கச்சான் காற்றுக் கூட கருகிய வாசம். எங்கள் வாழ்வும் இருப்பும் மிகப்பெரிய கொக்கியாகி அந்தரத்தில் தூக்குப் போடுகிறது.

இத்துணை அவலங்களுக்கு மத்தியிலும் உங்கள் மூன்றாவது மனிதனைப் படித்து முடித்தேன். உங்கள் பணி காத்திரமானது சங்கை மிக்கது.

நண்பர் சண்முகலிங்கத்தின் நேர்காணல் சத்யமானது. உங்கள் நேர்காணலில் அவரது தெரிவு முக்கியமானது என்றே கருதுகிறேன். ஈழத்து நவீன கதை இலக்கியம் பற்றிய அவர் கருத்தில் நானும் உடன்பாடு கொண்டவன். நேர்த்தியும் ஒழுங்குமிக்க நிர்வாகி. வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அவருக்குரிய பகைப்புலமாக அமையுமோ காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

இரவல் தலைமை பற்றிய அவரின் கூற்று இந்தத் தேசத்துப் புரட்சியாளர்களுக்கெல்லாம் எப்படிப் பொருந்திப் போகிறது. அதுவும் இன்றைய வடக்கு கிழக்கு நாள்களில்.... நவீன கதை சொல்லிகளாக நமக்கு 'அம்ரிதா ஏயெம்'மும் திசேராவும் தேறியிருக்கிறார்கள். திசேராவின் கதை பற்றி நானும் பேராசிரியர் யோகராசாவும் கதைத்துக் கொட்டினோம் மெய்தான்.

'ஒரு கடல் நீரூற்றி' கவிதை ஒரு கன்வேஸ் ஓவியம், இந்தக் கவிதையில் வரும் காட்சியும் படிமங்களும் மனத்தில் புரண்டு புரண்டு விரிந்திற்று. அடிவானத்திற் கப்பாலும் நமது மனசை அழைத்துச் செல்கிறது. பரவசப்படுத்துகிறது.

எம்.கே.ஷகீபின் வாசிப்பின் வேகம் என்னைப் பிரமிப்பிலாழ்த்துகிறது. 'நிகரி'யில் வந்த அவருடைய நீண்ட நீண்ட கடிதங்களில் எவ்வளவு விசயங்கள் தெரியத் தெரிய தெரியாமை தெரிய வரும் என்பார்கள்.

அப்படி யென்றால் தேடத் தேட....? ஔவையின் எல்லை கடத்தல் பற்றிய சிவசேகரத்தின் பார்வையும் எல்லை கடந்து விட்டதோ? என எண்ணத் தோன்றுகிறது.

எஸ்.எல்.எம்.ஹனீபா,
ஓட்டமாவடி

■


'பிணக்குகளின் வேர்கள்' படித்ததும் அப்படியே அடித்துப் போட்டுவிட்ட உணர்வையே ஏற்படுத்திற்று. யுத்தமும், வன்முறையும் பொது விதிகளாக, வியாக்கியானங்களாக உலகுக்கு இருக்க தத்தம் வல்லமைகளுக்கு ஏற்ப அவற்றை நாடுகள் குறிப்பெடுத்துக் கொண்டனவா?

வாழக் கட்டிய கூடுகளில் சிறைப்பட்டு போவது பெண்ணினத்திற்கு எப்போதும் விதிக்கப்பட்டதல்ல. சல்மாவின் கவிதைகளை அனாரின் கவிதைகள் நினைவூட்டின. 'பஹீமா ஜஹான்' ஆற்றலோடு எழுதுகிறார்.

உமாவரதராஜனின் 'இறுதி யன்னலுமா' சாத்தியாற்று? அவரது எழுத்துக்கள் வேண்டும். 'ஒரு கடல் நீரூற்றி' கவிதை படித்தபின், எனக்கு நம்பிக்கை வந்தது.

த. உருத்திரா
மண்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்காலத்தில் உங்களினால் நடாத்தப்படவிருக்கும் இலக்கியச் சந்திப்பில் வன்னிப் படைப்பாளிகள் பங்கு பற்றி தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். எழுத்தாளர்கள் கருத்துப் பரிமாற்றல் மட்டுமன்றி வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களையும் பங்கு பற்றச் செய்யும் வகையில் தங்கள் ஒன்று கூடல் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இதழ் 14ல் திருமாவளவன் எழுதிய கவிதை மனதினை தொட்டுக் கொண்டது. புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் தொழில் செய்யும் நம் நாட்டு சக நண்பர்கள் எவ்வாறு கஷ்டப்படுகிறார்கள் என்பதை எடுத்துக் கூறிநிற்கின்றார். பிள்ளைகள் வெளிநாடு, அண்ணன் வெளிநாடு என கூறிக் கொண்டு ஆடம்பர வாழ்க்கையில் பணத்தினை எவ்வாறு செலவு செய்வது எனத் தெரியாமல் சிறு கொண்டாட்டங்களையும் ஆடம்பரமாக ஹோட்டல்களில் கொண்டாடும் எம் சமுதாயம் எப்படித்தான் வெளிநாட்டில் பிள்ளைகள் அண்ணர்மார், தம்பிமார் கஷ்டப்படுவதை புரிந்து கொள்வார்கள். இங்கு குடும்பங்களையும் வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்களையும் நினைக்கும்போது வேதனை.

'இரவல் தலைமையில் அறிவுப் புரட்சி எப்படி சாத்தியமாகும்' க. சண்முகலிங்கத்தின் நேர்காணல் அரிய பல கருத்துக்களை சமுதாயத்திற்கு கூறி நின்கின்றது. கல்வித்துறையில் ஆங்கிலக் கல்வி என்பது முக்கியமானது. பல அறிவியல் சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள் எல்லாம் ஆங்கில மொழியிலேயே அமைந்துள்ளது. அவை வாசிக்கப்பட்டு அறியப்படவேண்டுமாயின் ஆங்கிலம் அவசியம். இல்லையேல் அவ்வாறான சஞ்சிகைகள் நூல்கள் என்பன நமது மொழிக்கு மாற்றப்பட வேண்டும். இதில் எது சாத்தியமோ அதற்கேற்ப எமது கல்வி முறைகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பது எனது ஆதங்கம்.

கே. பாஸ்கரன்
கல்கிசை

■


ஒரு சிற்றிதழைப் பொறுத்தவரை இதழ் - 14 என்பது சாதனைக்குரிய புறக்கணிப்பிற்குட்படுத்த முடியாத விடயமாகும். மிகமுக்கியமானது. தேடல்மிகுந்த, பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடுகின்ற, வித்தியாசமான படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் அருந்தலான ஒரு சிற்றிதழான மூன்றாவது மனிதனின் பங்கு அளவீட்டிற்குட்படுத்த முடியாதது.

குந்தவையின் 'பயன்படல்' சிறந்த கரு. ஆனால் அங்கங்கே கொஞ்சம் சிதைவுகள். அ.ரவியின் 'பாலைநிலம்' கதையோட்டமும், கருவும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தியாகசேகரன் எனும் திசேராவின் "மறைந்துபோன உருக்கள்" சிறப்பானதொரு ஆளுமைமிக்க பரிசோதனை முயற்சி. எனினும் பாவிக்கப்பட்ட தொன்மங்களில் சிறிது தளர்வு அல்லது நடுக்கம் தெரிகிறது.

சிவசேகரத்தின் "ஒன்றைப்பற்றி மட்டுமே சொல்வது தொடர்பாக" கவிதை குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதொன்று. அதற்கெனவரையப்பட்ட ஓவியமும் கவன ஈர்ப்பைக் கொண்டது. அடுத்து திருமாவளவனின் 'செக்குமாடு', பஹீமா ஜஹானின் 'ஒரு கடல் நீரூற்றி.....' என்பன உணர்வுத் தொற்றலை ஏற்படுத்திவிடுகின்றன.

இரா. தர்மராஜா, கோ.கைலாசநாதன் எம்.கே.எம்.ஷகீப், ஜெய்சங்கர் ஆகியோரது கட்டுரைகள் கவனிப்புக்குரியனவாயுள்ளன. க.சண்முகலிங்கத்துடனான நேர்காணல் வித்தியாசமான பார்வையும், பரிமாணமும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

'கரவெட்டி' மின்சாரவெளிச்சம் வந்துசேராத குக்கிராமம் போலவே இருக்கிறது. இங்கே வெகுஜன இதழ்கள் எல்லாமே விற்பனைக்குண்டு. ஆனால் 'மூன்றாவது மனிதன்' முதலாக எந்தச் சிற்றிதழ்களும் வருவதில்லை.



என்னைப் பொறுத்தவரை கரவெட்டியில் நான் ஒருவன் மட்டுமே 'மூன்றாவது மனிதனை' வாசிப்பவன் என்பதை எந்தவிதச் சந்தேகமுமின்றி உறுதிப்படுத்தமுடியும். இங்கே தேடல் மிக்க வாசகர்கள் இருக்கவே செய்கிறார்கள். எனவே இங்கேயும் 'மூன்றாவது மனிதனை' தேடல்மிக்க வாசகர்கள் பெற்றுக்கொள்ள நீங்கள் ஆவன செய்ய வேண்டும். நான் கூட அண்மைக்காலங்களிலேயே மூன்றாவது மனிதனை வாசிக்க ஆரம்பித்தேன். அந்த அறிமுகம் கூட குப்பிழான் ஐ. சண்முகம், அ.யேசுராசா ஆகியோரால்தான் ஏற்பட்டது. இவ்விதம் 'மூன்றாவது மனிதன்' எனக்கு அறிமுகமாயிருக்காவிடின் நான் தேடலிலும் வாசிப்பிலும் அதிகம் பின்தங்கியிருப்பேன்.

1980களில் 'அலை'யும் 'திசை'யும் எவ்விதம் வித்தியாசமான தேடல் மிக்க படைப்பாளிகளான உமாவரதராஜன், ரஞ்சகுமார் போன்றோரை வெளிக்கொணர்ந்தனவோ அதேபோல் 'மூன்றாவது மனிதனும்' அம்ரிதா ஏயெம், திசேரா போன்ற படைப்பாளிகளை வெளிக்கொணர்ந்துள்ளமை என்போன்ற வர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாய் உள்ளது. இத்தகைய படைப்பாளிகளின் வெளிக்கொணர்வுகள் இடைவெளியின்றித் தொடரல் வேண்டும். அத்தோடு இவ் வித்தியாசமான படைப்பாளிகளுக்கு நிலையான களத்தினை வழங்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் 'மூன்றாவது மனிதன்' பேதங்கள், தளைகளைக் கடந்தது என்பதை அது நிரூபித்துள்ளது.

இராகவன்
கரவெட்டி

MBL Prints

(விஷேடமாக புத்தகங்கள் சஞ்சிகை... ...ன்றனவற்றுக்கு மாத்திரம்)

Galle Road, Colombo ... Sri Lanka
... 589606 Fax: 58946... Mobile: 077 389127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது புதிய வெளியீடு

- செப்டம்பர் 11 ஒரு வாசிப்பு
  தமிழில்: கொன்ஸ்ரன்ரைன்
- ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு
  ஈரமற்ற மழை
  செழியன் கவிதைகள்

## பதிப்பக வெளியீடுகள்



எல்லை கடத்தல்
(கவிதைத் தொகுதி)
ஔவை
ஒக்டோபர் 2000
விலை ரூபா 100.00

சிக்கல்களும், முரண்களும் புதிதாகத் தலைதூக்கும் காலத்தில், நம்மை வெளிப்படுத்த புதிதாக மொழிகளைக் கண்டுபிடித்துள்ளோமா? நீ யாழ்மண்ணை விட்டு இடுப்பில் குழந்தையோடு பெயர்ந்த நிகழ்வைப் பலகாலம் கழித்து கவிதையாக்கியதாகக் கூறினாய். புளியமரம் பூதமாகவும், வானம் கோரப் பற்களாகவும், மண் புதை குழியாகவும்...



ஈழத்து இலக்கியத் தடம்
பார்வையும் விமர்சனங்களும்

கார்த்திகேசு சிவத்தம்பி
நவம்பர் 2000
விலை ரூபா 210.00

இத் தொகுதியிலுள்ள கட்டுரைகள் பலவற்றில் தனிநிலையிலும், தொகுநிலையிலும் 60,70களின் முற்போக்கு இலக்கியச் செல்நெறி மீள நோக்கப்பெறுகிறது. அதாவது, மார்க்சியச் சார்புடையதாகக் கிளம்பிய அந்த இலக்கியம், தர்க்கரீதியான வளர்ச்சியான மார்க்சியத்திற்கு வரவில்லை என்பது அழுத்தமாகப் பதிவு செய்யப்படுகிறது.



இலங்கை
அரசியலில் பெண்களும்,
பெண்களின் அரசியலும்

என். சரவணன்
ஒக்டோபர் 2001
விலை ரூபா 230.00

ஒடுக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமூக சக்திகளில் முக்கியமான சக்தியாக பெண்கள் காணப்படுகின்றனர். இங்கு ஆணாதிக்கம் அதிகாரம் படைத்த நிலையிலும், பெண்கள் அவ்வதிகாரத்திற்கு வெளியில் இருந்துகொண்டு பலியாகும் சக்தியாக உள்ளனர். இலங்கை அனுபவத்தைக் கொண்டு இலங்கையின் அரசியலில் பெண்களும், பெண்களது அரசியலும் என்கிற விடயத்தை ஆராய முற்பட்டுள்ளேன்.



இலங்கையில் இனக்குழும அரசியல்

சி.அ.யோதிலிங்கம்
ஒக்டோபர் 2000
விலை ரூபா 100.00

இலங்கைத் தமிழரின் அரசியற் பிரச்சினைகள் முனைப்புக் கொண்டுள்ள இக்காலத்தில் அவைபற்றிய பொது வாசிப்பு நிலைப்பட்ட முனைப்பு இல்லையென்றே கூறவேண்டும். இந்நிலை சௌக்கியமான அரசியல் வாதவிவாதத்திற்கும் தீர்வுகளை நோக்கிய செய்பாடுகளுக்கும் உகந்தது அல்ல!



பலஸ்தீனக் கவிதைகள்
(விரிவாக்கப்பட்ட இரண்டாவது பதிப்பு)
மொழிபெயர்ப்பு: எம்.ஏ.நுஃமான்
நவம்பர். 2000
விலை ரூபா 200.00

ஈழத்திலும் இதுதான் வரலாறாகி விடுமோ என்ற எதார்த்தம் மனிதாபிமானிகளை அச்சுறுத்துகிறது. ஆனாலும், ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக போராடுவதற்கான நியாயம் ஈழத்து மண்ணில் நாளுக்குநாள் அதிகரித்தே வருகிறது. அனுபவச் சூழலில் அதிகம் வேறுபாடு உணரப்படாததை நமது இலக்கியச் சூழலும் பதிவுசெய்து வைத்திருக்கிறது



ஊஞ்சல் ஆடுவோம்
(சிறுவர்களுக்கான கவிதைகள்)

மு.பொன்னம்பலம்
ஜூன். 2001
விலை ரூபா 100.00


சிறுவர்களுக்கு நாம் கொடுப்பது அவர்களுக்குப் பயன் தரக்கூடியதாகவும், அவர்க ளுக்குரிய அறிவின் தளங்களில் விசாரணை அலைகளை எழுப்பி, இன்னும் அவர்கள் முதிரா உள்ளங்களில் மண்டிக் கிடக்கும் கலை உணர்வு களை கிளர்ந்தெழவைப்பவையாகவும் இருக்க வேண்டும்.



குழந்தைகளுக்கும்
உங்களுக்குமிடையே

மொழிபெயர்ப்பு:
எஸ்.கே.விக்னேஸ்வரன்
ஜூன். 2001- விலை ரூபா 200.00

சிறுவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய உரிமைகள், சிந்தனைகள் பற்றிய பெரும் புரிதல்களும், மாற்றங்களும் ஏற்பட்டுவருகின்றன. அவற்றை எமது சமூகப் பரப்பிலும், அனுபவங் களிலும் நாம் இணைத்துக்கொள்ள வேண்டியி ருக்கிறது. எமது சமூகத்தில் குழந்தைகளதும், சிறுவர்களதும் நிலை கடந்த 20ஆண்டுகளில் மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது.



ஈழத்து இலக்கியத்தின் சமகால
ஆளுமைகளும் பதிவுகளும்
(மூன்றாவது மனிதன் நேர்காணல்கள்)


ஜூன். 2001
விலை ரூபா 220.00

ஈழத்தில் இதுவரை வெளியான சிற்றிதழ்களில் விரிவான நேர்காணல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நேர்காணல்களைத் தொகுத்து வாசிக்கும்போது ஈழத்து இலக்கிய உலகில் 1960க்குப் பின் நிகழ்ந்து வருகின்ற இலக் கியம், அரசியல், தத்துவ, கலைக் கோட்பாடுகள் சார்ந்த பல்வேறுபட்ட ஆளுமைகளின் சிந்தனைப் போக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.




தூவானம்
(பத்தி எழுத்துக்களின் தொகுப்பு)
அ.யேசுராசா
ஜூன். 2001
விலை ரூபா 120.00

தகவல்களைத் தருவதும், சுவாரசியத்தை ஊட்டுவதும்தான் பத்தி எழுத்தின் நோக்கங்கள் என்றில்லை. நுட்பமான இரசனையும், கூரிய நோக்குங்கொண்ட ஒருவர்- கலை, இலக்கியப் படைப்புகள் பற்றிய தனது மனப் பதிவுகளை எழுதும்போது தரம், தரமின்மை என்ற பக்கங்களில் ஒளி பாய்ச்சப்படுகிறது.



விலங்குகள் தொகுதி ஒன்று
அல்லது விலங்கு நடத்தைகள்
(சிறுகதைத் தொகுப்பு)
அம்ரிதா ஏயெம்
விலை 160.00

பாரம்பரியக் கதைசொல்லும் பாணி பொதுவாக எல்லாக் கதைகளிலுமே மீறப்பட்டுள்ளது. நேர்கோட்டுச் சட்டகத்துள் ஒரு கதையும் நகரவில்லை. கால, இட எல்லைகளை இவரது கதைகள் தாண்டிச் செல்கின்றன. ஆயினும், நான் ஏற்கனவே குறிப்பிட்ட இரண்டொரு கதைகளைத் தவிர, எல்லாக் கதைகளுமே வாசக ஈர்ப்பு உடையவைதாம்.



பிரபஞ்சம் முதல் பூமி வரை
ஏ.எல்.ஷிஹாறா
விலை 160.00

இலங்கையைப் பொறுத்தவரை விஞ்ஞான துறை சார்ந்த உயர்கல்வி பெற விரும்பும் மாணவர் தொகை அதிகரித்துக் காணப்படும் இக்கால கட்டத்தில் கல்வி கற்கும் சுதேச மொழிகளில் ஒன்றான தமிழ்மொழியில் விடயங்களை அறிந்து கொள்வதற்குத்தேவையான நூல்கள், அதுவும் விஞ்ஞானத் துறை சார்ந்த நூல்கள், மிகவும் பற்றாக்குறையாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Millennium Book Land

ஆளுமைமிக்க மனித சமூகத்தின்
மிகப் பெரும் பலம்
புத்தகங்களும் வாசிப்புமே!

Tel: 01-589606
Fax: 01-589460
E-mail: 3man@sltnet.lk

465/1, Galle Road,
Colombo-03


Cover Photo by: S. Sivatas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org